# பாதி உறவு

பார்த்திபன்






வெளியீடு - 1




வெளியீடு - 2

வெளியீடு : 4
ஜூலை. 1987

# பாதி உறவு

(குறு நாவல்)

- பார்த்திபன்

நன்றி
அட்டை ஓவியம்: ரமணி
வெளியீடு: தென்னாசிய நிறுவனம்

PUBLICATION , 4
JULY, 1987.

'PATHI URAVU'
(NOVELET)
BY PARTHIPAN

THANK FOR

COVER DESIGN BY RAMANI
PUBLISH BY SÜD ASIEN BÜRO.

# என்னுடைய பக்கம்

வணக்கம்.

நமது நான்காவது சந்திப்பு. சந்திப்புகள் வெறுமனே தொடர்ந்தால் மட்டும் போதாது. படித்த எழுத்துகளின் தாக்கங்கள் செய்கைகளில் பிரதிபலிக்கையில்தான் இந்த சந்திப்புகளுக்கு அர்த்தம் உண்டாகிறது.

உங்கள் விமர்சனங்களை உங்களுடன் வைத்திருக்காமலும், அருத்தவருடன் பகிர்ந்து கொள்வதுடன் நிறுத்திக் கொள்ளாமலும் தாராளமாக எழுதி அனுப்பினால் தவறுகள் திருத்தப்படவும், புதிய கருத்துகள் பிரசவமாகவும் வழி எற்படும்.

குழந்தைகளுடன் அவர்களின் மனங்களும் படிப்படியாக அனுபவங்களினாலும், படிப்பினாலும்தான் வளர்ச்சியடைகின்றன. திடீரென அவர்கள் பெரியவர்களாகிவிடுவதில்லை. குழந்தைப் பருவத்தில் நடக்கும் நிகழ்ச்சிகள்தான் அதன் எதிர்காலத்தை நிர்ணயிக்கின்றன. குழந்தைகளை பெற்றோர்களுடன் சூழ்நிலைகளும் சேர்ந்தே வளர்க்கின்றன. தமது பிள்ளைகள் தீயவர்களாகவே வளர வேண்டும் என்று எந்தப் பெற்றோரும் திட்டம் போட்டு வளர்க்காவிடினும் தங்களது கவனக்குறைவால் பிள்ளைகளை அழிவுப் பாதையில் செல்ல அனுமதித்து விடுகிறார்கள். இதைத் தடுக்க முடியாதா? முடியும். மனம் இருந்தால் எதுவுமே முடியும். தமது பிள்ளைகளின் நலனில் அக்கறையுள்ள பெற்றோர்கள் தமது சொந்த விருப்பு, வெறுப்புகளை தியாகம் செய்து விட வேண்டும். சொந்த ஆசாபாசங்களுக்கு முதலிடம் கொடுப்பவர்கள் பிள்ளை பெற்றுக் கொள்ளும் நினைப்பை கட்டாயமாக விட்டு விடவேண்டும். அவரவர் எடுக்கும் தீர்மானங்களைச் செயற்படுத்த தகுந்த சாதனங்கள் தாராளமாகவே கிடைக்கின்றன. தம்பதிகள் ஆனவுடன் கட்டிலைப்பற்றி மட்டும் நினைக்காமல் தொட்டிலையும் சிந்தித்தால் நல்ல சமுதாயம் நிச்சயம் உருவாகும்.

தொடர்ந்தும் சந்திப்போம்.

– பார்த்திபன்.
07.87

தொடர்பு முகவரி–
SÜD ASIEN BÜRO
Kiefernstr 45
5600 Wuppertal 2
West Germany

# பாதி உறவு

## 1

கார்கள், மோட்டார்சைக்கிள்கள், லொறிகள் மத்தியில் அந்தக் குழந்தை தைரியமாக இருந்தது.

வாகனங்கள் அசையாமல் நின்றன.

குழந்தையும் நீண்ட நேரமாக அப்படியே இருந்தது.

கடைசியில் அதற்கு கோபம் வந்திருக்க வேண்டும். கார் ஒன்றை தூக்கி எறிந்தது.

கொஞ்சத் தூரம் தள்ளி சுவருடன் மோதிய கார் 'டங்'கென்று கீழே விழுந்தது.

குழந்தையின் கோபத்தை கவனிக்கும் நிலையில் அதனுடைய அப்பாவும், அம்மாவும் இருக்கவில்லை.

ஏனென்றால் அவர்களும் அதே நேரம் கோபத்திலிருந்தார்கள்.

"ஏன் சமைக்கேல?" – அப்பா.
"கறி சாமான்கள் ஒண்டும் இல்ல" – அம்மா.
"இல்லாட்டி வாங்கிறதுதானே?"
"ஏன் நீங்க கேட்டா கடைக்காரன் தரமாட்டானோ"
"இல்லையெண்டு முதலே சொல்லியிருந்தா நான் வாங்கியந்திருப்பேன்"
"எல்லாம் நான்தான் பாத்து சொல்ல வேணுமாக்கும். உங்களுக்கு கண்ணில்லையே?"

அவன் ஏற்கனவே நிறைந்த கோபத்திலிருக்க–

அவள் அதை கிளற–

அவன் கை அவள் கன்னத்தில் பலமாக ஒருமுறை பதிந்து மீண்டது.

அவள் அழுதபடி அறைக்குள் ஓடினாள்.

அவன் கத்தியபடியே வெளியே இறங்கிப் போனான்.

லொறி ஒன்றின் கீழாக ஓடிய பூச்சி ஒன்றை குழந்

தை கவனித்து விட்டது.

சிறிது தூரம் பூச்சியை பின் தவழ்ந்து சென்றது.

பூச்சியை நன்றாக நெருங்கிய பின் அதை கையால் நசித்தது. பிறகு குனிந்து நன்றாக பார்த்தது.

தனக்குள்ளாக ஏதோ சொல்லிக் கொண்ட பின் பூச்சியைக் கையால் எடுத்து வாய்க்குள் கொண்டு சென்றது.

குழந்தையை யாருமே கவனிக்கவில்லை.

## 2

"பம்பலப்பிட்டிய, வெள்ளவத்தை, கல்கிசை, ரத்மலான, மொறட்டுவ, பாணந்துற...."

பல குரல்கள் பல சுருதிகளில் அழைப்பு விடுத்தன.

ஒரே ஆரவாரம்.

முட்டைகளிலிருந்து கொட்டியது போல் சனங்கள் தெரு முழுவதும் பரவியிருந்தார்கள்.

ஆட்களின் எண்ணிக்கையுடன் சமமாவதற்கு வாகனங்கள் முயற்சி செய்து கொண்டிருந்தன.

பாதை ஓரங்களில் பதுங்கியிருந்த அழுக்குகள் தலைநகரின் நாகரிகத்தை பார்த்து சிரித்துக் கொண்டிருந்தன.

பாதையின் இரு பக்கங்களிலும் கடைகள் வரிசையாக அடுக்கப்பட்டிருந்தன.

ரவீந்திரன் பிரயாணிகள் கணிசமானளவு குறைவாயிருந்த மினி பஸ்ஸில் ஏறிக் குனிந்து கொண்டான்.

மிகவும் மெதுவாக ஊர்ந்து, ஆட்களை வலிந்து அழைத்து, நிறைத்துக் கொண்ட பின்தான் சாரதிக்கு திருப்தி ஏற்பட்டது.

கோட்டை புகையிரத நிலையத்தை ஒருமுறை வலம் வந்த பின் மினிபஸ் தனது வழக்கமான பாதையில் நழுவியது.

ரவீந்திரன் வழக்கமாக வேலை முடிந்து போகும் நேரம் இதுதான் என்றாலும் இன்று மட்டும் வழக்கத்தை விட ஆவல்

அவனில் தொற்றியிருந்தது.

வீட்டில் நந்தினி!

அதை நினைக்கையில் ரவீந்திரனில் சந்தோஷப் பூக்கள் பூத்தன.

என்ன நட்சத்திரங்கள் கண் சிமிட்டின.

ரவீந்திரன் படிப்பை விருதலை செய்த பின், மாமாவின் அனுசரணையுடன் கிடைத்த மருந்துக் கடை விற்பனையாளர் வேலையில் இருக்கின்றான்.

அநேகமான மாதங்கள் கொழும்பு வாழ்க்கைதான். வருடப்பிறப்பு, தீபாவளிக்கு மட்டும் ஊருக்கு வந்து போவான்.

கலவரங்களும் அடிக்கடி அவனை இடம் பெயர்த்ததுண்டு.

மாமா வீட்டிலேயே அவன் தங்கியிருப்பதால் சாப்பாட்டுப் பிரச்சனை அவனை பாதிக்கவேயில்லை.

காலிமுகத்திடல், மிருகக்காட்சிசாலை என்று அவன் பொழுது போக்காக ஊர் சுற்றினாலும் இதுவரையிலும் யாரையும் காதலிக்கவில்லை.

அதற்காக அவன் கண்கள் பெண்களைப் பார்ப்பதேயில்லை என்றில்லை.

சிங்களப் பெண்களின் அழகை, அவர்களின் கலாச்சாரங்களை ரசித்திருக்கின்றான்.

ஆனால் யாரையும் காதலிக்க வேண்டும் போல் அவனுக்கு தோன்றவில்லை.

அவனுடைய பெற்றோருக்கோ அவனுடைய திருமணம் அவசியமாகப் பட்டது.

ஒரு வரியில் தொடங்கி நாட்கள் செல்ல கடிதம் முழுவதும் தமது விருப்பத்தை பரவினார்கள்.

ரவீந்திரன் மெல்ல அசைந்து கொடுத்ததும், தயாராக இருந்தது போல் அவனைக் கூப்பிட்டு திருமணத்தை முடித்து வைத்தார்கள்.

முப்பத்தியொரு நாட்களுக்கு முன்னல்தான் நந்தினி ரவீந்திரனின் தாலியை அனுமதித்திருந்தாள்.

இருவருமே வெவ்வேறு ஊர்கள். முன் பின் அறிமுகமில்லாத அவர்களை தரகர் தான் தம்பதிகளாக்கினர்.

முன்பின் அறிந்திராத யாரோவுடன் எப்படி குடும்பம் நடத்துவது என்று ரவீந்திரன் யோசித்திருந்தாலும் நந்தினியின் அழகில் முழு திருப்தி அடைந்தான்.

ஊரில்தான் திருமணம் நடந்து முடிந்தது. உற்ருர், உறவினர்களுக்கு வசதியாக இந்த ஏற்பாடு.

கும்பல்களுக்கும், ஆரவாரங்களுக்குமிடையே ஒருமாத விடுமுறையை செலவு செய்த பின் நேற்றிரவு தான் நந்தினியுடன் அவன் கொழும்பு திரும்பியிருந்தான்.

இதற்கிடையில் அவனுடைய மாமா அவனுக்கு வீடு ஒன்று ஏற்பாடு செய்திருந்தார்.

பிரயாணம் செய்த களைப்பில் வந்தவுடனேயே நித்திரை கொண்டவன் அதிகாலையில் எழுந்து வேலைக்குப் போய் விட்டு இப்போது வீடு திரும்பிக் கொண்டிருக்கின்ருன்.

"வெள்ளவத்த பெண்ட"

ரவீந்திரன் நெரிசலை ஊடறுத்து இறங்கினன்.

அவனுடைய இடத்துக்கு இன்னும் இருவரை ஏற்றிக்கொண்டு மினிபஸ் போய் விட்டது.

நேராக வீட்டுக்குப் போக நினைத்தவன் பின்னர் அதைக் கைவிட்டான்.

"வீட்ட ஏதாவது வாங்கிக் கொண்டு போவோம்"

திரும்பி சந்தையை நோக்கி நடந்தான்.

மரக்கறிகளின் மணம் கலந்து சாம்பாராக மணத்தது. பாதைகளில் இலை, குழைகளால் அர்ச்சனை செய்யப்பட்டிருந்தது.

எல்லோருமே "லாவாய்" என்ருர்கள்.

விலை விசாரிக்காமலே தோடம்பழங்களும், முந்திரிகைப் பழங்களும் வாங்கிக் கொண்டான்.

வீட்டுக்குத் தேவையான பொருட்களை மாமா ஏற்கனவே வாங்கி வைத்திருந்தபடியால் ரவீந்திரனுக்கு அந்த சிரமம் குறைந்திருந்தது.

உல்லாசமாக வீட்டை நோக்கி நடை போட்டான்.

'சவோய்'க்கு முன்னுல் பாதையோரத்தில் நிறைய அழுக்குகளுடன் ஒருவன் சில்லறை சேகரித்துக் கொண்டிருந்தான்.

ரவீந்திரன் வீட்டை நெருங்கினுன்.

படலையைத் திறந்ததும் வெள்ளை உரோம நாய்க் குட்டி ஒன்று ஓடி வந்தது.

"பொஸ்கோ"

அழைத்தவாறே பின்னுல் வந்த பெண் ஒருத்தி இவனைப் பார்த்து சிநேகச் சிரிப்பொன்றை அன்பளித்தாள்.

'பொஸ்கோவை' வாரி அணைத்துக் கொண்டு அவள் உள்ளே போய் விட்டாள்.

அந்த வீடு ஒரு சிங்களக் குடும்பத்திற்குரியது.

வீட்டின் பின்புறம் இருந்த தனிவீடுதான் ரவீந்திரனுக்கு வாடகைக்கு விடப்பட்டிருந்தது.

சிங்களவரின் வீடு என்று மாமா சொன்னதும் ரவீந்திரன் தயங்கினுன்.

"நல்ல குடும்பம். என்னேட வேலை செய்யிறவற்ற சிநேகிதன்ர வீடுதான். முந்தி மாதிரி இப்ப வீடு எடுக்கேலாது. தமிழ் எண்டு சொன்னுலே கதைக்க மாட்டாங்கள்"

மாமா இப்படிச் சொன்னதும் ரவீந்திரன் சம்மதிக்க வேண்டியதாயிற்று.

தனி ஆள் என்றுல் பரவாயில்லை. குடும்பமாக அவர்கள் வீட்டில் போயிருப்பது நல்லதல்ல என்பதனுலும் அந்த வீட்டில் ரவீந்திரன் குடிவர வேண்டியதாயிற்று.

நேற்றிரவு அந்த வீட்டின் குடும்பத் தலைவரை மட்டுமே அவன் சந்தித்திருந்தான்.

இப்போது வந்த பெண் வீட்டுக்காரர்களின் மகளாக

இருக்கலாம் என்று அனுமானித்தான்.

கதவை திறந்து வீட்டினுள் நுழைகையில் மெலிதாக பாட்டுச் சத்தம் கேட்டது.

கதவு திறக்கப்படும் சத்தம் கேட்டு நந்தினி அறையி லிருந்து வெளிப்பட்டாள்.

"நல்லா பாடுறீர்"

நந்தினி பதில் சொல்லாது முறுவலித்தாள்.

'எவ்வளவு வடிவாயிருக்கிறாள்'

ரவீந்திரன் கொண்டு வந்த பொருட்களை மேசைமீது வைத்து விட்டு, உடை மாற்றி முகம் கழுவிக் கொண்டு வந்தான்.

நந்தினி தேநீர் போட்டுக் கொடுத்தாள்.

"தனிய இருக்க போரடிச்சுதா?"

"சீ. ஸ்ரோரி புக்ஸ் கொண்டு வந்தனான்தானே. அது களை எடுத்து வாசிச்சுக் கொண்டிருந்தேன்."

"உமக்கு ஸ்ரோரி புக்ஸில நல்ல இன்றஸ்ற் போல?"

நந்தினியுடன் மனம் விட்டுக் கதைக்கும் சந்தர்ப்பம் உண்மையிலேயே ரவீந்திரனுக்கு இப்பொழுதுதான் கிடைக்கிறது.

ஊரில் இருக்கையில் தினமும் வீட்டுக்கு ஆட்கள் வந்து போய்க்கொண்டிருந்தார்கள். அவர்களுடன் சிரித்துக் கதைப்பதற் கும், திருமணத்திற்கு பாவித்த பொருட்களை மீள ஒப்படைப்பதற் கும்தான் அவர்களுக்கு நேரம் சரியாக இருந்தது.

"இங்கயும் தமிழ் புக்ஸ் எடுக்கலாமே?"

"ஓ. எல்லா புத்தகமும் தாராளமா வாங்கலாம். உமக்கு எது வேணுமெண்டு சொல்லும். நாளைக்கு வரேக்க நான் வாங்கிக் கொண்டு வாறன்."

நந்தினி பெயர்களை அடுக்கினாள்.

அதன் பின் அவள் கொழும்பை விசாரித்தாள்.

ரவீந்திரன் தான் வேலை பார்க்கும் இடத்தை விபரித்தான்.

இரவு நந்தினி நூடில்ஸ் சமைத்தாள்.

இருவரும் ஒன்றாகச் சாப்பிட்டார்கள்.

"இங்க இருக்கிறது பயமில்லையே?" படுக்கையில் நந்தினி கேட்டாள்.

"ஏன் கேக்கிறீர்?"

ரவீந்திரனுக்கும், நந்தினிக்கும் இடையில் 'சென்ரிமீற்றர்'களில்தான் இடைவெளி இருந்தது.

"சுற்றி வர சிங்கலீஸ்தான். தமிழ் ஆட்கள் ஒருத்தரும் கிட்ட இல்ல. அதுதான்"

"ஒண்டுக்கும் பயப்பிடத் தேவையில்ல. எல்லாரும் நல்ல ஆட்கள். நாங்க நல்லா 'மூவ்'பண்ணினா அவையளும் நல்லா 'மூவ்'பண்ணுவினம்"

ரவீந்திரன் கொஞ்சம் நகர 'சென்ரிமீற்றர்' கொஞ்சம் குறைந்தது.

"பயமில்லாம வெளியில போய் வரலாம்தானே?"

"என்ன நீர் சின்னப்பிள்ளை மாதிரி. நாளைக்கே உம்ம வீட்டுக்காரருக்கு 'இன்ரடியூஸ்'பண்ணிவிடுறன்."

சென்ரிமீற்றர் முற்றாகவே மறைந்தது.

## 3

தாமதமாக விடிந்தது.

வெளிச்சம் இருளை முற்றாக அழித்திருந்தது.

வாகனங்கள் பாதையில் இணைந்து வேகம் பிடித்தன.

நடமாடும் விற்பனை நிலையங்கள் குரலைச் சரிசெய்து ஆயத்தமாகின.

மாநகரசபை வாகனங்கள் முதல் நாள் அழுக்குகளை ஏற்றக் கொண்டிருந்தன.

வெளிச்சம் ஜன்னலை ஊடறுத்து ஸ்பரிசிக்கையில் நந்தினி

விழித்தாள்.

கடிகாரம் அவளைப் பார்த்துச் சிரித்துக் கொண்டிருந்தது.

உடைகளை சரி செய்து கொண்டபின், படுக்கை விரிப்புகளையும் சரி செய்தாள்.

கைகளை நீட்டி, மடக்கி சோம்பலை விடுவித்துக் கொண்டபின் குளியலறைக்குப் போனாள்.

சிதறிய நீர்ப்பூக்கள் அவள் உடலைத் தழுவி புத்துணர்ச்சி வழங்கின.

நந்தினி காலைக்கடன்களை முடித்துக் கொண்டு தயாரானபோது நேரம் பத்தாகியிருந்தது.

வானொலியில் தமிழ்ச் சேவையை தேடிப் பிடித்துவிட்டு சமையலறைக்குள் புகுந்து பரவியிருந்த பொருட்களை ஒழுங்கு படுத்தினாள்.

வெளியே பாதையில் "மாலு, மாலு" போய்க் கொண்டிருந்தது.

துவிச்சக்கரவண்டிகள் மணியடித்தன.

நந்தினி சமையலறை வேலைகளை முடித்து, கோப்பியும் குடித்த பின் அறைக்கு வந்தாள்.

சூட்கேசுகளை திறந்து கொண்டு வந்த பொருட்களை எடுத்து அலுமாரிக்குள் அடுக்கினாள்.

வண்ண வண்ண உடைகள் பூச்சி உருண்டையுடன் இடம் மாறின.

கதைப் புத்தகங்கள் கொண்டு வந்த பொருட்களில் இரண்டாம் இடத்தை தட்டிக் கொண்டன.

வாசலில் அழைப்புமணி சத்தம் போட்டது.

'யாராக இருக்கலாம்?'

நந்தினிக்கு வியப்பாக இருந்தது. ரவீந்திரனிடம் திறப்பு இருக்கிறது. அவனுடைய மாமாவும் இப்போது வருவதற்கு சாத்தியமில்லை.

கொழும்புக்கு வந்து இரண்டு இரவுகள் தான் முடிந்தி ருக்கின்றன.

இதுவரை யாருமே அறிமுகமாகவில்லை.

அப்படியானால் இப்போது வந்திருப்பது யார்?

கேள்விக்குறியுடன் நந்தினி கதவைத் திறந்தாள்.

4

இரண்டொரு காயங்களுடன் சவரம் செய்து முடித்த பின் முகத்தை கழுவித் துடைத்துக் கொண்டு சமையலறைக்கு வந் தார் மகாலிங்கம்.

யாரும் அங்கில்லை.

தானே அடுப்பை மூட்டி தேநீருக்காக தண்ணீர் வைத்த பின் அறைக்குப் போய் பவுடர் பூசி தலைவாரிக் கொண்டார்.

வீடு அமைதியாக இருந்தது.

வீட்டில் அப்போது அவரைத் தவிர வேறு யாரும் இல்லை.

அலமாரியைத் திறந்து கதைப் புத்தகம் ஒன்றை தேடி எடுத்துக் கொண்டு முன் கூடத்துக்கு வந்து கதிரையொன்றில் அமர்ந் தார்.

அந்தப் புத்தகம் அவர் முன்பு எப்போதோ வாசித்த துதான். ஆனால் அதை விட்டால் நேரத்தை விரட்டுவது கடினம்.

வீட்டின் முன்னால் நின்ற மரங்கள் அசைந்து அசைந்து காற்று வீசிக் கொண்டிருந்தன.

வெளியே பாதையில் நின்று எட்டிப் பார்த்த ஆடு ஒன்று அங்கிருந்த புற்களைப் பிடிக்காமல் திரும்பிப் போய் விட்டது.

மகாலிங்கம் பதினோராவது பக்கத்திற்கு வருகையில் உள்ளேயிருந்து கேத்தில் சத்தம் போட்டது.

மகாலிங்கம் உள்ளே போய் தேநீர் தயாரித்தார்.

பழையபடி தேநீருடன் வந்து படிப்பதை தொடர்ந்தார்.

பின் வளவில் மரங்கள் இலைகளை உதிர்த்து விட்டிருந்தன.

பப்பாசி மர உச்சியில் காகம் ஒன்று சுரங்கம் அமைத்துக் கொண்டிருந்தது.

பல இடங்களில் புல் வளர்ந்திருந்தது.

மகாலிங்கம் முப்பத்திரண்டு பக்கங்களை முடித்திருந்த போது கையில் பைகளுடன் கனகேஸ்வரி வந்து கொண்டிருந்தாள்.

இவர் தொடர்ந்து வாசித்துக் கொண்டிருக்க கனகேஸ்வரி மௌனமாக உள்ளே போனாள்.

அவசியமில்லாமல் இருவரும் கதைப்பதில்லை.

இது எப்போதிலிருந்து என்பது இருவருக்கும் ஞாபகமில்லை.

ஆனாலும் தாங்கள் கணவன், மனைவிதான் என்பதை இருவரும் மறந்து விடவில்லை.

அவர்களிருவரிடமும் பெரிய கதையே இருந்தது.

கனகேஸ்வரி சமையலைத் தொடங்கினாள்.

சுவர் மணிக்கூடு இருமிக் கொண்டது. நேரம் எந்த தடங்கலும் இல்லாமல் ஓடிக் கொண்டிருந்தது.

சாப்பாட்டைக் கோப்பையில் போட்டுக் கொண்டு போய் மகாலிங்கத்திடம் கொடுத்தாள் கனகேஸ்வரி.

"கடிதம் ஏதும் வந்ததே?"

"இல்லை"

கேள்வி பதில் அத்துடன் முடிந்தது.

சாப்பிட்டபின் கனகேஸ்வரி உடுப்புகளை கொண்டு போய் கிணற்றடியில் வைத்து தோய்க்க ஆரம்பித்தாள்.

மகாலிங்கம் கச்சேரியில் வேலை செய்தார். வயதெல்லை அவரின் வேலைக்கு முற்றுப்புள்ளி வைத்தது.

ஓய்வு பெற்றபின்தான் அந்த ஓய்வு எவ்வளவு கொடுமையானதென்று மகாலிங்கத்திற்கு தெரிந்தது.

வீட்டில் மனைவியைத் தவிர கதைப்பதற்கு வேறு யாரும் இல்லை.

ஆனால் மனைவியோ அநாவசியமாக கதைப்பதே இல்லை.

இந்த நிலையில் நேரம் அவருடன் விளையாடிக் கொண்டிருந்தது.

வானொலி கேட்டல், படித்த புத்தகங்களை மீண்டும் படித்தல், நண்பர்கள் வீட்டுக்குப் போதல் ஆகியவைதான் அவருடைய பொழுதுபோக்குகள்.

கனகேஸ்வரி வீட்டு வேலைகள் எல்லாம் செய்வாள். கணவனுக்கு தேவையானவற்றை செய்து கொடுப்பாள்.

மனைவியாக இல்லாவிடினும் நல்ல தாதியாக இருந்தாள்.

ஏதோ ஒன்று அவர்களுக்கிடையில் சுவராக இருந்தது.

அதை உடைக்க இருவருமே முயற்சிக்கவில்லை.

கனகேஸ்வரியிலும் முதிர்ச்சி பிள்ளையார் சுழி போட்டிருந்தது. ஆங்காங்கே வெள்ளி மயிர்கள் தலை நீட்டின.

ஏதோ நினைத்துக் கொண்டவளாய் கனகேஸ்வரி கண்களை துடைத்துக் கொண்டாள்.

கணவன் மேல் பச்சாதாபமா?

பிள்ளைகளின் பிரிவா?

கதிரவன் மேற்கே விழுந்தான்.

நேரம் பிந்நேரமாகியது.

மகாலிங்கம் விறாந்தையில் இருந்து காற்று வாங்கிக் கொண்டிருந்தார்.

கனகேஸ்வரி பூ மரங்களுக்கு தண்ணீர் விட்டுக் கொண்டிருந்தாள்.

பூக்கள் தமது வாழ்வை முடித்துக் கொள்ள தயாராக இருந்தன.

வேலை செய்துகொண்டே தனது மாமனார் குடும்பத்தை நினைத்தாள் கனகேஸ்வரி.

திருமணம் செய்ததினால் அவளுக்கு மாமா முறையாகிய அவருக்கு மகாலிங்கம் உட்பட ஐந்து பிள்ளைகள்.

அவருடைய மனைவி ஏதோ சுகவீனத்தால் எப்பவோ செத்துப் போனாள்.

சினிமாவிலும், புத்தகங்களிலும் மனைவியை இழந்தவன் இப்படித்தான் இருக்க வேண்டும் என்ற வரைவிலக்கணத்தை கண்டுபிடித்த மகாலிங்கத்தின் தந்தை தாடியையும் வளர்த்துக் கொண்டு குடிக்க ஆரம்பித்தார்.

பிள்ளைகள் வளரத் தொடங்கினார்கள்.

அப்பா தனியான பாதையில் போனதால் தான்தான் குடும்பத்தை கவனிக்க வேண்டும் என்பதை சரியான வேளையில் மகாலிங்கம் புரிந்து கொண்டார்.

செயல்பட்டார்.

சகோதரர்களை வளர்த்தார். நன்றாக படித்தார். கல்வித் தகமையாலும், தெரிந்தவர்களின் உதவியினாலும் நல்ல வேலையிலும் சேர்ந்து கொண்டார்.

தாய், தந்தையின் பாசத்தை தானே சகோதரர்களுக்கு வழங்கினார்.

அண்ணன் குடும்ப பொறுப்பை ஏற்றுக் கொண்டதும் தம்பி தங்கைகள் தங்கள் பொறுப்பை மறந்தார்கள்.

எதிர்காலத்தைப் பற்றிக் கவலைப்படாது வாழ்வை அனுபவித்தார்கள்.

தங்களின் நல் வாழ்க்கைக்காக அண்ணன் துறந்தவைகளை தம்பி, தங்கைகள் சுலபமாகப் பற்றிக் கொண்டார்கள்.

பாசம் என்ற மாயையில் மகாலிங்கமும் அவர்களின் நடவடிக்கைகளில் அக்கறை கொள்ளவில்லை.

இரண்டாவது தங்கை திடீரென்று தனது காதலன் என்று ஒருவனை அறிமுகப்படுத்தும் போதும் அதிர்ச்சியடைந்தாரேயொழிய விரித்துக் கொள்ளவில்லை.

கையிருப்பை செலவழித்து அவர்களின் திருமணத்தை முடித்து வைத்த போதுதான் மூத்த தங்கை கேள்விக்குறியானாள்.

யோசிப்பதற்கு அவர் அவகாசமே எடுக்கவில்லை.

கனகேஸ்வரியை திருமணம் செய்து அதனால் வந்த வரவில் அடுத்த தங்கையின் திருமணத்தையும் சிறப்பாக நடாத்தி முடித்தார்.

அதன் பின்பும் மகாலிங்கத்தை அவர்கள் விட்டார்களா?

எப்படி முடியும்?

வாழ்நாளின் பெரும்பகுதி அவரிலேயே தங்கியிருந்தவர்களுக்கு திடீரென தனியாக வாழ முடியுமா?

---

("வித்தியாசப்படும் வித்தியாசங்கள்" பிரதிகளின் முன் அட்டையின் உள் பக்கத்தில் வரவேண்டிய கீழ் வரும் வாக்கியங்கள் தவறுதலாக இடம்பெறவில்லை.)

வெளியீடு : 3
ஜனவரி 1987

வித்தியாசப்படும் வித்தியாசங்கள்
குறுநாவல்
VITHIYASAPPADUM VITHIYASANKAL
NOVEL

ஆசிரியர் : பார்த்திபன்
AUTHOR : PARTHIPAN

நன்றி
அட்டை : ரமணி
வெளியீடு : தென்னாசிய நிறுவனம்
தட்டெழுத்து : கலா
கவிதைகள் : சிவம்

---

சைக்கிள் சத்தம் கேட்டு தலையை திருப்பினள் கனகேஸ்வரி.

சந்திரன் வந்து கொண்டிருந்தான்.

அவனைக் கண்டதும் கனகேஸ்வரியின் முகமே மாறி விட்டது.

தலையை திருப்பி தனது வேலையை தொடர்ந்தாள்.

மகாலிங்கத்தின் உறவினர்களைக் கண்டாலே அவளின் உடம்பு முழுவதும் எரியும்.

அவளுடைய எதிரியும் அவர்கள் தான். மகாலிங்கத்தை அவளுக்கு எதிரியாக்கியதும் அவர்கள்தான்.

சைக்கிளை மரத்துடன் சாத்திவிட்டு உள்ளே போனன் சந்திரன்.

அவனைக் கண்டதுமே மகாலிங்கம் சந்தோசமானர்.

அவனைப் பற்றி, அவன் குடும்பத்தைப் பற்றி விசாரித்தார். அவனும் கொண்டு வந்த விசயங்களைக் கொட்டினன். சிக்கல்களை தெரிவித்தான்.

தங்களுக்கு ஏதாவது தேவைப்படுகையில்தான் எல்லோரும் அடுத்தவரை தேடி ஓடுகிறார்கள்.

வந்தவனுக்கு தேநீர் போட்டுக் கொடுப்பதற்காக கனகேஸ்வரி தனது வேலையை இடை நிறுத்திவிட்டு முன் வாசல் பக்கமாக வந்த போது-

"அண்ணி எங்க? உலாத்தப் போட்டாவே?" சந்திரன் சுவாரசியமாகக் கேட்டான்.

"சீ. உங்கால புக்கண்டுகளுக்கு தண்ணி விட்டுக்கொண்டு நிக்கிறு"

"அங்க சனம் எல்லாம் திட்டுது அண்ணி உங்களை கவனிக்கேல என்டு"

" - - - - - - - - - - - - "

கனகேஸ்வரிக்கு குபீரென்று கோபம் வந்தது.

'சே. என்ன மனிதர்கள் இவர்கள்?. கணவன் மனைவியை நிம்மதியாக வாழவே விடமாட்டார்களா?. ஏன் இப்படி கரிசனையாக ஒருவர் மேல் மற்றவருக்கு வெறுப்பை ஏற்படுத்துகிறார்கள்?. இதே அக்கறையை தங்கள், தங்கள் குடும்பங்களில் காட்டக் கூடாதோ?

சந்திரன் மேல் கனகேஸ்வரிக்கு கோபம் கோபமாக வந்தது. அவனுக்கு நல்லதொரு பதிலைச் சொல்லாமல் மௌனமாக உட்கார்ந்திருக்கும் மகாலிங்கத்தைப் பார்க்கையில் அவ்வளவு கோபமும் அவர் மேல் திரும்பியது.

"இன்னுமொண்டு. . . ." சந்திரன் இழுத்தான்.

அவன் சொன்னதைக் கேட்டுக் கொண்டிருந்த கனகேஸ்வரி அவனை என்ன செய்யலாம் என்று ஆத்திரப்பட்டாள்.

## 5

கடிகாரம் 'டிக் டிக்' கென்றது.

வெளியே நின்ற மரங்கள் காற்றின் உதவியுடன் ஒருகளை உரசி முனகின.

எங்கோ நின்று பூனை ஒன்று அழுது கொண்டிருந்தது.

கட்டிலில் படுத்திருந்தாலும் அவள் நித்திரையாகவில்லை. அவளுக்கு வலப்பக்கத்தில் ஒரு சிறுவனும், இடப்பக்கத்தில் தாயின் கையைப் பிடித்தபடி சிறிய குழந்தையொன்றும் படுத்திருந்தது.

இரவு ஏற்படுத்தியிருந்த அமைதியில் மெல்லிய சத்தங்கள் கூட பலமாகவே ஒலித்தன.

ஏதோ நினைத்துக் கொண்டவளாய் அவள் எழும்ப முயற்சிக்கையில் சிறுவன் விழித்துக் கொண்டான்.

"என்னம்மா?"

"ஒண்டுமில்லை படு"

சிறுவன் படுத்துக் கொண்டாலும் உறங்கிவிடவில்லை.

அப்பா வீட்டில் இல்லாத இரவுகளில் அம்மா கண் விழித்திருந்து தங்களுக்கு காவல் இருப்பதை அவன் அடிக்கடி கண்டிருக்

கின்றான். ஏன் அப்பா அடிக்கடி தங்களை தனியே விட்டு விட்டுப் போகிறார் என்று அந்த சிறுவனுக்கு தெரியவில்லை.

ஆனாலும் அவனுக்கு அப்பா மேல் கோபம் வந்தது. இப்படியாகத்தான் அவனில் வெறுப்பு விருட்சம் வளர ஆரம்பித்தது.

## 6

"குட் மோர்னிங்"

வீட்டுக்காரர்களின் பெண் அன்றைய முதல் புன்னகையுடன் நின்றாள்.

தலை மயிர் கட்டையாக வெட்டப்பட்டிருந்தது. உடலை பற்றிச் சுற்றியிருந்தது.

"மோர்னிங்"

'இவள் எங்கே வந்தாள்?' என்ற வியப்புடன் நந்தினி பதில் வணக்கம் சொன்னாள்.

"ஒயட்ட சிங்கள கத்தாகறண்ட புலுவண்ட?"

நந்தினி விழித்த விழியிலிருந்து அவளுக்கும் சிங்களத்துக்கும், தமிழருக்கும் ஒற்றுமைக்கும் உள்ள தூரம் என்பதை அந்த பெண் புரிந்து கொண்டாள்.

"டு யூ ஸ்பீக் இங்லீஷ்?" அவள் தனது முயற்சியை கைவிடவில்லை.

"யெஸ்"

(கதையில் ஆங்கிலத்திலும், சிங்களத்திலும் இனி வர இருக்கும் உரையாடல்கள் தமிழாக்கப்பட்டுள்ளன)

"என்னுடைய பெயர் சுஜாதா" தன்னை அவள் அறிமுகம் செய்து கொண்டாள்.

"நந்தினி" இவள் தன்னை அடையாளப்படுத்தினாள்.

"நாங்கள் உள்ளே போகலாமா?" புன்னகையுடன் சுஜாதா கேட்ட பின்தான் அவளை வெளியிலேயே நிறுத்தி வைத்திருப்பது நந்தினிக்கு உறைத்தது.

"தாராளமாக"

இருவரும் உள்ளே சென்றார்கள்.

சுஜாதா எந்த கூச்சமுமில்லாமல் வீடு முழுவதும் சுற்றிப் பார்த்தாள்.

சுவரில் மாட்டியிருந்த படங்களைக் காட்டி விளக்கம் கேட்டாள்.

தமிழ் கலாச்சாரங்களைப் பார்த்து ஆச்சரியப் பட்டாள்.

நந்தினிக்கோ என்னவோ போலிருந்தது.

சுஜாதாவுடன் சகஜமாகப் பழகவும் முடியவில்லை. அவளுடன் கதைக்காமல் நிற்பதற்கும் வெட்கமாக இருந்தது.

நந்தினியை விட சுஜாதாவுக்கு இரண்டு, மூன்று வயது குறைவாக இருக்கலாம். ஆனால் சின்னப் பெண் போல் எல்லாவற்றையும் ஆச்சரியத்துடன் ரசித்தாள்.

"நான் தமிழர்களின் கலாச்சாரங்களை குறிப்பாக அவர்களின் பாச உணர்ச்சியை மதிக்கின்றேன்"

நந்தினி மௌனமாக சுஜாதா சொல்வதை கேட்டுக் கொண்டிருந்தாள்.

'அறிமுகமில்லாத பெண் எப்படி தன்னுடன் சகஜமாகப் பழகுகிறாள்' நந்தினி ஆச்சரியப்பட்டுக் கொண்டிருந்தாள்.

"தமிழ் படங்களும் எனக்குப் பிடிக்கும். தமிழ் தெரியாவிட்டாலும் கதையை ஊகித்துப் பிடித்து விடுவேன். சிவாஜியின் நடிப்பு எனக்குப் பிடிக்கும்"

நந்தினி அவளையே பார்த்துக் கொண்டிருந்தாள்.

தானே தொடர்ந்து கதைத்துக் கொண்டிருப்பது சுஜாதாவுக்கு அப்போதுதான் புரிந்திருக்க வேண்டும்.

"என்ன மிகவும் வெட்கப்படுகிறீர்கள்? நானும் உங்களைப் போல ஒரு பெண்தான். தாராளமாக என்னோடு கதைக்கலாம்"

நந்தினி முதலில் தயங்கினாலும் நேரம் போக போக சுஜாதாவுடன் மனம் விட்டுக் கதைக்கலானாள்.

அதற்குப் பின் கதைக்கும் சந்தர்ப்பங்கள் சுஜாதாவுக்கு குறைந்தே போய் விட்டது.

நன்றாக பால் கலந்த கோப்பி ஒன்று போட்டுக் கொடுத்தாள். பிஸ்கற் வகைகளையும் எடுத்து பரிமாறினாள்.

"நான் இப்போது ஏன் வந்தேன் தெரியுமா?" சுஜாதா கேட்டாள்.

நந்தினி தலையாட்டினாள்.

"தமிழர்கள் எல்லோரும் பயங்கரவாதிகள் என்று இங்கே சொல்லுகிறார்கள். எழுதுகிறார்கள். பயங்கரவாதிகள் என்றால் எப்படி இருப்பார்கள் என்று பார்க்கத்தான் நான் இப்போது வந்தேன். உங்களைப் பார்த்தால் வித்தியாசமாகத் தெரியவில்லை. என்னைப் போலத்தான் இருக்கிறீர்கள்" சுஜாதா சொல்லி விட்டு சிரித்தாள்.

"நீங்கள் எங்களைப் பற்றி கற்பனை செய்து வைத்திருப்பது போலத்தான் நாங்களும் உங்களை நினைத்திருந்தோம். அதனால்தான் முதலில் உங்களுடன் கதைக்கத் தயங்கினேன்"

"பார்த்தீர்களா? நாங்கள் ஒருவரை ஒருவர் சந்தித்துக்கொள்ளாமலேயே எவ்வளவு தப்பபிப்பிராயங்களை வைத்திருக்கின்றோம். எல்லாம் இந்த மோசமான அரசியல்வாதிகளால்தான். நாங்களே இப்படி என்றால் யாழ்ப்பாணத்திற்கே போகப் பயப்படுபவர்கள் எல்லாம் எப்படித்தான் பிரச்சனையைத் தீர்த்து வைக்கப் போகிறார்களோ?"

"அதனால்தான் பிரச்சனை இன்னும் தீர்கப்படாமலேயே இருக்கிறது. ஒவ்வொருநாளும் அப்பாவிச் சனங்கள் செத்துக் கொண்டே இருக்கிறார்கள்."

"சிங்களத்தில் அப்பாவிகளுக்கு பயங்கரவாதிகள் என்றும் ஒரு கருத்திருப்பதாக இப்போது கண்டுபிடித்திருக்கிறார்கள். அதனால்தான் எப்போதும் யாழ்ப்பாணத்தில் பயங்கரவாதிகளே கொல்லப்படுவதாக சொல்கிறார்கள்."

"இனி வேறு ஏதாவது கதைப்போம்" நந்தினி அந்த கதைகளுக்கு முற்றுப்புள்ளி வைத்தாள்.

"இடங்கள் பார்க்க வேண்டுமென்றால் என்னுடன் வாரு

ங்கள். எல்லா இடமும் சுற்றிக் காட்டுகிறேன்."

"அப்படியா மிகவும் நல்லது"

"நீங்கள் எதுவரை படித்திருக்கிறீர்கள்?"

"உயர்தர வகுப்பு வரை."

"ஏன் தொடர்ந்து படிக்கவில்லை?"

"தரப்படுத்தல் என்று ஒன்று இருக்கிறதே. அதோடு" சொல்ல வந்ததை சாமர்த்தியமாக விழுங்கிக் கொண்டாள் நந்தினி.

அவளை சொல்ல விடாமல் ஏதோ ஒரு உணர்வு தடுத்தது. அது என்னவென்று அவளுக்கு தெரியவில்லை. ஆனால் அடிக்கடி இப்படி நிகழ்வதுண்டு.

"நீங்கள் இப்போது என்ன செய்கிறீர்கள்?" நந்தினி தான் கேட்டாள்.

"நீங்கள் முடித்த வகுப்பை நான் தொடங்கியிருக்கின்றேன்"

"இன்று பாடசாலை போகவில்லையா?"

"இப்போது தவணை விடுமுறை"

நீண்ட நேரம் அவர்கள் கதைத்துக் கொண்டிருந்தார்கள்.

"தாமதமாகி விட்டது. நான் போய்விட்டு பின்னர் வருகின்றேன்."

விடை பெற்றுப் போன சுஜாதா வாசல் வரை சென்று திரும்ப ஓடி வந்தாள்.

"மறந்து போய் விட்டேன். இன்றிரவு எங்கள் வீட்டில் உங்களுக்கு விருந்து. ரவியையும் அழைத்துக் கொண்டு வாருங்கள்"

சுஜாதா போய் விட்டாள்.

'கலகலப்பான பெண்!' சுஜாதாவைப் பற்றி நினைத்துக் கொண்ட நந்தினிக்குப் பசித்தது.

மதிய உணவை முடித்துக் கொண்டு திரும்பவும் அறைக்கு

வந்த பொருட்களை அடுக்கினாள்.

உடுப்புகளை அடுக்கி முடிந்தபின் சூட்கேசுகளை கட்டிலுக்கு கீழ் வைத்தாள்.

ஒரு சூட்கேசில் புகைப்படம் ஒன்று ஒளிந்திருப்பதை அவள் கவனிக்கவில்லை.

## 7

இருமல், தடிமல், காய்ச்சலைப் போக்க சிறந்த நிவாரணிகள் முன்னால் நின்று வாடிக்கையாளர்களை வரவேற்றன.

ஆட்கள் நடமாடுவதற்கு கொஞ்ச இடத்தை விட்டுக் கொடுத்த ஏனைய இடங்களை மருந்துகள் நிரப்பியிருந்தன.

இரண்டு மின் விசிறிகள் பரந்த கைகளை வீசிக் காற்றடித்துக் கொண்டிருந்தன.

நித்திரையில்லாதவருக்கு காசை வாங்கி உறக்கத்தை பையில் போட்டுக் கொடுத்தனுப்பிய பின் ரவீந்திரன் கதிரையொன்றில் உட்கார்ந்தான்.

மனம் நந்தினியை படம் போட்டுக் காட்டிக் கொண்டிருந்தது.

ரவீந்திரன் உண்மையிலேயே அதிசயப்பட்டு போனான்.

'எப்படி இருந்த நான் எப்படி மாறிவிட்டன்'

ரவீந்திரன் எந்தப் பெண்ணையும் விரும்பாவிட்டாலும் தனக்கு வரப் போகும் மனைவி எப்படி இருக்க வேண்டும் என்று கற்பனை செய்திருக்கிறான்.

புடவை கட்டி.....

பூச்சூடி....

இரட்டைப் பின்னல் போட்டு....

என்னையே சார்ந்தவளாய்...

நந்தினி அவனை ஏமாற்றவில்லை. அவன் எதிர்பார்த்

தத்திற்கும் மேலாகவே அவள் இருந்தாள்.

வீட்டில் இருந்த நாட்களில், விருந்தினர்கள் வருகையில் யாராவது அழைத்தால் ஒழிய அவளாக வெளியே வர மாட்டாள்.

பல ஆண்களுக்கு இதில் ஒரு திருப்தி.

வளர்ப்பு விலங்குகளை கூப்பிட்டு விருந்தினர்களுக்கு வேடிக்கை காட்டி விட்டு திருப்பியனுப்புவது போல்...

தானே எஜமானன் என்பது போலவும், மனைவி என்பவள் தன்னுடைய கட்டுப்பாட்டில், தனக்கு கீழ் படிந்து இருக்கிறாள் என்பதை மற்றவர்களுக்கு காட்டுவதில் இந்த ஆண்களுக்கு என்ன சந்தோசமோ?

திருமணத்திற்கு முன்பு தாங்கள் தன்னிச்சையாக நடந்து கொள்வார்கள். ஆனால் வரப்போகும் மனைவியைப் பற்றி அவள் இப்படித்தான் இருக்க வேண்டும் என்று தாங்களாகவே ஒரு வரைவிலக்கணத்தை அமைத்துக் கொள்கிறார்களே, இது என்ன நியாயம்?

பெண்கள் தலையை குனிந்து நடப்பதுதான் அடக்கமாம். அதையே ஆண்கள் செய்தால் அது கோழைத்தனமாம்.

செய்கைகள் ஒன்றுதான் ஆண்களுக்கு ஒரு அர்த்தமும் பெண்களுக்கு வேறு அர்த்தமும் உண்டாக்கி வைத்திருக்கும் ஒரே ஒரு உயிரினம் மனிதன் தான்.

பியதாச மற்றவர்களுக்கு தன்னைக் காட்டி ஏதோ சொல்லிச் சிரிப்பதை ரவீந்திரன் அவதானித்துக் கொண்டான்.

"என்ன மஹத்தயா.லவ் சீன்?" பியதாச தமிழை கடித்து தின்றான்.

ரவீந்திரன் பதில் சொல்லாமல் சிரித்தான்.

வேலையை முடித்துக் கொண்டு ரவீந்திரன் புறப்பட்டான்.

இரவு நந்தினியையும் அழைத்துக் கொண்டு மாமா வீட்டுக்குப் போக வேண்டும் என்று தீர்மானித்துக் கொண்டான்.

பஸ்ஸிலிருந்து இறங்கிய பின்தான் நந்தினி கேட்ட கதைப்புத்தகங்களை வாங்கவில்லை என்று தெரிந்தது.

'சரி பறவாயில்லை. நாளைக்கு சனிக் கிழமைதானே. நந்தினியையும் கூட்டிக் கொண்டு போய் தேவையான சாமான்கள் எல்லாம் வாங்குவோம்'

தனக்குள் நினைத்துக் கொண்டு வீட்டுக் கதவை திறந்து உள்ளே போனவன், அங்கே பார்த்த காட்சியில் கற்பனைக்கோட்டைகள் சரிந்து விழ அப்படியே நின்று விட்டான்.

## 8

வியர்வையைத் துடைத்து விட்டு கதவைத் தட்டினார் வேலுப்பிள்ளை.

உள்ளேயிருந்து யாரும் வருவதாக தெரியவில்லை.

மீண்டும் ஒருமுறை பலமாகத் தட்டினார்.

"பொறுங்கோ வாறன்" எங்கிருந்தோ அசரீரி கேட்டது.

வேலுப்பிள்ளை துண்டை எடுத்து இன்னொருமுறை முகத்தை துடைத்துக் கொண்டார்.

வேகமாக வந்த நாய் ஒன்று அவரை அலட்சியம் செய்து விட்டு ஓடி மறைந்தது.

கதவு திறக்கப்பட்டது.

"அண்ணையே வாருங்கோ" மனோன்மணி வரவேற்றாள்.

செருப்பை கழற்றிய பின் வேலுப்பிள்ளை உள்ளே போனார்.

"உஸ். பே வெயில் கொழுத்துது. விசுவம் இல்லையே பிள்ளை?"

"இருங்கோ. கூட்டியாறன். சாப்பிட்டுட்டு இப்பதான் சரிஞ்சவர்" மனோன்மணி உள்ளே போனாள்.

வேலுப்பிள்ளை கதிரை ஒன்றை ஜன்னல் ஓரமாக இழுத்துப் போட்டு அமர்ந்தார்.

மனோன்மணிக்கோ, விசுவநாதனுக்கோ வேலுப்பிள்ளை

நெருங்கிய உறவினரல்ல. ஆனாலும் ஏதோ கிலோ மீற்றர் உறவு.

சொந்தம் என்பதை விட தரகர் தொழில்தான் பலருடன் அவரை இணைத்தது.

தரகு அவருடைய முழு நேர வேலை அல்ல. அவ்வப்போது தொட்டுக் கொள்வார்.

சம்பளம் என்றில்லாவிடினும் அன்பளிப்புகள் நிறைய கிடைக்கும்.

யாரோவையும் யாரோவையும் இணைத்து வைத்து அதனால் ஏற்படும் சிக்கல்களில் அவரும் கஷ்டப்படுவதுண்டு. என்றாலும் சளைக்காது தன் பணியை தொடர்ந்தார்.

"என்ன வேலைப்பின்னை அண்ணை, வெயிலுக்க வெளிக்கிட்டிருக்கிறியள்?"

பகல் நித்திரையை களைந்து கொண்டு விசுவநாதன் அறையிலிருந்து வெளிப்பட்டார்.

மேலே சட்டை போட்டிருக்கவில்லை. மார்பில் அளவுக்கதிகமான மயிர்கள் வளர்ந்திருந்தன. வயிறு வேலி தாண்டியிருந்தது. தலையின் நடுப்பகுதி மைதானமாக சுவீகரிக்கப்பட்டிருந்தது.

"இங்கால வேற அலுவலா வந்தனான். உங்களையும் பாத்திட்டு போவம் எண்டு வந்தனான்."

"ஏதேனும் விசேசங்களே அண்ணை?"

விசுவநாதன் தனது கதிரையையும் ஜன்னலருகே இடம் மாற்றினார்.

காற்று அவர்களை ஏமாற்றிக் கொண்டிருந்தது.

"சம்பந்தி வீட்ட போனனியளோ?"

"ஓமோம். ரண்டு நாளைக்கு முந்திப் போனனான். உங்கள் எல்லாரையும் விசாரிச்சினம். எல்லாம் நல்ல படியா நடந்து முடிஞ்சதில அவைக்கு நல்ல சந்தோசம்."

"அவைக்கு மட்டுமே. எங்களுக்கும்தான். நானே எதிர்பார்க்கேல எல்லாம் நல்ல படியா நடக்குமெண்டு. ஒவ்வொரு நாளும் எத்தினையோ பிரச்சனையள். இதுக்குள்ள ஒரு மாதிரி

நடாத்தி முடிச்சிட்டம்." விசுவநாதன் நிம்மதிப் பெருமூச்சு விட்டார்.

"அதுதான் உங்கட கெட்டித்தனம் அண்ணை. எதிர்பார்த்தளவு இல்லாவிட்டாலும் ஆட்கள் பரவாயில்லை."

"கலியாண வீடு முடிஞ்சும் எங்களுக்கு இன்னும் வேலையள் முடியேல. எல்லாம் நாங்க தான் செய்ய வேணும். வேற ஆர் இருக்கினம் எங்களுக்கு.?"

"மெய்தான். முந்தியைப் போல ஆட்களிட்ட எந்த உதவியும் கேட்கேலாத நிலமை இப்ப. உதவி செய்யிற நிலமையில ஆர் இருக்கினம்? ஒவ்வொருத்தருக்கும் பிரச்சனையள் இருக்கு. முந்தியப் போல பெடியளும் இப்ப இல்ல. எல்லாம் நாட்டை காக்க வேணுமெண்டு போயிட்டுதுகள்" இடையில் நிறுத்திய வேலுப்பிள்ளை "பிள்ளை கொஞ்சம் தண்ணி கொண்டு வா. நல்ல பச்சை தண்ணியா கொண்டு வா பிள்ளை" என்று உள்ளே பார்த்து குரல் கொடுத்து விட்டு மறுபடியும் தொடர்ந்தார்.

"பிள்ளையள் கடிதம் போட்டதோ?"

"போன உடன சுகமா போய் சேந்திட்டம் என்டு கடிதம் போட்டதோட சரி."

"கடிதம் போட அதுகளுக்கு நேரம் இருக்கப் போகுதே?" வேலுப்பிள்ளை சின்னச் சிரிப்பொன்றை வெளியிட்டார்.

ஜன்னலுக்கப்பால் இரண்டு மாமரங்கள். பட்டுப் போனவை போல் காய்ந்திருந்தன.

கொப்புகளில் அணில்பிள்ளைகள் ரோந்து புரிந்தன.

மாங்காய்கள் அரிக்கப்பட்டும், படாமலும் தொங்கிக் கொண்டிருந்தன.

சற்றுத்தூரம் தள்ளி வேலி. வேலிக்கப்பாலிருந்த அடுத்த வீட்டு மரங்கள் கொப்புகளை நீட்டி இந்த வளவிற்குள் ஊடுருவல் செய்தன.

மனோன்மணி இரண்டு கண்ணாடிக் குவளைகளை நிரப்பிக் கொண்டு வந்து இருவரிடமும் கொடுத்தாள்.

உதடுகளில் முட்டிவிடாமல் ஜாக்கிரதையாக வாய்க்குள் ஊற்றிக் கொண்ட வேலுப்பிள்ளை வந்திருப்பது எலுமிச்சப்பழ

நீர் என்பதை உணர்ந்து கொண்டார்.

"அந்த விசயத்தைப் பற்றிக் கதைச்சனீங்களே?" வேலுப்பிள்ளை குவளையை கீழே வைத்தார்.

"இன்னும் இல்லை அண்ணை. தேவைப்படேல. அதால நானும் சொல்லேல."

"எனக்குத் தெரியாது. நான் உங்களுக்கு ஒண்டையும் மறைக்கேல. சொல்லுறது சொல்லாதது உங்கட இஷ்டம். ஆனா பிறகு என்னில பிழை வரப்படாது."

விசுவநாதன் கொஞ்ச நேரம் எதுவும் கதைக்கவில்லை.

வேலுப்பிள்ளை அணில்களைப் பார்த்து ரசித்தார்.

எந்தக் கவலையுமில்லாமல் அவை ஒடிப்பிடித்து விளையாடிக் கொண்டிருந்தன.

அவைகளுக்கென்ன எதிர்காலம் பற்றிய கவலையா?

இன்றைய பொழுதைப்பற்றிய கவலையா?

பிற்கால சந்ததியைப்பற்றிய கவலையா?

சுதந்திரம், விடுதலை பற்றிய கவலையா?

இவை எதுவுமே இல்லாததால் அவை விளையாடிக் கொண்டிருக்கின்றன.

ஆனால் இவை எல்லாம் இருந்தும் சில மனிதர்கள் விளையாடிக் கொண்டேயிருக்கிறார்கள்.

விசுவநாதன் கொஞ்சம் வித்தியாசமானவர் - மற்றவர்களுக்கு.

நல்லதை, புதியதை செய்பவர்களை சமுதாயம் வித்தியாசமானவர்களாக்கி விடும்.

"வேற ஆர் மூலமாவது இதைக் கேள்விப்பட்டால்?" வேலுப்பிள்ளை புதிய கேள்வியை பிறப்பித்தார்.

"அங்க ஆருக்கு உந்த கதையளை கதைக்க நேரம் இருக்கு. அதைவிட அங்க ஆருக்கு உதுகள் தெரியும்" விசுவநாதன் குழப்பமில்லாமல் சொன்னார்.

"சரியான வெக்கை. பிள்ளை இன்னும் கொஞ்சம் தண்ணி கொண்டு வா" என்று குரல் கொடுத்த வேலுப்பிள்ளை எஞ மிச்சம் பழத்தை அடைப்புக்குறிக்குள் போட்டுக் கொண்டார்.

௯

"கச். கச்" பலமாக கத்தினார்கள்.

பறந்து வரும் பந்துக்கு கீழாக ஒரு சிறுவன் ஓடிக் கொண்டிருந்தான்.

மற்றைய சிறுவர்கள் எல்லோரும் பந்தையும் அவனை யும் உன்னிப்பாக அவதானித்துக் கொண்டிருந்தார்கள்.

பந்து மெல்ல மெல்ல உயரத்தைக் குறைத்துக் கொ ள்ள—

ஓடிக் கொண்டிருந்த சிறுவன் தனது வேகத்தை மட்டு ப்படுத்த—

பந்து கீழே விழ—

அவன் கையை உயர்த்தி—

பந்தை பிடித்தே விட்டான்.

"கச். கச்"

"அவுட். அவுட்"

எல்லோரும் ஆரவாரித்தார்கள்.

மாலை நேரம். சூரியன் சரிந்திருந்து அவர்களின் கிரி க்கற்றை பார்த்துக் கொண்டிருந்தான்.

பந்தை பிடி கொடுத்தவன் பதவி துறக்க, இன்னொரு வன் புதிதாக துடுப்பை எடுத்து ஆரம்பித்தான்.

வீட்டிற்குப் பின்னாலிருந்த வளவிற்குள் சிறுவர்கள் உற்சா கமாக விளையாடிக் கொண்டிருந்தார்கள்.

பந்தை பிடிக்க ஒருவரும், பந்தை அடித்துவிட்டு ஒருவ மாக அவர்கள் வியர்வை சிந்திக் கொண்டிருந்தார்கள்.

சிவந்த மண் அவர்களின் உடைகளிலும், உடம்புகளிலும் தாராளமாகப் படிந்து கொண்டிருந்தது.

மாலை முழுதும் விளையாடு என்ற பாரதி கொள்கையை அவர்கள் தீவிரமாக கடைப்பிடித்துக் கொண்டிருந்தார்கள்.

திடீரென வீட்டிற்குள்ளிருந்து சத்தம் வந்தது.

அவர்கள் அதைக் கவனியாமல் தொடர்ந்தும் விளையாட்டில் மும்முரமாக இருந்தார்கள்.

வீட்டினுள்ளிருந்து சத்தம் தொடர்ச்சியாகவும், பலமாகவும் கேட்டதும் அவர்களின் விளையாட்டு தடைப்பட்டது.

துடுப்பாட்டக்காரனின் அப்பாவும், அம்மாவும் வீட்டினுள் பலமாக ஒருவரை ஒருவர் எதிர்த்துக் கொண்டிருந்தார்கள்.

விளையாடிக் கொண்டிருந்த சிறுவர்கள் எல்லோரும் துடுப்பாட்டக்காரனையே பார்த்தார்கள்.

எல்லோர் பார்வையும் தன் மீது பதிய அந்த சிறுவன் சங்கடப்பட்டான்.

பேச்சுக்குரல்கள் மிகவும் தெளிவாக வெளியே கேட்ட போது சிறுவர்கள் எல்லோரும் அந்த இடத்தை விட்டுப் போய் விட்டார்கள்.

துடுப்பாட்டக்காரன் மட்டும் அப்படியே நின்றான்.

விளையாட்டு பாதியில் முடிந்து போன துக்கமும், எல்லோரும் என்ன நினைத்துக் கொள்வார்களோ என்ற அவமானமும் அந்த சிறுவனில் முட்டி மோதின.

கொஞ்ச நேரத்தின் பின் சிறுவனுடைய அம்மா அழுது கொண்டே வீட்டிலிருந்து வெளிப்பட்டாள்.

கிணற்றடியில் சலவைக்கல்லின் மீதிருந்து அழும் அம்மாவைப் பார்த்துக் கொண்டிருந்தான் சிறுவன்.

விளையாட்டு இடையில் நின்று போனதற்கு காரணம் அப்பா.

நண்பர்கள் எல்லோரும் ஏளனம் செய்து விட்டுப் போனதற்கு காரணம் அப்பா.

அம்மா இப்படி தனியே நின்று அழுவதற்கு காரணம் அப்பா.

அப்பா. அப்பா. அப்பா.

அப்பாவை நினைக்கையில் சிறுவனுக்கு வெறுப்பு பொங்கி வழிந்தது.

'சே. என்ன அப்பா'

அம்மா மேலும் அவனுக்கு கோபம் வந்தது.

அப்பாகத்தினு அம்மாவும் கத்த வேணுமா? அப்பா சண்டை பிடித்தால் அம்மாவும் சண்டை பிடிக்க வேணுமா?

அப்பாவும் கூடாது.

அம்மாவும் கூடாது.

இப்படித்தான் அந்த சிறுவனின் முடிவெடுக்க முடிந்தது. கோபம் அதிகமாக வந்தது.

கரும்பை தூக்கி எறிந்தான். முளைகளை கால்களால் உதைத்து விழுத்தினான்.

வீட்டிற்குள் போகப் பிடிக்காத சிறுவன் புழுதி படிந்த கால்களுடன் அப்படியே தெருவுக்குப் போனான்.

## 10

ஜன்னல் கண்ணாடியினூடாக கொழும்பை பார்த்துக் கொண்டிருந்தாள் நந்தினி.

இரவில் தனக்கே உரிய அழகுடன் ஒளிர்ந்து கொண்டிருந்தது நகர்.

நந்தினி வெளியே தெரிந்தவற்றைக் காட்டி விளக்கம் கேட்ட பொழுதும், ரவீந்திரன் அவற்றை விபரித்தபோதும் தமிழைக் கேட்டு பலர் இவர்களைத் திரும்பிப் பார்த்தார்கள்.

அதைத் தெரிந்து கொண்ட ரவீந்திரன் ஒலி அளவுடன் வசனங்களையும் குறைத்துக் கொண்டான்.

பஸ் வழுக்கியது.

கடைகளின் பெயர்கள் வர்ணங்களில் கண்ணடித்தன.

இருளுடன் மின்சாரம் சவால் விட்டுக் கொண்டிருந்தது.

இந்த மனிதர்கள் என்னவற்றையெல்லாம் கண்டுபிடிக்கிறார்கள்?

மின்சாரத்தை உற்பத்தியாக்கி பகலைக் கொண்டுவரலாம் என்று எப்படிக் கண்டுபிடித்தார்கள்?

ஆயுதங்களை உற்பத்தியாக்கி சனத்தொகையை குறைக்கலாம் என்று எப்படிக் கண்டு பிடித்தார்கள்?

கண்டுபிடிப்புகள் கூடக்கூட கண்டுபிடிப்பவர்கள் குறைகிறார்களே. இதை ஒருவரும் கண்டுபிடிக்கவில்லையா?

இறங்கவேண்டிய தரிப்பில் ரவீந்திரனும், நந்தினியும் இறங்கிக் கொண்டார்கள்.

நடைபாதையில் இருவரும் அருகருகாக நடந்தார்கள்.

இருட்டில் நின்றிருந்த உருவங்கள் சிங்களத்தில் பிச்சை கேட்டன.

அவர்களை பிச்சை எடுக்க வைத்துவிட்டு அதே பணம் ஆயுதங்களாகவும், காக்கி, கறுப்பு உடைகளாகவும் படுகொலைகளுக்காக தமிழ் பகுதிகளுக்கு போய்க்கொண்டிருப்பது பாவம் இவர்களுக்குத் தெரியாது.

அரசாங்கத்திலும், பிக்குகளிலும், அரசியல்வாதிகளிலும் பாடப்படும் இனவெறித் 'தாலாட்டில்' சிங்கள மக்கள் 'தூங்கிக்' கொண்டிருந்தார்கள்'.

ஆங்காங்கே ஜோடிகள் இறுக்கமாக அணைத்துக் கொண்டு மேலை நாட்டு நாகரிகங்களை பரீட்சித்துக் கொண்டிருந்தார்கள்.

அழைப்புமணியை அழுத்தினான் ரவீந்திரன்.

கதவு திறந்து கொண்டது.

"வாங்க வாங்க" ரவீந்திரனின் மாமா அவர்களை வரவேற்றார்.

இருவரும் உள்ளே நுழைந்ததும் மாமாவின் பிள்ளைகள்

ரேகாவும், கார்த்திக்கும் அவர்களை சூழ்ந்து கொண்டார்கள்.

ரேகா பதினாறு வயது.

கார்த்திக் இரண்டு குறைவு.

அவர்களின் அம்மா சுவரில் படமாகி இருந்தாள்.

எல்லோரும் வரவேற்பறையிலிருந்த கதிரைகளில் அமர்ந்து கொண்டார்கள்.

ஒன்றன்மேல்ஒன்றாக அடுக்கி வைக்கப்பட்டிருந்த ஒலிப்பதிவு உபகரணங்கள் ஆங்கிலப் பாடல்களை மெல்லிதாக உற்பத்தி செய்து கொண்டிருந்தன.

மூலையில் 'சொனி' போர்த்திக் கொண்டிருந்தது.

சுவரில் ஆங்காங்கே அலங்காரங்கள் மாட்டப்பட்டிருந்தன.

தரையில் முகம் தெரிந்தது.

ரவீந்திரனின் கதிரைக் கைப்பிடியில் ரேகா அமர்ந்திருந்தாள்.

அவள் மிகவும் சகஜமான பேர்வழி. வாழுகின்ற சூழ்நிலை அதை ஊக்குவித்திருந்தது.

நந்தினிக்கு அந்த காட்சியைப் பார்க்க ஒரு மாதிரியாக இருந்தது.

"உங்கட வெடிங் போட்டோஸ் எங்க?" ரேகா ஆவலாகக் கேட்டாள்.

ரவீந்திரன் நந்தினியைப் பார்க்க, அவள் கொண்டு வந்திருந்த சிறிய பையொன்றை நீட்டினாள்.

ரேகா அதை வாங்கி திறந்தாள்.

புகைப்படத் தொகுப்புடன் இனிப்புப் பெட்டியொன்றும் வெளிப்பட்டது.

ரேகா பெட்டியைப் பிரித்து எல்லோருக்கும் கொடுத்து தானும் எடுத்துக் கொண்டாள்.

"கொழும்பு பிடிச்சிருக்கா?" மாமா நந்தினியிடம்

கேட்டார்.

திருமணம் செய்து கொண்ட பின் ரவீந்திரன் இன்றுதான் மாமா வீட்டிற்கு முதல் முதல் வருகின்றான்.

நந்தினி பதில் சொல்லாது தலையாட்டினாள்.

ரவீந்திரனுக்கு அவளைப் பார்க்க எரிச்சலாயிருந்தது.

'கண்டறியாத வெட்கம். விரைவா உடுப்புகள் போடத் தெரியுது. கதைக்கத் தெரியேல'

கொழும்பு வாழ்க்கையின் மூன்றாவது நாளே ரவீந்திரனில் இந்த எரிச்சல் ஆரம்பித்துவிட்டது.

மாமா வீட்டிற்கு நந்தினியையும் கூட்டிக் கொண்டு போக வேண்டும் என்ற எண்ணத்துடன் வீட்டிற்கு வந்தவன் அங்கு பார்த்த காட்சியினால் திகைப்படைந்தான்.

நந்தினி கதிரையொன்றில் அமர்ந்து புத்தகம் படித்துக்கொண்டிருந்தாள்.

அவள் போட்டிருந்த அரைப்பாவாடை முழங்காலை தாண்ட மறுத்துக் கொண்டிருந்தது.

இவன் வரும் சத்தம் கேட்டு புத்தகத்தை வைத்து விட்டு அவள் எழுந்தபோது இவன் இன்னும் அதிர்ந்தான்.

மேலே போட்டிருந்த இறுக்கமான ரீசேட் மறைக்க வேண்டியதை மிகையாக்கிக் கொண்டிருந்தது.

ரவீந்திரனால் நம்பவே முடியவில்லை.

தாலி கட்டிய நாளிலிருந்து சேலையுடனே அவளைப் பார்த்தவன் இதை எதிர்பார்க்கவேயில்லை.

உடம்பை சுற்றி சேலை கட்டி...

தலையில் பூ வைத்து..

நெற்றியில் பொட்டு வைத்து...

அவனுடைய கற்பனை நந்தினி காற்றில் கரைந்தே போனாள்.

ரவீந்திரனுக்கு எதுவும் புரியவில்லை.

அவனில் ஏற்படும் மாற்றங்களை நந்தினி கவனிக்கவில்லையா? அல்லது கவனியாதவள் போல் காட்டிக் கொள்கிறளா?

"இன்டைக்கு டினருக்கு சுஜாதா வீட்ட கூப்பிட்டிருக்கினம்."

"இந்த உடுப்புகள் எங்கால?" ரவீந்திரன் நந்தினி சொல்லியதை கவனிக்கவில்லை.

"என்னுடையதுதான். வீட்டில இருந்து கொண்டு வந்தனான்" ரவீந்திரனின் கேள்வி நந்தினிக்கு அநாகரிகமாக பட்டிருக்க வேண்டும்.

"ஊரிலயும் இப்பிடி உடுப்புகள் போடுறனீரே?"

"ஏன் போடப்படாதோ?"

இருவரின் குரலும் சமனை தட்டைப் பெறத் தொடங்கின.

"இதை நான் பாக்கவேயில்லையே? இதை எல்லாம் ஆர் இங்க கொண்டு வரச் சொன்னது?"

"என்ரை உடுப்புகளை கொண்டு வாறதுக்கு எனக்கு ஆரும் சொல்லத் தேவையில்லை."

நிமிடத்திற்கு நிமிடம் ரவீந்திரன் உடைந்து கொண்டே போனான்.

அடக்கமாக தலை குனிந்து....

அதிக வார்த்தைகள் பேசாது...

அவன் எதிரே நின்ற நந்தினி எல்லாவற்றையும் பொய்யாக்கிக் கொண்டிருந்தாள்.

தங்களிடம் இல்லாதவற்றை மற்றவர்களிடமிருந்து எதிர்பார்ப்பது பலரின் இயல்பு.

பல கணவன்மார்களும் இதே போல் தான்.

தங்களிடமில்லாத பணிவு, அடக்கம், மானம், பொறுப்பு இவைகளை மனைவிகளிடம் எதிர் பார்க்கிறார்கள்.

இவர்கள் எதிர்பார்ப்பதில் தவறில்லை.

இவர்களுடைய எதிர்பார்ப்பு மற்றவர்களின் சுதந்திர

த்தை பறிப்பதுதான் தவறு.

ஒரு கணவன் எவ்வளவு நண்பர்களுடனும் பழகலாம்–பெண் நண்பிகள் உட்பட. அது தப்பில்லை.

ஒரு கணவன் எவ்வளவு ரகசியங்களையும் வைத்திருக்கலாம். அது தப்பில்லை.

இவ்வளவும் ஏன்?

திருமணத்திற்கு முன் ஒரு ஆண் எத்தனை பெண்களையும் காதலித்திருக்கலாம். உடலுறவு கொண்டிருக்கலாம். காசுக்கு கற்பை விற்றிருக்கலாம்.

இவையெல்லாமே தப்பில்லை.

ஆனால் இவற்றில் ஏதாவதொன்றை ஒரு பெண் செய்தால் அது தப்பு.

இப்படி பாரபட்சம் காட்டுவது தப்பில்லையா?

இயற்கை வழங்கிய பெண்களின் உடலமைப்பை காரணம் காட்டி அவர்களின் சுதந்திரத்தை பறிப்பது தப்பில்லையா?

கன்னியாயிருக்கையில் பெற்றோருக்கு..

மனைவியானபின் கணவனுக்கு...

பெண்கள் அடிமைகளாகத்தான் இருக்க வேண்டுமென்று ஏதாவது சட்டங்கள் இருக்கின்றனவா?

இது ஒரு பக்கம்.

மறு பக்கமும் இருக்கிறதே.

ஆண்களும் பெண்களும் சமம் என்பதைக் காட்ட சில பெண்கள் தேர்ந்தெடுத்த சுலப வழிகளில் ஒன்று உடைகள்.

உடைகளால்தான் ஆண்களுக்கு சமமாக முடியும் என நம்பும் 'அறிவான' பெண்களும் இருக்கத்தான் செய்கிறார்கள்.

கலாச்சாரங்கள், பாரம்பரியங்கள், பண்பாடுகள் வெளிக்காட்டப்படுவது நடை, உடை, பாவனைகளில்தான்.

இவற்றை தலைகீழாக மாற்ற முற்பட்டால்?

ஆண்கள் வேட்டியோ, காற்சட்டையோதான் போட்

டுக்கொள்ள முடியும். புதுமை என்று சொல்லிக் கொண்டு பாவா டை, சேலைகளை அவர்கள் அறிந்து கொள்ள முடியுமா?

செய்யும் வேலைகளுக்கு இலகுவாக இருப்பதற்காக, குறிக்கப்பட்ட உடைகள் போட வேண்டும் என்ற வரம்பை மீறலாம்.

உடைகளுக்குரிய வரம்பை மீறலாமோ?

நந்தினி தான் நினைத்த மாதிரியில்லை என்பதை ரவீந்திரன் தெரிந்து கொண்டான்.

தொடர்ந்து பேசாமல் அறைக்குள் போனான்.

'நந்தினியுடன் அதிகமாக கதைத்து விட்டோமோ என்று கூட நினைத்தான்.

அப்போதுதான் நந்தினி ஏதோ சொல்ல முற்பட்டது நினைவுக்கு வந்தது.

"நந்தினி" கூப்பிட்டான்.

நந்தினி வந்தாள். அவள் முகத்தில் எந்த மாறுதலுமில்லை.

அவனுடைய முகத்தைப் பார்த்து கதைக்க ரவீந்திரனுக்கு சங்கடமாக இருந்தது.

"அப்போது ஏதோ சொன்னனீர். நான் கவனிக்கேல என்ன விசயம்?"

"சுஜாதா வீட்டில எங்கள் ரண்டு பேருக்கும் இண்டைக்கு டினர்"

"யார் சுஜாதா?" ரவீந்திரன் ஆச்சரியத்துடன் கேட்டான்.

காலையில் சுஜாதா வந்ததிலிருந்து எல்லாவற்றையும் சொன்னாள் நந்தினி.

வீட்டுக்காரர்களுடன் நந்தினி வெகு சீக்கிரமாகவே பழகிப் போய்விட்டது ரவீந்திரனுக்கு நிம்மதியைத் தந்தது.

'இனி இவளுக்கு தனிய இருந்து பயப்பிட வேண்டிய அவசியமில்லை.'

அதன் பின் இருவரும் விருந்திற்குப் புறப்பட்டார்கள்.

நந்தினி போட்டிருந்த உடைகளைப் பற்றி ரவீந்திரன் விமர்சனம் எதுவும் செய்யவில்லை.

விருந்து முடிந்து வீட்டுக்கு வந்தார்கள்.

படுக்கையில் மறுபடி அவர்கள் பேச்சு தொடர்ந்தது.

ரவீந்திரன் நிதானமாக தனக்கு பிடித்தன, பிடிக்காதன பற்றிக் கூறினன்.

நந்தினி அவன் சொல்வதைக் கேட்டுக் கொண்டிருந்தாள். தனது கருத்துகளாக அவள் எதுவும் கூறவில்லை.

எவ்வளவோ சொல்லிவிட வேண்டும் என்றுதான் அவள் நினைத்தாள். ஆனல் எதுவோ அவளைத் தடுத்தது.

நீண்ட நேரத்தின் பின் மௌனமாக அவர்கள் படுத்துக்கொண்டார்கள்.

அன்று இடைவெளியைக் குறைக்கும் முயற்சியில் யாரும் ஈடுபடவில்லை.

"என்ன ரவி. எங்க நிக்கிறீங்க?"

ரேகா ரவீந்திரனை ஞாபகங்களிலிருந்து வெளியே இழுத்து எடுத்தாள்.

"என்ன கேட்டனீங்கள்?" ரவீந்திரன் தடுமாறினன்.

எல்லோரும் சிரித்தபோது நந்தினியும் சேர்ந்து கொண்டாள்.

"ரவிக்கு எப்பவும் வைபோட நினைவுதான்" ரேகா செல்லமாக ரவியின் தலையில் குட்டினள்.

ரவீந்திரன் ஓரக் கண்ணல் நந்தினியைப் பார்க்க அவளின் முகம் மாறுவது தெரிந்தது.

இதைப் பார்த்ததும் அவனுக்கு ஒரு திருப்தி ஏற்பட்டது.

அவளுடைய எரிச்சலை இன்னும் அதிகரிக்க வைக்க வேண்டும் போல் அவனுக்கு ஆசையாக இருந்தது.

அவள் தன்னேடு நடந்து கொண்ட முறைக்கு தான் இப்படி பழி வாங்குவதாக நினைத்துக் கொண்டான்.

இப்போது கூட ரவீந்திரன் சொன்னதைக் கேளாமல் நந்தினி தன் விருப்பப்படியே உடையணிந்து வந்திருந்தாள்.

சுஜாதாவோடு போய் அவள் மேலும் அதிகமான நாகரிக உடைகள் வாங்கியிருந்தாள்.

தேயிலையால் வேலைக்காரியாக்கப் பட்டவள் தட்டில் தேநீர் கொண்டு வந்தாள்.

எல்லோரும் எடுத்துக் கொண்டார்கள்.

மாமா ரவீந்திரனிடம் ஊர்ப்புதினங்களைக் கேட்டார்.

நந்தினிக்கு பார்த்துக் கொண்டிருக்க புகைப்படத் தொகுப்பு ஒன்று கிடைத்தது.

ஒவ்வொரு பக்கமாகப் புரட்டிப் பார்த்துக் கொண்டிருந்தாள்.

திருமணநாளிலிருந்து மாமா குடும்பம் படமாகியிருந்தது.

பிற்பகுதியில் ரேகாவுடன் ரவீந்திரன் அதிகளவில் நிற்பதை அவதானித்துக் கொண்டாள்.

அவளுக்குள் பல கேள்விகள் பிரசவமாகின.

"ரவி நல்லா என்னை ஏமாத்திப் போயிட்டார்" ரேகாவின் கொழும்புத் தமிழ் சிணுங்கியது.

நந்தினி சட்டென தலையை உயர்த்தினாள்.

"எப்பிடி?" ரவீந்திரன் கேட்டான்.

"விலேஜ் கேளா இருக்க வேணும். சாறிதான் கட்டவேணும். அப்பதான் மறி பண்ணுவன் என்டு சொன்னவர் கடைசியா மொடேர்ன் கேளாத் தான் மறி பண்ணியிருக்கிறார்"

ரவீந்திரன், நந்தினியைத் தவிர மற்றெல்லோரும்சிரித்துக் கொண்டார்கள்.

தம்பதிகள் இருவர் மனதிலும் வெவ்வேறு உணர்ச்சிகள் போராடின.

"எல்லோரும் கதைக்கேக்க அப்பிடித்தான் சொல்லுவினம். கொழும்பில தானே வேலை. அப்ப ஸ்ரைலான கேள்ஸ்

தான் வேணும்"

கார்த்திக் சொன்னதும் மறுபடியும் எல்லோரும் சிரிக்க வேண்டியதாயிற்று.

"என்ன ரண்டு பேரும் பேசாமல் இருக்கிறீங்க?" மாமாதான் அவர்களின் ஒட்டாமையை கவனித்தார்.

"வீட்டில தனிய இருந்து என்ஜோய் பண்ண வேண்டிய நேரத்தில இங்க வந்து மாட்டிக் கொண்டோமே என்டு வொறி பண்ணியினம்"

கார்த்திக் மறுபடி சிரிக்க வைத்தான்.

தப்பாக நினைத்துக் கொண்டுவிடப் போகிறார்களே என்று ரவீந்திரனும், நந்தினியும் கூட அதில் கலந்து கொண்டார்கள்.

கொஞ்ச நேரத்தில் அங்கே இறுக்கம் குறைந்து சூழ்நிலை கலகலப்பாகியது.

நேரம் போனபின் சாப்பாட்டு மேசையில் கூடினார்கள்.

மேலைத்தேய முறையில் பளிச்சிடும் பீங்கான்களில் சாப்பாடு ஆவி இழந்து கொண்டிருந்தது.

நூடில்ஸ் மரக்கறிப் பட்டாளத்துடன் இருந்தது. ஆடு கூட உறைப்பாக இருந்தது.

சாப்பிட்டபடி கதைத்தார்கள். கதைத்தபடியே சாப்பிட்டார்கள்.

கை கழுவப் போகையில் ரேகா ரகசியமாக ரவீந்திரனிடம் கேட்டாள்.

"உங்களுக்குள்ள ஏதாவது பிரச்சனைகளா?"

## 11

சின்னக் கைகளில் காப்புகளை போட்டபின் தள்ளி நின்று பார்த்தாள் கனகேஸ்வரி.

அதிசயத்துடன் காப்புகளை பார்த்துக் கொண்டிருந்த மகள் அழகாகவே இருந்தாள்.

தலையை வாரி இழுத்து, இரட்டைப் பின்னல் போட்டு, நெற்றியில் கறுப்புப் பொட்டு வைத்து, கன்னத்தில் கறுப்பு புள்ளி வைத்து.....

அவள் மகள் அழகாகத்தான் இருந்தாள்.

மகளுக்கு காப்புகள் செய்து போட வேண்டும் என்று கனகேஸ்வரிக்கு நீண்ட நாட்களாகவே ஆசை.

ஆசை பிறந்தவுடன் பணம் கிடைத்து விடுமா?

மகாலிங்கத்தின் மாதச் சம்பளத்திலேதான் அவர்களின் சீவியம். மிச்சம் பிடித்தாலும் அவ்வப்போது கடன் வாங்க வைக்கும் சம்பளம்.

கடனை வாங்கி காப்புக்கு சொல்லியிருந்தாள்.

காப்பு வந்து விட்டது.

சிறிது நேரத்தில் மகாலிங்கமும் வந்து விடுவார்.

"அப்பா"

வீட்டிற்குள் வந்த அப்பாவிடம் ஓடினாள் மகள்.

அவளை மகாலிங்கம் தூக்கிக் கொள்ளவில்லை.

வேலைக் களைப்புடன் அறைக்குள் போய் விட்டார்.

கனகேஸ்வரி தேநீர் தயாரித்தாள்.

அவள் தேநீரை எடுத்துக் கொண்டு வருகையில் மகாலிங்கம் உடை மாற்றி கூடத்திற்கு வந்திருந்தார்.

மகாலிங்கம் தேநீர் குடிக்கையில் கனகேஸ்வரி மெள்ள பேச்சை ஆரம்பித்தாள்.

"காப்பு இண்டைக்கு வந்திட்டுது"

மகாலிங்கம் தேநீர் குடித்துக் கொண்டிருந்தார்.

"நாளைக்கு காசுக்கு ஆள் வரும்"

மகாலிங்கம் தேநீர் குடித்துக் கொண்டிருந்தார்.

"சம்பளம் எடுத்திட்டீங்களே?"

மகாலிங்கம் கோப்பையை வைத்தார்.

"சம்பளம் எடுத்தாச்சு. ஆனா இந்த முறை காப்புக்கு காசில்லை."

ஏன் என்பது போல பார்த்தாள் கனகேஸ்வரி.

"ஏதோ அவசர தேவையாம். தம்பி வந்து கொஞ்சக் காசு வாங்கிக் கொண்டு போட்டான்"

கனகேஸ்வரிக்கு குபீரென்று கோபம் வந்தது.

'ஏன் என்னுடைய வாழ்வில் இவர்கள் அநியாயமாக குறுக்கிடுகிறார்கள்?'

'நான் கணவனுடன் சண்டை பிடிப்பதற்கு இவர்களே ஒவ்வொருமுறையும் காரணிகளாக இருக்கிறார்கள்.

வேலை செய்யும் இடத்திற்கே நேரே போய், காத்திருந்து காசை வாங்கிக் கொண்டு போய் விட்டார்களே?

இப்படி ஒரு முறையல்ல.

கனகேஸ்வரியே சில சமயங்களில் தன் கையால் கொடுத்திருக்கிறாள்.

பல சமயங்களில் அவள் முன்னாலேயே மகாலிங்கம் கொடுத்திருக்கிறார்.

'பாவம் கஷ்டப்படுகிறார்கள். அவசரத்துக்கு உதவாத காசு பிறகென்னத்திற்கு' என்னும் பச்சாதாபத்தில் கனகேஸ்வரி ஆரம்பத்தில் இந்த தானத்தில் அக்கறை கொள்ளவில்லை.

கணவனின் சகோதரங்கள் தானே என்ற அனுதாபம் வேறு.

இவர்களின் இரக்கத்தை ஆதாரமாக வைத்து, இவர்கள் குடும்பத்தின் மேல் அவர்கள் முழுக்க முழுக்க சார்ந்து கொள்ள ஆரம்பித்த போதுதான் கனகேஸ்வரி உசாரானாள்.

'என்னுடைய இரத்த உறவுகள்' என்று மகாலிங்கம் பாசத்தைப் பொழிந்தாலும் கனகேஸ்வரியால் அவருடன் ஒத்துப் போக முடியவில்லை.

தன்னுடைய பிள்ளைகளின் எதிர்காலமே அவளுக்குப் பெரிதாக இருந்தது.

தன்னுடைய பிள்ளைகள் எதிர்காலத்தில் வசதியாக இருக்க வேண்டுமென்றுதான் அவள் விரும்பினள்.

கணவன், மனைவிக்கிடையான இந்த முரண்பாடுகள் மெல்ல மெல்ல அவர்களிடையே இடைவெளியைத் தோற்றுவித்தன.

கருத்து வேறுபாடுகள் அதிகரித்து பேச்சுகளாகி, விவாதங்களாகி, சண்டைகளுக்கு களம் அமைத்தன.

இத்தனைக்கும் தங்களால் சகோதரனின் குடும்பத்தில் பிரச்சனைகள் உருவாகிறதே என்று மகாலிங்கத்தின் சகோதரர்கள் கவலைப்படவில்லை.

மாறுக பிரச்சனைகளை காரணம் காட்டி, சகோதரன் மேல் இன்னும் அதிக பாசம் காட்டி பணம் பறித்துக் கொண்டிருந்தார்கள்.

கணவனை தன் வழிக்கு கொண்டு வருவதில் தோற்றுப் போன கனகேஸ்வரி அவனிடமிருந்து விலகிப் போனள்.

சகோதர பாசத்திற்கு முன்னல் கணவன் மனைவி உறவு மகாலிங்கத்திற்கு துச்சமாகிப் போய் விட்டது. அதனல் தங்களிடையே ஏற்பட்டு வரும் விரிசலை அவர் கண்டு கொள்ளவில்லை.

மகளின் புகைப்படத்தைப் பார்த்தபடி பழைய நினைவுகளில் மூழ்கிப் போன கனகேஸ்வரி அவற்றிலிருந்து மீண்டாள்.

மகாலிங்கத்திலிருந்து அந்நியமாகிப் போனதால் அவள் தனிமையிலேயே இருந்தாள்.

தனிமை.

முதிர்ச்சி.

இவைகள் முன்பு வராத யோசனைகளை அவளுள் பிறப்பித்தன.

தன்னுடைய வாழ்க்கையையே அவள் புதிய கோணத்தில் பார்த்தாள்.

மகாலிங்கத்துடன் தான் நடந்து கொள்ளும் முறையை

நினைவு கூர்ந்தாள்.

வேளை தவறாமல் சாப்பாடு கொடுக்கின்றேன்

வருத்தம் வந்தால் கவனித்துக் கொள்கின்றேன்.

இவை போதாதா?

குடும்பம் என்றால் இவை மட்டும் தானா?

கணவன் மனைவிக்கிடையில் இவை மட்டும்தானா?

அன்பாக, பிரியமாக கதைத்து எவ்வளவு வருடங்கள் இருக்கும்?

ஏன்?

கனகேஸ்வரி குழம்பினாள்.

கடந்த காலங்களில் தான் நடந்து கொண்ட விதம் சரியானதா என்று தன்னையே கேட்டுக் கொண்டாள்.

உறுதியான பதில் கிடைக்கவில்லை.

மகாலிங்கம் தவறு செய்து விட்டார் என்று வைத்துக் கொண்டாலும், அவரை பழிவாங்கும் விதத்தில் நான் நடந்து கொண்டால் அவருக்கும் எனக்கும் வித்தியாசம் இல்லாமல் போய்விட்டதே?

அவரை மன்னித்து ஏன் திருத்தியிருக்கக்கூடாது?

அவர் தனக்காக இல்லாவிடினும் தனது சகோதரர்களுக்காகத்தானே செய்கிறார்?

மகாலிங்கத்தின் சகோதரர்களை நினைத்ததும் கோபம் மறுபடியும் துளிர்விடுவதை அவளால் தடுக்க முடியவில்லை.

அவர்கள் செய்யும் அக்கிரமங்களை அவளால் கோபித்துக் கொள்ள முடிந்தது.

ஆனால் மகாலிங்கத்தைப்பற்றி அவருடைய உறவினர் ஒருவரே சொன்னதைத்தான் அவளால் தாங்கிக் கொள்ள முடியவில்லை.

அன்று ராசு வந்தபோது மகாலிங்கம் வீட்டில் இல்லை.

பொதுவாகவே மகாலிங்கத்தின் உறவினர்கள் வந்தால்

அவள் கவனிப்பதேயில்லை. எல்லாம் ஒரே குட்டை மட்டைகள்தான் என்பது அவள் கணிப்பு.

ராசு வந்த போதும் அவனை அலட்சியம் செய்தாள்.

தனது கடமையாகக் கருதிய தேநீரை கொண்டு வந்து கொடுத்த போதுதான் அவனிடமிருந்து வீசிய வாடை வித்தியாசமாக இருப்பதை உணர்ந்தாள்.

அவள் சந்தேகத்தை தெரிந்து கொண்ட ராசு "சத்தியமா நான் ஞனக்க குடிக்கேல "என்றான்.

கனகேஸ்வரி அருவருப்போடு உள்ளே போய்விட்டாள்.

இந்த குடியும் கனகேஸ்வரியின் எரிச்சலில் பங்கேற்றவைகளில் ஒன்று.

மகாலிங்கத்திற்கு மதுபானப்பழக்கம் இல்லாவிடினும் மனைவியுடன் அவர் சண்டை பிடித்துக் கொண்டு அவர் கொடுக்கும் பணத்தில் அவரின் சகோதரர்கள் தாராளமாக குடித்தார்கள். சினிமா பார்த்தார்கள்.

இவை நன்றாகவே கனகேஸ்வரிக்குத் தெரியும்.

ஒருமுறை கனகேஸ்வரி பிள்ளைகளுடன் கீரிமலைக்குப் போயிருந்தாள்.

வேலை நாள் ஆகலால் மகாலிங்கம் அவர்களுடன் போகவில்லை.

குளித்து முடிந்ததும் பிள்ளைகள் சிப்பி, சோகி தேட கனகேஸ்வரி மண்டபத்தில் அமர்ந்திருந்து கடல் காற்றை சுவாசித்து கொண்டிருந்தாள்.

தற்செயலாக அவள் பார்வை திரும்பும்போது காருக்குள்ளிருந்த படி கதவை திறந்து கொண்டு வெளியே சத்தியெடுக்கும் ஆளைப் பார்த்து விட்டாள்.

மகாலிங்கத்தின் சகோதரங்களில் ஒன்று.

இருப்புக்கு நன்றாக மேலாக கட்டிய சாரங்களுடன் அவனுடைய கூட்டாளிகள் தள்ளாடிக் கொண்டிருந்தார்கள்.

இன்னொரு நாள்.

கனகேஸ்வரி முதலாம் வகுப்பிலிருந்து படம் பார்க்கையில் இன்னொரு சகோதரம் ஒ.டி.சியில் இருந்ததை நேராகவே பார்த்தாள்

இவற்றையெல்லாம் அவள் மகாலிங்கத்திடம் தெரிவித்த போது அவர் நம்பவேயில்லை.

இது மேலும் கனகேஸ்வரியை அவர் மேல் கோபப்பட வைத்தது.

தனது பிள்ளைகளுக்கு காசு செலவழிக்க சிரமப்படுபவர் வேறு யாரோ கெட்டுப் போக தாராளமாக அனுமதிக்கிறார் என்பதுதான் அவள் கோபம்.

"சத்தியமா நான் கனக்க குடிக்கேல" ராசு நான் காவது முறையாகச் சொன்னான்.

கனகேஸ்வரி தன்னுடையபாட்டில் வீட்டைக் கூட்டிக் கொண்டிருந்தாள்.

"நான் குடிச்சிருக்கிற படியால் உங்கட புருசனைவிட கூடாதவன் எண்டு நினைப்பியள். ஆனா உங்கட புருசனைப்பற்றி உங்களுக்கு முந்தியே எனக்குத் தெரியும்"

கனகேஸ்வரி கூட்டிக் கொண்டிருந்தாள்.

"இளம் பெடியனா இருக்கேக்க எங்கட வீட்ட அடிக்கடி அவன் வருவான்."

"---- --"

"ஆள் நல்லா படிப்பான். நல்ல கெட்டிக்காரன்"

"-------"

"நல்லா படிச்சா மட்டும் சரியே. அவனும் ஆம்பிளை தானே?"

கனகேஸ்வரி கூட்டுவதை நிறுத்தினாள். ராசுவின் கதையில் ஏதோ ஒன்று இழையோடுவதைக் கவனித்தாள்.

அதன் பின் அவன் சொன்னவைகளைக் கேட்டு அவள் அதிர்ந்தே போனாள்.

# 12

மதிய போசன இடைவேளை.

வெண்ணிற உடைகள் எங்கும் பரந்து காணப்பட்டன.

பலவிதமான குரல்கள் கலந்து எதுவும் புரியாமல் காற்றோடு கலந்து போயின.

தண்ணீர் குடிப்பதற்கு வரிசைகள்.

சிறுநீர் கழிப்பதற்கு வரிசைகள்.

அந்த சிறுவன் 'லீப்'பைப் பூட்டிக் கொண்டு வெளியே வந்தான்.

வேறு பிரிவிலிருந்து வந்த இன்னொரு சிறுவன் இவனுடன் சேர்ந்து கொண்டான்.

"வாறியே போளை விளையாடுவோம்" வந்தவன் கேட்க இவன் மறுத்தான்.

"பிறின்சிப்பல் கண்டா அடிதான் விழும்"

இவர்கள் நடந்து கொண்டிருக்கையிலேயே பலர் சேர குழு உருவாகியது.

"பின்னேரம் வீட்ட வாங்கோவன். விளையாடுவோம்" இவன் கேட்டான்.

"உன்ரை வீட்டயோ? இனிமேற்பட்டு அந்தப்பக்கமே வரமாட்டோம்"

"முதல் கொப்பர் கொம்மான்ரை சண்டையை நிப்பாட்டு. பிறகு விளையாடுறதைப்பற்றி யோசிப்போம்"

எல்லோரும் இவனைக் கேலி செய்து சிரித்தார்கள்.

இவனுக்கு ஆத்திரம் வந்தது. அவமானமாக இருந்தது.

அவர்களிலிருந்து பிரிந்து போய், விளையாட்டு மைதானத்தின் மூலையிலிருந்த கல் ஒன்றில் உட்கார்ந்தான்.

கேலிப்பேச்சுகள் முட்களாய் அவன் மனதைக் கீறி ரணப்படுத்தின.

சிறுவனால் அந்த வலியைப் பொறுத்துக் கொள்ள முடிய

வில்லை.

நோவெல்லாம் கோபமாக மாறியது. முழுக் கோபமும் அப்பா, அம்மா மேல் திரும்பியது.

வெறுப்பு.

வெறுப்பு.

அவனுக்கு எல்லாம் வெறுத்தது. அப்பா, அம்மா, வீடு எதுவுமே அவனுக்குப் பிடிக்கவில்லை.

உலகத்திலுள்ள எல்லோருமே தன்னை கேலி செய்வதாக அவன் நினைத்தான்.

அழுகை கூட வந்தது.

எல்லா மாணவர்களும் சத்தமது அலுவல்களில் இருந்தனர்.

சாப்பிட்டு முடித்தவர்கள் விளையாடினார்கள். வீட்டுக்கு போனவர்கள் வந்து கொண்டிருந்தார்கள்.

சூரியன் நடு உச்சிக்கு வந்திருந்தது.

மதிய போசன இடைவேளை மணி ஓசை முடித்து வைத்தது.

மாணவர்கள் வகுப்பறைகளில் அடங்கினார்கள்.

இவன் மட்டும் கல்லின் மேலிருந்து யோசித்துக் கொண்டிருந்தான்.

## 13

பியதாசவும், ரவீந்திரனும் மக்கள் வங்கிப் படிகளில் இறங்கிக் கொண்டிருந்தார்கள்.

பணத்துடன் கள்ளத் தொடர்பு வைத்திருந்த பலர் பாதுகாப்பாக இறங்கி ஏறிக் கொண்டிருந்தார்கள்.

சரியான வெயில்.

தாகம் உண்டாக்கியது.

பியதாசவும், ரவீந்திரனும் பக்கத்திலிருந்த 'கிறீம் கவுசு'க்குள் நுழைந்தார்கள்.

காலி இடம் தேடிப்பிடித்து அமர்ந்ததும் பியதாச இரண்டு 'கிறீம் சர்பத்'துக்கு விண்ணப்பித்தான்.

கோழி சாப்பிட்டுக் கொண்டும், ஐஸ்கிறீம் குடித்துக் கொண்டும் பலர் அவலாக இருந்தார்கள்.

நான்கு மூலைகளிலும் பொருத்தப்பட்டிருந்த ஒலிபெருக்கிகள் ஒரே நேரத்தில் ஒரே பாடலைப் பாடின.

ஆங்காங்கே காற்றாடிகள் சோம்பலாக சுழன்று கொண்டிருந்தன.

"ஏன் சோர்ந்து போய் இருக்கின்றாய்?" பியதாச விசாரித்தான்.

ஒருமையில் கதைக்குமளவிற்கு இருவரும் நல்ல நெருக்கம்.

"ஒன்றுமில்லை" ரவீந்திரன் பதிலை சுருக்கினான்.

சர்பத் இன்னும் வந்து சேரவில்லை.

"இல்லை. நீ எதையோ மறைக்கிறாய். யாழ்ப்பாணம்போய் கொழும்பு வந்த நாளிலிருந்து உன்னில் மாற்றம் தெரிகிறது. நீ முன்பு போல் இல்லை"

பியதாசவின் கண்டுபிடிப்பு ரவீந்திரனை அசத்தியது. அவன் தன்னை நன்றாக கவனித்திருக்கின்றான் என்பதை தெரிந்து கொண்டான்.

காசாளர் பகுதியில் 'பிறிஸ்ரல்' ஏராளமாக வெளியேறிக் கொண்டிருந்தது.

சிலர் போத்தல் கொடுத்து 'நெக்ரோ' வாங்கிக்கொண்டு போனார்கள்.

தன்னுடைய மனதை உறுத்திக் கொண்டிருக்கும் சம்பவங்களை பியதாசவிடம் சொல்லலாமா என்று ரவீந்திரன் யோசித்தான்.

பியதாசவை நினைத்ததும் பழைய சம்பவங்கள் நிழ

லாடின.

1983.

ஆடி மாதம்.

மீண்டும் ஒரு திட்டமிடப்பட்ட இனக்கலவரம்.

காடையர்களினால் அரச படைகளின் ஆதரவுடன் தமிழர்களின் உயிர்கள் பாதுகாப்பாக பறிக்கப்பட்டன.

அரசியல்வாதிகளினால் வளர்க்கப்பட்ட மந்தைகள் கொழிற்கூடங்களை எரித்து தமது தலையில் மண்ணைக் கொட்டிக் கொண்டன.

நடப்பதைப் புரிந்து கொள்ளாத சில்லறைகள் தமிழர் உடமைகளை சூறையாடி வரவு வைத்துக் கொண்டன.

ஏற்கனவே நடந்து முடிந்து போன கலவரங்களினால் செத்துப்போன நீதி வெலிக்கடைச் சம்பவத்தைப் பார்த்த பின் ஆவியாகவும் வரப் பயந்திருக்கும்.

புத்தரின் போதனையில் புதிய சீர்திருத்தங்களை செய்வதற்காக எல்லோரும் கொலையில் கண்ணாக இருந்தார்கள்.

காக்கி உடைகளே கறுப்பானபின் தாம் வாளாதிருப்பது சரியில்லையென நினைத்து காவி உடைகளும் இரத்தத்தில் கை நனைத்துக் கொண்டன.

கொலை.

கொள்ளை.

கொடுமை.

வானொலி, பத்திரிகைகள் தாம் சடப்பொருள்தான் என்பதை நிரூபித்தன.

அயல் நாடுகளுக்கும் இது புதிதில்லையாதலால் அதிக அக்கறை காட்டவில்லை.

ரவீந்திரன் மாமா வீட்டுக்கு கூட போக முடியாமல் பியதாசவின் வீட்டுக்குப் போய்விட்டான்.

பியதாச தனி ஆள். பெற்றோர் உற்றாரை இழந்தவன்.

திருமணம் அவனுக்கு அவசியப்படாததால் மனைவியோ பிள்ளைகளோ அவனுக்கு இல்லை.

ரவீந்திரனை அவன்தான் தன்னுடைய வீட்டுக்கு கூட்டிக் கொண்டு போய் பாதுகாப்பளித்தான்.

ரவீந்திரனை பியதாச வெளியே போகவும் விடவில்லை. வெளியிலிருந்து யாரும் வரவும் விடவில்லை.

தானே சமைத்து சாப்பாடும் கொடுத்தான்.

ரவீந்திரனுக்காக தன்னுடைய பொழுது போக்குகளை கூட தியாகம் செய்து விட்டான்.

காட்டுமிராண்டித்தனமாக நடந்து கொள்ளும் இனத்தில் இப்படி ஒருவனா? என்று ரவீந்திரன் வியந்து போனான்.

தன்னால் அவன் சிரமப்படுவதை விரும்பாமல் தன்னை அகதி முகாமில் கொண்டு போய் விடும்படி பலமுறை கேட்டுக் கொண்டான்.

பியதாச முதலில் மறுத்து விட்டான்.

ஆனால் நிலைமை மேலும் மோசமாகி தன்னுடைய நண்பர்களில் நம்பிக்கை இழந்த பின் ஒரு இரவு ரவீந்திரனை பாதுகாப்பாக கொண்டு போய் அகதி முகாம் ஒன்றில் சேர்த்து விட்டான்.

அதன் பின் அடிக்கடி அகதிமுகாமுக்குப் போய் நண்பனை பார்த்துக் கொண்டான். கொண்டு செல்லும் உணவு, உடைகளை ரவீந்திரனுக்கு மட்டும் அல்லாது ஏனைய அகதிகளுக்கும் கொடுத்தான்.

இதனால் ரவீந்திரனோடு மற்றவர்களும் பியதாசவின் வருகையை ஆவலுடன் எதிர்பார்த்தார்கள்.

கப்பலில் ஊர் திரும்பி நாட்களை செலவழித்தபின் வயிற்றுப் பிழைப்புக்காக மீண்டும் பழைய வேலைக்கே ரவீந்திரன் வந்து விட்டான்.

தன்னை மறைத்து வைத்த குற்றத்திற்காக பியதாச தாக்கப்பட்ட செய்தியை சக நண்பர்கள் மூலம் பின்னர் ரவீந்திரன் அறிந்து கொண்டான்.

இதன்பின் பியதாச மேல் பற்றும், பாசமும் அதிக

மாயிற்று.

"மனைவியை நினைத்துக் கொண்டிருக்கிறாயா?"

பியதாசவின் குரல் ரவீந்திரனின் நினைவுகளை கலைத்தது.

இவனிடம் எல்லாவற்றையும் சொல்லி விடுவது என்ற முடிவுடன் நந்தினியுடன் ஏற்பட்ட தகராறுகளை சொல்ல ஆரம்பித்தான் ரவீந்திரன்.

ஒலிபெருக்கியில் குரல்கள் மாறிக் கொண்டிருந்தன.

வெயிலை சபித்துக் கொண்டே பலர் குளிர்பானம் சாப்பிட்டார்கள்.

ஜஸ் கிறீம்களும், சோடாக்களும் விரைவில் காணமல் போயின.

ரவீந்திரன் சொல்லி முடிக்கும்வரை காத்திருந்து விட்டு சிரிக்க ஆரம்பித்தான் பியதாச.

ஏன் என்று புரியாமல் அவனையே பார்த்தான் ரவீந்திரன்.

"இதுவும் ஒரு பிரச்சனையா? இதை நினைத்து நீ யோசிக்கிறாயா?"

ரவீந்திரன் மௌனமாக இருந்தான்.

"உன்னுடைய மனைவி தனது விருப்பப்படி உடைகள் அணிவது ஏன் உனக்கு தவறாகப் படுகிறது? நீ மட்டும் உனது விருப்பப்படி நடக்கலாம். ஆனால் உனது மனைவி மட்டும் தனது விருப்பப்படி நடக்க சுதந்திரமில்லையா? அவளும் ஒரு பெண்தானே?"

"ஒரு கணவனுடைய விருப்பப்படி நடந்து கொள்வது தான் நல்ல மனைவியின் பண்பும், கடமையும். எனக்கு பிடிக்கவில்லை என்று நேரிடையாக சொன்ன பின்பும் அவள் தன்னிஷ்டப்படி நடந்து கொள்கிறாள் என்றால் அது தவறுதானே?"

"தவறில்லை. ஒரு கணவனுடைய விருப்பத்தை நிறைவேற்றுவதுதான் நல்ல மனைவியின் பண்பென்றால், மனைவியின் விருப்பத்தை நிறைவேற்றும் நல்ல பண்புள்ள கணவனாக நீ ஏன் இருக்கக்கூடாது?"

பியதாசவின் கேள்வி ரவீந்திரனை மௌனியாக்கியது.

"மனைவி என்பவள் வாழ்க்கையில் துணையோ, பங்காளியோ தவிர கணவனுக்கு பணிவிடை மட்டுமே செய்யும் வேலைக்காரி அல்ல. கணவனுக்கு சந்தோசத்தை உண்டாக்கும் விளையாட்டுப் பொம்மையும் அல்ல. ஒரு ஆணுக்கு பெண் சுகம் மட்டுமே தேவையென்பதற்காக அல்ல திருமணம். திருமணம் செய்தால் மனைவியை அடிமையாக்கக்கூடாது. கைப்பிடிக்கும் தாரங்களுக்கு சம உரிமை கொடுக்கக்கூடியவர்கள் மட்டுமே திருமணம் செய்ய வேண்டும். மற்றவர்கள் ஒதுங்கிக் கொள்ள வேண்டும்."

ரவீந்திரனுக்கு 'கிறீம் கவுஸ்', பாடல்கள், வியாபாரச் சத்தங்கள் எல்லாம் மறைந்து போதி மரப் புத்தனுக்கு முன்னால் நிற்பதைப் போல உணர்ந்தான்.

பியதாசவின் ஒவ்வொரு வார்த்தைகளும் அவனுள் மின்சார அதிர்ச்சியை ஏற்படுத்தின.

"வீட்டுக்கு யாராவது வந்தால் கணவன் மனைவியை உள்ளே அனுப்பி விடுவான். தலைவன் தானே என்கின்ற திமிர். குடும்பத்தில் பிரச்சனைகளுக்கு தான்தான் முடிவெடுக்க வேண்டும் என்ற சர்வாதிகாரம். ஒரு பெண் பிறந்து, வளர்ந்து, படித்து, சிரமப்படுவது தனியே சமைத்துப் போடுவதற்கும், கணவனுக்கு ஊழியம் செய்யவும், பிள்ளைகள் பெறுவதற்கும், கணவனுடன் படுப்பதற்கும் மட்டும்தானா?"

பியதாசவை தொடர்ந்தும் கதைக்க விட்டால் தன்னை எங்கேயோ கொண்டு போய் விட்டுவிடுவான் என்று பயந்த ரவீந்திரன் இடையில் குறுக்கிட்டான்.

"பியதாச, நான் சொன்னதை விட நீ வேறெங்கோ போய் விட்டாய். என்னுடைய மனைவி அணியும் உடைகள், உடைகளுக்குரிய வரம்பை மீறுகின்றன என்பதனாலேயே நான் அவற்றை விரும்பவில்லையே ஒழிய மனைவியை கட்டுப்படுத்த வேண்டும் என்ற நோக்கில் அல்ல."

"அப்படியானால் அதை பக்குவமாக அவளிடம் சொல்லிவிடு."

"சொல்லிவிட்டேனே?"

"அப்படியல்ல. இதை எடு என்று சொன்னால் அது உத்

தரவு. இதை எடுத்து தருவீர்களா என்று சொன்னால் அது நாகரிக மானது. கருத்து ஒன்றாயிரம் சொல்லும் விதத்தில்தான் தங்கியுள்ளது"

ரவீந்திரன் யோசித்தான். தவறு தன்னுடையது தானோ என்ற சந்தேகம் கூட வந்தது. பிரதாப கதைக்க கதைக்க அது உறுதியாயிற்று.

கொண்டு வந்து வைக்கப்பட்ட சர்பத்தை இருவரும் ருசி பார்த்தார்கள்.

ரவீந்திரன் தனது மனம் தெளிவாகியதை உணர்ந்தான். பிரதாபவுக்கு மனதிற்குள் நன்றி சொன்னான்.

கடையிலிருந்து வெளியேறி பஸ் தரிப்பை நோக்கி செல்கையில் ரவீந்திரன் சொன்னான்.

"கோட்டையில் இறங்க வேண்டும். ஞாபகமாக இரு"

"ஏன்?"

"நந்தினிக்கு கதைப்புத்தகங்கள் வாங்க வேண்டும்" உற்சாகமாகச் சொன்னான் ரவீந்திரன்.

## 14

முப்பது நிமிடங்கள் முன்னதாகவே ரவீந்திரன் தனது வேலையை முடித்து விட்டான்.

அவசரஅவசரமாக வந்து புறப்பட்டுக் கொண்டிருந்த மினிபஸ்ஸில் ஏறிக் கொண்டான்.

நந்தினியுடன் எப்படியும் சமரசம் செய்து கொள்ள வேண்டும் என்பதுதான் மனம் முழுவதும் நிறைந்திருந்தது.

அநியாயமாக அவளுடன் தான் சண்டை பிடித்துக் கொண்டதாக நினைத்துக் கொண்டான்.

மாமா வீட்டுக்கு விருந்திற்கு போன தினத்தில் ரேகாவும், கார்த்திக்கும் கேலி செய்ததாலும், குடும்பத்தில் எதாவது பிரச்சனைகளா என்று ரேகா கேட்டதாலும் ஏற்பட்ட கோபத்தில் இரண்டு, மூன்று தினங்கள் தான் நந்தினியுடன் கதைக்காததை நினைத்துப் பார்த்தான்.

தெரிந்தவர்கள் யாருமே இல்லாத புதிய இடத்திற்கு நந்தினியை அழைத்து வந்து விட்டு தான் அவளுடன் சண்டை பிடித்தால் அவளால் எப்படி ஜீரணித்துக் கொள்ள முடியும் என்று நினைக்கையில் அவனுக்கு துக்கமாயிருந்தது.

மினிபஸ் சிலிங்கோ கவுசை கடந்து காலிமுகத் திடலுக்கு வந்து கொண்டிருந்தது.

ஈரமான காற்று தாராளமாக வீசியது.

ஆர்ப்பரித்து வந்த பெரிய அலைகள் கரையை அண்மித்ததும் காணமல் போயின.

சிறுவர்கள் காற்றாடிகளை கட்டுப்பாட்டில் வைத்திருந்தார்கள்.

ஜனங்கள் இங்குமங்கும் நடந்து கொண்டும், சாப்பிட்டுக் கொண்டுமிருந்தார்கள்.

போக்குவரத்து நெரிசலால் மினிபஸ் ஊர்ந்து போகவேண்டியதாயிற்று.

ரவீந்திரன் ஜன்னலால் கடலைப் பார்த்து ரசித்துக் கொண்டிருந்தான்.

திடீரென அவன் திடுக்கிட்டான்.

ஐஸ் கிறீம் வாகனம் ஒன்றின் அருகே நந்தினி நின்றிருந்தாள்.

அவள் நந்தினிதானா என்று ஐயத்துடன் உற்றுப்பார்த்தான் ரவீந்திரன்.

நந்தினியேதான்.

ரவீந்திரனால் நம்பவே முடியவில்லை.

'யாருடன் வந்தாள்? எப்படி வந்தாள்?'

ரவீந்திரனுக்கு மனதிலிருந்த உற்சாகமெல்லாம் காணமல் போயிற்று.

தொடர்ந்து அவன் கண்ட காட்சி அவனை இன்னும் அதிர வைத்தது.

இரண்டு ஐஸ்கிறீம்களை வாங்கிக் கொண்ட இளைஞன் ஒருவன் ஒன்றை நந்தினியிடம் நீட்ட அவள் வாங்கிக் கொண்டாள்.

அந்த இளைஞனின் பின் பக்கத்தையே ரவீந்திரனால் பார்க்க முடிந்ததால் ஆளை அடையாளம் காண முடியவில்லை.

மினிபஸ் கொஞ்சம் கொஞ்சமாக வேகமாகியது.

நந்தினியும் அந்த இளைஞனும் பார்வையிலிருந்து விலகினார்கள்.

ரவீந்திரன் படபடப்பானான். இனம் காண முடியாத உணர்ச்சிகள் மனதை தொந்தரவு செய்தன.

அடுத்த பஸ் தரிப்பிலேயே அவன் இறங்கிக் கொண்டான்.

வேகமாக காலி முகத்திடலை நோக்கி நடந்தான்.

பகல் பியதாசவின் உதவியுடன் மனதை சுத்தப்படுத்தியது வீணாய் போனது.

கோபம்.

சந்தேகம்.

எல்லாம் கலவையாக மனதில் படிந்து பாரமாகிக் கொண்டிருந்தன.

ரவீந்திரன் காலிமுகத்திடலுக்கு வந்து விட்டான்.

கும்பலை ஊடறுத்து தனது இலக்கை நோக்கி விரைந்தான்.

அவர்களை காணவில்லை.

ஏமாற்றத்துடன் சுற்றுமுற்றும் பார்த்தான். நடந்தான்.

தூரத்தில் அவர்கள் இருவரும் நெருக்கமாகப் போவது தெரிந்தது.

வேகமாக அவர்களை நோக்கிப் போனான் ரவீந்திரன்.

## 15

துண்டானவை, பழுதுபட்டுப் போனவை, வாடிப்போனவை என்று பலதரப்பட்ட மரக்கறிகள் கிழிந்து போன பொலித்தீன் பேப்பரின் மேல் அழுது கொண்டிருந்தன.

விற்பனையாளி மர வேரில் வசதியாக அமர்ந்து பாண் கடித்துக் கொண்டிருந்தாள்.

அவ்வப்போது யாராவது வந்து பாதி விலை கொடுத்து வாங்கிக் கொண்டு போனார்கள்.

மரத்தின் மேலிருந்த காகங்கள் விற்பனையாளி மிச்சம் வைக்கப் போகும் பானுக்காக தவம் செய்து கொண்டிருந்தன.

சிறிது தூரம் தள்ளி மீன் வைத்திருந்தவன் இலையான்களுடன் மகாநாடு நடாத்திக் கொண்டிருந்தான்.

கனகேஸ்வரி அவனிடம் இருந்து புறப்பட்டு மரக்கறிக்கு வந்தாள்.

"தக்காளிப்பழம் என்ன விலை?"

"பாத்தெடேன்" அவள் பான் தின்று முடியவில்லை.

கனகேஸ்வரி குந்தியிருந்து தக்காளிப்பழங்களை தெரிவு செய்தாள்.

"கீரை இண்டையாதோ?"

"பகிடி விடுறியே? விடியக்காலத்தால நடந்து சந்தைக்கு போட்டு வாறன்" பான் முடிந்து விட்டது.

காகங்கள் ஏமாற்றமாய் பறந்து போயின.

காசைக் கொடுத்து விட்டு பையுடன் எழுந்தாள் கனகேஸ்வரி.

பாதையில் காமாட்சி எதிர்ப்பட்டாள்.

"என்ன கனகு மரக்கறி வாங்கிக் கொண்டு வாறாய் போல"

கோயிலிலிருந்து வருவதைப் பார்த்து விட்டும் கோயிலால வாறாய் போல என்று கேட்பது சிலரது வழக்கம்.

"மீனுக்குத்தான் வந்தனான். நெருப்பு விலை சொல்லுறான். அதுதான் மரக்கறி வாங்கிக் கொண்டு போறன்"

"பிள்ளை கடுதாசி போட்டதோ?"

"கன நாளாய் காணேல"

"உந்தப் பிரச்சனையளுக்க கடுதாசி எப்பிடி வாறது?"

"வரட்டே. இனித்தான் சமைக்க வேணும்" கனகேஸ்வரி சொல்லிக் கொண்டே போனாள்.

வீட்டை நெருங்கும் போது வளவைப் பார்த்தாள்.

அநேகமான இடம் காய்ந்து வறண்டு போயிருந்தது. இரண்டொரு செவ்வரத்தம் மரங்கள் மட்டும் பச்சையாக இருந்தன. புற்கள் எல்லா இடமும் அமுமதிக்கப் பட்டிருந்தன.

நேராக சமையலறைக்குப் போய் சமையலை ஆரம்பித்தாள் கனகேஸ்வரி.

அடுப்பை மூட்டி பற்ற வைத்த பின் காய்கறிகளை வெட்ட ஆரம்பிக்கையில் வாசலில் மகாலிங்கம் வந்து நின்றார்.

அப்போதுதான் அவர் வெளியே போய் விட்டு வந்திருந்தார்.

"லெற்றர் வந்ததே?"

"இல்லை"

மகாலிங்கம் போய் விட்டார்.

கைகள் இயந்திரத்தனமாய் வேலை செய்ய மனம் சிந்தனை ஆளிகளை அழுத்தியது.

கொஞ்ச நாட்களாகவே அவளுக்குள் பல சந்தேகங்கள் அவதரித்திருந்தன.

'என்னுடைய குடும்ப வாழ்வில் சரியாக நடந்திருக்கிறேனா?'

'கணவனுடன் சரியான முறையில் நடந்து கொண்டேனா?'

'இப்போது நல்லபடியாக கணவரை கவனித்துக் கொள்கிறேனா?'

தனிமை அவளை சிந்திக்க வைத்தது. பழைய ஞாபகங்களை நினைத்துக் கொள்ள வைத்தது.

'எப்போதிலிருந்து நான் மாறினேன்?'

'திருமணம் முடிந்தவுடனேயா?'

'கணவரிடமிருந்து காசு பறிக்கப்படுவது தெரிந்தபோதா?'

'கணவரைப்பற்றி ராசு சொன்னதைக் கேட்டதிலிருந்தா?'

எப்படிப்பட்டதொரு தகவலை அன்று ராசு குடிவெறியில் மிகச் சாதாரணமாகச் சொல்லிவிட்டுப் போனான்.

"உன்ரை புருசன் முந்தி ஒரு பெட்டையை லவ் பண்ணினவர்

தெரியுமே? இரண்டு, மூண்டு வருசமா நல்ல சிநேகிதம்"

கனகேஸ்வரியால் முதலில் இதை நம்ப முடியவில்லை.

பல கேள்விகளை அவனிடம் கேட்டாள். வெறியிலும் அவன் அனித்தரமாக திரும்ப திரும்ப ஒரே பதிலையே சொன்னான்.

கனகேஸ்வரி விரக்தியடைந்தாள்.

தன்னால் கிடைக்கும் சீதனத்திற்காகவே மகாலிங்கம் தன்னுடைய காதலைக் கைவிட்டார் என்ற முடிவுக்கு அவள் வரவேண்டியதாயிற்று.

இதன்பின் மகாலிங்கத்தைப் பார்க்கும் போதெல்லாம் பணத்தையே குறிக்கோளாக கொண்டவர் என்ற வெறுப்பு ஏற்படுவதை அவளால் தடுக்க முடியவில்லை.

வாய்ப்பு கிடைக்கும் போதெல்லாம் கனகேஸ்வரி மகாலிங்கத்தைக் குத்திக் காட்டினாள். தனது உறவினர்கள் முன்னாலேயே மகாலிங்கத்தை ஏளனம் செய்தாள்.

மகாலிங்கத்தின் குடும்பத்தினரை வெறுத்து ஒதுக்கினாள்.

மகாலிங்கம் ஆரம்ப நாட்களில் மும்முரமாக அவளை எதிர்த்தார். நாளடைவில் சோர்வடைந்தார்.

மனச்சாட்சியும் அவருடன் பேசியிருக்க வேண்டும். அதன் பின் அநேகமாக அவர் மௌனியாகவே இருந்து கொண்டார்.

அவரது சத்தம் அடங்க கனகேஸ்வரி தனது எதிர்ப்பை அதிகரித்தாள்.

தன்னுடைய எதிர்ப்பு நடவடிக்கைகள் வேறொரு ஆபத்தை தூண்டுவதை அவள் அறியவில்லை.

ஒரே வீட்டில் இருந்தாலும் அவர்கள் கணவன் மனைவியாக இருக்கவில்லை.

சுவர்களுக்குள் இருந்த விசயம் நாளடைவில் ஊர் முழுவதும் தெரிய வந்தது.

மகாலிங்கத்தின் குடும்பத்தினர் அவளை வில்லியாக உருவகப்படுத்தி தமக்கு வேண்டியவர்களுக்கு பிரச்சாரம் செய்ததில் கனகேஸ்வரி இன்னும் கொதித்துப் போனாள்.

வாய் சண்டையில் தொடங்கியது பேச்சுவார்த்தைகளையே

முறித்தது.

நான் நன்றாக அவரைப் பழி வாங்கி விட்டேன், வெற்றி கிடைத்து விட்டது என்ற இறுமாப்பில் கனகேஸ்வரி பூரித்த போது தான் வதந்திகளாய் சில செய்திகள் காதில் விழுந்தன.

வதந்திதானே என்று கனகேஸ்வரி அலட்சியமாக இருந்தாள்.

ஆனால் ஒரு நாள் வதந்தி உருவமாகி இவளுடன் நேரே கதைத்த போது கனகேஸ்வரி தவித்துப் போனாள்.

## 16

ரவீந்திரன் உடைகளை இஸ்திரி பண்ணிக் கொண்டிருந்தான்.

வானொலியில் நேயர் விருப்பம் நடந்து கொண்டிருந்தது.

நந்தினி சுஜாதா வீட்டுக்குப் போயிருந்தாள்.

சில மாதங்களிலேயே இருவரும் உயிர் தோழிகளாகி விட்டார்கள். நந்தினி சிங்களம் படித்துக் கொண்டதோடு சுஜாதாவுக்கு தமிழும் சொல்லிக் கொடுத்தாள்.

அவர்களின் உணவுவகைகளை தான் பழகிக் கொண்டதுடன் தனக்குத் தெரிந்தவற்றை அவர்களுக்கு சொல்லிக் கொடுத்தாள்.

நந்தினியை சுஜாதா வீட்டில் ஒரு குடும்ப அங்கத்தினராகவே கணித்துக் கொண்டார்கள்.

அரசியல்வாதிகளின் கத்தல்களை செவிமடுக்காததாலும், பத்திரிகைகள், வானொலியில் கவனம் செலுத்தாததாலும் இனம், மதம், மொழி எதுவும் அவர்களுக்கு பிரச்சனையாயிருக்கவில்லை.

தாங்கள் ஏதாவது விசேசங்களுக்குப் போகையில் நந்தினியையும் கூட்டிப் போக அவர்கள் மறப்பதேயில்லை.

இவர்களின் நட்பு ரவீந்திரனுக்கு ஒருவகையில் சந்தோசத்தை தந்தாலும் இன்னொருவகையில் அதிருப்தியையும் அளித்தது.

தெரிந்தவர்கள் யாருமே இல்லாத இடத்தில் நந்தினிக்கு இப்படி ஒரு துணை கிடைத்திருக்கிறதே என்பதில் சந்தோசம்.

இப்படி ஒரு துணை கிடைத்தபடியால்தான் நந்தினி தனது இஷ்டப்படி வெளியே புறப்பட்டுப் போகிறாள் என்பதில் அதிருப்தி.

தன்னிடம் அனுமதி கேட்காமல் அவள் நடந்து கொள்வதைப் பார்க்கையில் அவள் தன்னை மதிக்கவில்லையோ என்று அவன் நினைக்க வேண்டியிருந்தது.

முன்பொருநாள் அவளைக் காலிமுகத்திடலில் சந்தித்த காட்சியை நினைவுகூர்ந்தான்.

அவளுடன் ஒரு இளைஞன் நிற்பதைப் பார்த்து விட்டு அவசரமாக அவர்களைத் தேடியது. அவர்களை கண்டுபிடித்ததும் நந்தினியுடன் நின்றது இளைஞன் அல்ல இளைஞி சுஜாதா தான் என்பதை அறிந்து ஆறுதல் அடைந்தது.

அன்று மட்டும் தான் அவர்களைத் தேடி நேரில் பார்க்காமல் போயிருந்தால் என்ன நடந்திருக்கும் என்பதையே அவனால் நினைத்துப் பார்க்க முடியவில்லை.

சந்தேகம் பொல்லாதது என்று சொல்லிக் கொண்டான்.

நந்தினி அவனுக்குப் புதிராகவே இருந்தாள்.

சாவகச்சேரியிலிருந்த நந்தினிக்கும் வெள்ளவத்தையிலிருக்கும் நந்தினிக்கும் நிறையவே வேறுபாடுகளை அவன் கண்டான்.

அவள் ஏன் இப்படி நடந்து கொள்கிறாள் என்பதை அவனால் புரிந்து கொள்ளவே முடியவில்லை.

அவளுடைய நடவடிக்கைகளை ஒன்று சேர்த்துப் பார்த்ததில் ஒரு உண்மை அவனுக்குப் புரிந்தது.

அதாவது எதைச் செய்யக் கூடாது என்று அவன் தடுக்கிறானோ அதை வலுக்கட்டாயமாக நந்தினி செய்கின்றாள்.

அப்படியானால் அவள் என்னை மதிக்கவில்லையா?

அல்லது வேண்டுமென்றே ஆத்திரமூட்டி பரீட்சித்துப் பார்க்கிறாளா?

அல்லது என்னை அவளுக்குப் பிடிக்கவில்லையா?

இந்தக் கேள்வி பிறந்ததும் ரவீந்திரன் நிதானித்தான். தனது திருமணத்தை திரும்ப நடாத்திப் பார்த்தான்.

பெண் தயார் என்று அப்பா, அம்மா கடிதம் போட்டது.

ஊருக்குப் போனதும் நந்தினியின் படத்தை மட்டும் காட்டியது.

தரகர் மூலமாகத்தான் எல்லா ஏற்பாடுகளும் நடக்கின்றன என்பதை அறிந்தது.

ஒரே ஒரு முறை மட்டும் அப்பாவுடன் நந்தினி வீட்டுக்குப் போய் தேநீர் குடித்து விட்டு வந்தது.

நந்தினியின் கழுத்தில் தாலி அணிவித்தது.

எல்லாமே அவசரமாக நடந்து முடிந்து விட்டன.

இடையில் ரவீந்திரனும், நந்தினியும் மனம் விட்டுக் கதைப்பதற்கே சந்தர்ப்பம் கிடைக்கவில்லை.

இது பெரிய தவறு என்பதை ரவீந்திரன் இப்போதுதான் உணர்ந்தான்.

அவளுக்கு இந்த திருமணத்தில் விருப்பமில்லாமல் இருந்து பெற்றோர் கட்டாயப்படுத்தி சம்மதிக்க வைத்திருக்கலாம்.

அல்லது வேறு யாரையாவது காதலித்திருக்கலாம்.

வித்தியாசமான மணம் நாசியைத் தாக்க ரவீந்திரன் எண்ணங்களிலிருந்து வெளியே வந்தான்.

அவனுடைய அழகான மேற்சட்டை எரிந்து போயிருந்தது.

அவசரமாக இஸ்திரிகைப் பெட்டியை தூக்கி அதற்குரிய இடத்தில் வைத்தான். எரிந்து போன சட்டையை கவலையுடன் கதிரையில் வைத்தான்.

அவனால் தொடர்ந்து இஸ்திரி போட முடியவில்லை.

மனம் தத்தளித்துக் கொண்டிருந்தது. திரும்ப திரும்ப ஒரே கேள்வி அவனை உபத்திரவப்படுத்தியது.

'நந்தினி யாரையாவது காதலித்தாளா?'

அவள் நடந்து கொள்ளும் முறைக்கு இந்த ஒரு காரணத்தை தவிர வேறெதையும் ரவீந்திரனால் ஏற்றுக் கொள்ள முடியவில்லை.

இஸ்திரிகைப் பெட்டியுடனான மின் இணைப்பை துண்டித்து விட்டு சோர்வுடன் கதிரையொன்றில் அமர்ந்தான்.

தலையை வலித்தது.

மறுபடி யோசனைகள். யோசனைகள்.

முதல் தவறு தன் மீதே என்பதை ரவீந்திரன் உணர்ந்தான்.

அப்பா, அம்மா சொல்லி விட்டார்களே என்பதற்காக அவசரமாக யாரோ ஒரு பெண்ணை மனைவியாக்குவதா?

பெண் என்றால் அவளுக்கென்று விருப்பு, வெறுப்புகள் இருக்கக் கூடாதா? அவளாகவே சொல்ல வெட்கப்பட்டாலும் என்னைப் பிடித்திருக்கிறதா என்று நானாவது தைரியமாகக் கேட்டிருக்கலாமே?

அந்த நேரம் என்னுடைய மூளை எங்கே போய்விட்டது?

முன்பின் அறிமுகமில்லாத பெண் என்னை கட்டாயமாக விரும்புவாள், எனக்கு கட்டுப்பட்டு நடப்பாள் என்று எதிர்பார்த்தது எனது முட்டாள்தனம் தானே?

சீ. எவ்வளவு படித்து என்ன பிரயோசனம். என்னுடைய திருமணத்திலேயே அறிவீனமாக நடந்து கொண்டேனே?

ரவீந்திரன் தன்னையே நொந்து கொண்டான்.

இந்தச் சிக்கலுக்கு எப்படித் தீர்வு காண்பது?

இன்றே நந்தினியுடன் மனம் விட்டுக் கதைத்து விடுவது. அவளது முடிவுகளுக்கேற்ப பின்னர் நடந்து கொள்வது.

இப்படி முடிவெடுத்தபின் ரவீந்திரன் இஸ்திரி செய்யப்பட்ட, படாத உடைகளை எடுத்துக் கொண்டு போய் அலுமாரிக்குள் அடுக்கினான்.

அலுமாரியை மூடிவிட்டுத் திரும்பியபோது கட்டிலுக்கு கீழிருந்த சூட்கேஸ் அவன் கண்ணில் பட்டது.

குனிந்து அதை வெளியே எடுத்து திறந்து பார்த்தான்.

அடியில் பத்திரிகைத் துண்டொன்றைத் தவிர வேறொன்றுமில்லை.

மூடப் போகையில் மூலைக்குள் ஒளித்திருந்த சிறிய பூச்சியொன்றை அவதானித்து விட்டான். அப்படியே சூட்கேசை கவிழ்த்து தட்டினான்.

பூச்சி, பத்திரிகைத் துண்டுடன் இன்னொரு துண்டும் கீழே விழுந்தது.

ரவீந்திரன் சூட்கேசை மூடி பழைய இடத்தில் வைத்தான்.

பத்திரிகைத்துண்டுடன் இருந்த மற்றைய துண்டை கையில்

எடுத்த போதுதான் அது ஒரு புகைப்படம் என்று தெரிந்தது.

ரவீந்திரன் ஆச்சரியத்துடன் பார்த்தான்.

இதுவரை இவனுக்குப் பழக்கமில்லாத இளைஞனின் முகம்.

இது எப்படி நந்தினியின் சூட்கேசில் வந்தது என்று அவன் யோசித்துக் கொண்டிருக்கும் பொழுது வெளிக்கதவு திறந்து மூடும் சத்தம் கேட்டது.

ஏராளமான கேள்விகளுடன் ரவீந்திரன் தயாரானான்.

## 17

"கொப்பரும் கொம்மாவும் சண்டையாம்"

"ரண்டு பேரும் கதைக்கிறேலயாம்"

பழகிப் போன, பழசாகிப் போன கேள்விகள்.

இவன் ஒதுங்கிப் போனாலும் துரத்தி வந்து குத்தி விடுகின்றன.

ஏன்?

அவன் மனம் அலறியது.

ஏன் எல்லோரும் என்னை சித்திரவதை செய்கிறீர்கள்?

வீட்டில் இல்லாத நிம்மதியை பாதையில் தேடினால் அதற்கும் விடமாட்டீர்களா?

இவனுக்கு உரத்துக் கத்த வேண்டும் போலிருக்கிறது. ஆனால் கத்தவில்லை.

அழவேண்டும் போலிருக்கிறது. ஆனால் அழவில்லை.

உணர்வெல்லாம் வற்றி விட்டது. மனம் மரத்துப் போய் விட்டது.

தனிமை.

தேவை தனிமை மட்டுமே.

கேள்விகள் கேட்கப்படாத, தொந்தரவுகள் இல்லாத ஒரு இடம் தேவை.

"ஊரவர்களே, நான் உங்களுக்கு என்ன கெடுதல் செய்தேன்

என் என்னை ஒன்புறத்தைக்கிறீர்கள்? அடுத்தவர்களின் பிரச்சனைகளை வம்பளப்பதில் உங்களுக்கு என்ன இன்பம்?

நான் மறக்க விரும்புவதை கேள்விகளால் நினைவூட்டுவதில் உங்களுக்கு என்ன அக்கறை? ஒரே கேள்விகளையே திரும்ப திரும்ப கேட்டு உங்களுக்கு அலுக்கவில்லையா?

உங்கள் வீட்டுப் பிரச்சனைகளை முதலில் தீர்த்துக் கொள்ளுங்கள். அடுத்த வீட்டிற்குள் அநாகரிகமாக எட்டிப்பார்க்காதீர்கள்.

முகம் தெரியாத நபர்களையெல்லாம் இவன் சபித்துக் கொண்டிருந்தான். அவனது உணர்ச்சிகளுக்கு வடிகாலாக இருக்க எந்த மனமும் தயாராக இல்லை.

நாட்கள் செல்லச் செல்ல வீட்டைத் தவிர்த்து வெளியிலேயே தங்க ஆரம்பித்தான்.

இதையும் அவன் பெற்றோர் கண்டு கொள்ளவில்லை.

"பிள்ளையை வளக்கத் தெரியேல. சும்மா கதிரைக்குப் பாரமா சாப்பிட்டுக் கொண்டிருங்கோ" என்று அம்மாவும்,

"வீட்டில என்ன வெட்டிப் புடுங்கிறாய்? பிள்ளையை நீ கவனிச்சா என்ன" என்று அப்பாவும் அடிபட்டுக் கொண்டார்களே தவிர பிள்ளைகளில் அக்கறை காட்டவில்லை.

இது இவனுக்கு வசதியாகவே போய் விட்டது.

ஒரு ஆதரவைத் தேடித்தான் இவன் வெளியே நடமாடுகிறான். என்றாவது கிடைக்கும் என்ற நம்பிக்கையில்.

தேடுதல் வீண் போகவில்லை.

இவனைப் புரிந்து கொண்ட இதயம் ஒன்று தன்னை அடையாளம் காட்டியது.

இந்த ஆதரவு இவனது வீட்டில் தெரிய வந்த போதுதான் பெற்றோர் விழிப்படைந்தார்கள்.

ஆனாலும் காலதாமதமாகிவிட்டது.

# 18

கடிதத்தைப் பிரித்த விசுவநாதன் படித்ததும் திடுக்கிட்டார்

"என்னடா இது. பிள்ளையார் பிடிக்க குரங்கு துவக்கோட வந்து நிக்குது"

"என்னப்பா உங்கட பாட்டில கதைக்கிறியள்? பிள்ளையார் எப்ப துவக்கு வைச்சிருந்தவர்?" கேட்டுக் கொண்டே வந்த மனோன்மணி அப்போதுதான் அவர் கையிலிருந்த கடிதத்தைப் பார்த்தாள்.

"ஆரப்பா கடிதம் போட்டது?"

"பழனியப்பா. கொஞ்சம் பேசாம கிட. நான் ஏதோ சிந்தனையில் இருக்கிறன்" விசுவநாதன் எரிந்தார்.

'சீ. ஒரு விசயத்தை மறைக்கப் போய் இப்ப என்ன சிக்கல் வந்திருக்கு. என்ரை புத்தியை வடிவான செருப்பால அடிக்க வேணும். அப்பவே வேலுப்பிள்ளை அண்ணை படிச்சுப்படிச்சுச் சொன்னவர். நான்தான் மடத்தனமாய் பிழை விட்டிட்டன்.'

"கருதாசி ஆர் போட்டதென்டு கேக்கிறன். கத்திறியள். ஆரப்பா போட்டது?" மனோன்மணி விடவில்லை.

"இந்தா பிடி. கொண்டு போய் வைச்சுப் பாடமாக்கு" கடிதத்தை நீட்டினார் விசுவநாதன்.

'கருதாசியைக் கேட்டா இந்த மனுசன் ஏன் வள்ளென்டு பாயுறார்' மனோன்மணி புறுபுறுத்துக் கொண்டே கடிதத்தைப் படித்தாள்.

முழுவதையும் வாசித்து முடித்தவுடன் மனோன்மணியின் முகமே மாறிவிட்டது.

"என்னப்பா பெடியன் புதுக்கதையெல்லாம் எழுதியிருக்கின்றான்?" மனோன்மணி பதறினாள்.

"கவிதை சரிவரேல போல. அதுதான் கதையில தொடங்கியிருக்கிறான்"

"நான் அந்தரப்படுறன். நீங்கள் பகிடி விடுறியள்"

"என்ரை பகிடி சரியில்லாட்டி நீ விடு"

"ஐயோ மண்டை வெடிக்குது. உங்களுக்கென்னப்பா பிடிச்சிட்டுது?"

"அதுதான் எனக்கும் தெரியேல. கொஞ்சம் பொறு.

ஆரேன் வந்தா கேப்போம்"

மனோன்மணிக்குத் தலையைப் பிய்த்துக் கொண்டு ஓட வேண்டும் போலிருந்தது. ஆனால் ஏற்கெனவே அநேக மயிர்கள் காணமல் போயிருந்ததால் அந்த யோசனையைக் கைவிட்டு அறைக்குள் போய் விட்டாள்.

விசுவநாதன் ஜன்னல் கம்பிகளைப் பிடித்தபடி வெளியே பார்த்துக் கொண்டிருந்தார்.

பப்பாசிப்பழத்தில் சுரங்கம் அமைக்கும் காகம், சாகச விளையாட்டுக் காட்டும் அணிற்பிள்ளைகள், தேருதல் வேட்டை நடாத்தும் மரங்கொத்தி எதுவுமே அவர் கவனத்தை கவரவில்லை. சிக்கலை எப்படித் தீர்க்கலாம் என்பதில் ஒரே குறியாக இருந்தார்.

"வேலைப்பிள்ளை அண்ணையை உதவி கேட்போமோ? அவர் என்னத்தைச் செய்யிறது? விசயத்தைச் சொன்னல் அந்தாள் என்னோடைதான் பாயும்.'

'அப்ப என்ன செய்யலாம்?

'ஆ. இப்பிடிச் செய்தா என்ன? பிரச்சனைக்கு காரணமே குமார் தானே. அவனையே நேர போய் பிடிச்சா சரி. ஆனு விலாசம் தெரியாதே. எப்பிடிக் கண்டு பிடிக்கிறது?'

விசுவநாதன் தனக்குள் கேள்வி பதில் நிகழ்ச்சி நடாத்திக் கொண்டிருந்தார்.

தாகம் எடுத்தது.

"மனோன்மணி கொஞ்சம் தண்ணி கொண்டா" என்று உள்ளே பார்த்துக் குரல் கொடுத்தார்.

"கினத்துக்க இறங்கிக் குடியுங்கோ" உள்ளேயிருந்து பதில் உடனே வந்தது.

"அப்படியும் செய்யலாம்" என்று புறப்பட்டவருக்கு கொஞ்ச நேரத்தின் பின்தான் பதில் புரிந்தது.

"பிறகென்ன மனசிக்கும் பகிடி விடத் தெரியுது" என்றவாறு சமையலறைக்குப் போனர்.

# 19

கனகேஸ்வரி பஸ் தரிப்பு நிலையத்தில் காத்து நின்றாள்.

வரிசை அமைக்கக் கூடிய முறையில் சனங்கள் இல்லை. அங்கொ கொன்றும் இங்கொன்றுமாக கொஞ்சப் பேர் சிதறியிருந்தார்கள்.

கடைகள் கதவுகளை திறந்திருந்தன. நகர்வோர் நிதானமாக நகர்ந்து கொண்டிருந்தார்கள்.

மினிபஸ்கள் வழக்கம் போல் பிரயாணிகளை வருந்தி அழைத்தன. ஏற்கெனவே ஏறி இருந்தவர்களுடன் வட்டமடித்தன.

பாதையில் பொருட்களைப் பரப்பியிருந்த சின்ன வியாபாரி ஒருவன் தள்ளி நின்று பீடி குடித்தான்.

கனகேஸ்வரி பக்கத்தில் நின்ற பருத்த மனிதரிடம் நேரம் கேட்டாள்.

கடிகாரம் இல்லை என்று அவர் வருத்தப்பட்டார்.

இடப் பக்கத்தில் நின்ற பெண் தானாகவே நேரம் சொன்னாள்.

அவளுக்கு நன்றி சொன்ன கனகேஸ்வரி அவளை தான் முன்பு எங்கோ சந்தித்ததாக உணர்ந்தாள்.

நெடுநேரம் அவளை உற்றுப் பார்ப்பது அநாகரிகமானது என்று முகத்தை திருப்பினும் அவளையே நினைத்தாள்.

தாமதமாக பஸ் வந்தது.

எல்லோரும் ஏறி ஜன்னல் பக்கம் தேடினார்கள்.

சாரதியும், நடத்துனரும் தேநீர் குடித்துவிட்டு வந்ததும் பஸ் புறப்பட்டது.

கனகேஸ்வரியின் அருகிலேயே அந்தப் பெண்ணும் அமர்ந்திருந்தாள்.

பஸ் விரைந்தது.

"நீங்க எங்க இறங்குறீங்க?" கனகேஸ்வரி பேச்சை ஆரம்பித்தாள்.

இடத்தைச் சொன்னவள் அடுத்த கேள்வியை தானே கேட்

டாள்.

"உங்களை எங்கயோ கண்ட மாதிரி இருக்கு. எங்க படிச்சனீங்கள்?"

அவள் கேட்டதும் கனகேஸ்வரிக்கு ஆச்சரியமாகப் போய் விட்டது. தான் கேட்க இருந்த கேள்வியை அவளாகக் கேட்டதில் வியப்பு.

கனகேஸ்வரி பாடசாலையின் பெயரைச் சொன்னதும் அவள் சந்தோசித்தாள்.

"அந்தப் பள்ளிக் கூடத்திலதான் நானும் படிச்சனான். நீங்க கனகேஸ்வரி தானே?"

கனகேஸ்வரி தலையாட்டினாள்.

"நான்தான் வசந்தி. என்ன மறந்து போனியள் போல?"

பெயரைக் கேட்டதும் தான் கனகேஸ்வரிக்கு ஞாபகம் வந்தது.

அதனைத் தொடர்ந்து 'நெஞ்சில் நிறைந்தவை', 'நினைவுட்டுகிறேம்' நிகழ்ச்சிகள் ஆரம்பமாயின.

வகுப்பறைகள், ஆசிரியர்கள், கூடப்படித்தவர்கள்.....

விளையாட்டுப் போட்டிகள், கலைவிழாக்கள்.....

வசந்தியும், கனகேஸ்வரியும் வெவ்வேறு வகுப்பில் படித்தாலும் கலைவிழா ஒன்றில்தான் இணைந்து கொண்டார்கள்.

நாடகத்தில் வரும் பாத்திரங்களில் இவர்களும் பங்கேற்றிருந்தார்கள்.

இருவரும் பாடசாலை வாழ்க்கையை நினைவுகூர்ந்து சந்தோசித்தார்கள்.

பஸ் பள்ளங்களில் இறங்கி எறிக் கொண்டிருந்தது.

"நீங்கள் ஓ.எல் எடுத்த உடன பள்ளிக்கூடம் விட்டிட்டியள் என்ன?"

"ஓம்"

"பிறகென்ன செய்தனியள்?"

"கலியாணம்தான்"

இருவரும் சிரித்துக் கொண்டார்கள்.

"நீர் தொடர்ந்து படிச்சனீரே?" கனகேஸ்வரி வசந்தியை விசாரித்தாள்.

"ஒரு வருசம் ஏ.எல் படிச்சனான். பிறகு விட்டிட்டு ஜ.சி. எம்.ஏ.படிச்சன். கொஞ்ச நாளையால அதையும் விட்டிட்டன்."

"இப்ப என்ன செய்யிறீர்?"

"ரெக்ஸிரைல் ஒண்டில வேலை செய்யிறன்"

"மறி பண்ணியிட்டீரா?"

"இன்னும் இல்லை. எல்லாத்துக்கும் நேரம், காலம் வர வேணுமே"

"எப்ப வரும்"

"இப்ப வரும் போல இருக்கு" வசந்தி வெட்கப்பட்டாள்.

"லவ் ஏதேனுமோ?"

வசந்தி இன்னும் அதிகமாக வெட்கப்பட்டாள்.

"பிரச்சனையள் ஒண்டும் இல்லையோ?"

"இப்ப கொஞ்ச நாளாத்தான் பழகுறோம்"

"ஆள் எப்பிடி"

"நல்ல மனுசன். விடிய நான் வேலைக்கு வாற பஸ்ஸிலதான் அவரும் வேலைக்கு வாறவர். பின்னேரமும் அப்பிடித்தான். நான் வேலை முடிஞ்சு வாற பஸ்ஸிலதான் அவரும் வாறவர்."

"ஒரே இடத்திலதான் வேலை செய்யிறியளோ?"

"சீச்சீ. அவர் வேற இடத்தில. சந்திக்கிறது மட்டும் தான் பஸ்ஸில."

"ஒகோ. இது பஸ் காதல்"

இருவரும் சேர்ந்து சிரித்தார்கள்.

குறுக்கே போன மாடொன்றுக்காக தடைப்பு போட்ட பின் சாரதியின் 'நல்ல' வார்த்தைகளுடன் பஸ் பயணத்தை தொடர்ந்தது.

மரங்கள் விரைந்து விரைந்து பின்நோக்கிப் போயின.

மின்சார கம்பிகள் பாதுகாப்பாக கூடவே வந்து கொண்டிருந்தன.

பஸ்ஸினுள் ஆட்கள் குறைந்து கொண்டே வந்தார்கள்.

நடத்துனர் கைவிரல்களுக்குள் வைத்திருந்த தாள்களை எச்சில் தொட்டு எண்ணிக் கொண்டிருந்தார்.

"என்ரை அட்ரசைத் தாறன். இங்கால வந்தா வாங்கோ" வசந்தி பேனையையும், கடுதாசித் துண்டையும் கைப்பையில் தேடினாள்.

அப்போது எதேச்சையாக உள்ளேயிருந்த புகைப்படம் ஒன்று கனகேஸ்வரியின் கண்களில் பட்டது.

மாநிறமாய், சுருள் முடியுடன் மகாலிங்கம் சிரித்துக் கொண்டிருந்தார்.

## 20

ரவீந்திரன் சொல்வதை பியதாச கவனமாகக் கேட்டுக் கொண்டிருந்தான்.

அந்த அறையில் அவர்களைத் தவிர வேறு யாரும் இல்லை.

அவர்களுக்கு அப்போது மதிய போசன இடைவேளை.

திறந்து வைக்கப்பட்டிருந்த சாப்பாட்டுப் பெட்டிகளிலிருந்து சாப்பாடுகள் அவர்களைப் பசியோடு பார்த்துக் கொண்டிருந்தன.

"அந்தப் படம் யாருடையது என்று கேட்டதற்கு நந்தினி என்ன சொன்னாள்?" பியதாச திரும்பவும் கேட்டான்.

"குமாருடையது என்று சொன்னாள்" ரவீந்திரனின் குரலில் சோர்வு, விரக்தி இரண்டும் கலந்து இழையோடின.

"பின்னர் என்ன நடந்தது? ஒவ்வொன்றாக விபரமாகச் சொல்" பியதாச சாப்பாட்டில் கை வைக்கவில்லை.

ரவீந்திரன் எங்கோ வெறித்துப் பார்த்துக் கொண்டு சொல்ல ஆரம்பித்தான்.

"யார் இந்த குமார் என்று கேட்டேன். உங்களுக்கு ரேகா மாதிரி எனக்கு குமார் என்று சொன்னாள்"

"யார் ரேகா?" பியதாச குறுக்கிட்டான்.

"என்னுடைய மாமாவின் மகள்"

"சரி. தொடர்ந்து சொல்"

"ரேகா எனக்கு தங்கை மாதிரி என்றேன். குமார் தனக்கு அண்ணன் மாதிரி என்று சொன்னாள். நான் முதலிலேயே கோபமாக இருந்தேன். அவள் எதிர்த்துக் கதைக்கவும் எனக்குத் தாங்க முடியவில்லை. வந்த கோபத்தில் அவளை அடித்து விட்டேன்" ரவீந்திரன் நிறுத்தினான்.

சிறிது நேரம் மௌனம் நிலவியது. இருவரும் இன்னும் சாப்பிட ஆரம்பிக்கவில்லை.

"நீ அடித்ததும் அவள் என்ன செய்தாள்?" பியதாச மீண்டும் ஆரம்பித்தான்.

"அவள் அழவில்லை. இறுதியில் ஆண்களின் குணத்தை நீங்கள் காட்டிவிட்டீர்கள் என்று கத்தினாள். அதன் பிறகு படுக்கை அறைக்குப் போய் கதவை உள் பக்கமாகப் பூட்டினாள்." ரவீந்திரன் நிறுத்தினான்.

அவன் நடந்தவைகளை நினைத்துப் பார்க்கிறான் என்பதை பியதாச தெரிந்து கொண்டான்.

சிறிது நேரத்தின் பின் ரவீந்திரன் தானகவே ஆரம்பித்தான்.

"அன்றிரவு அவள் சாப்பிடவில்லை. அன்றிலிருந்து அவள் என்னுடன் கதைப்பதுமில்லை. எனக்கு என்ன செய்வதென்றே தெரியவில்லை. உடனடியாகவே என்னுடைய அப்பாவுக்கு கடிதம் எழுதிப் போட்டு விட்டேன்"

"விவாகரத்தா?" பியதாச அவசரமாக கேட்டான்.

"நான் இன்னும் அந்த முடிவுக்கு வரவில்லை. குமார் என்பவன் யார் எனக் கேட்டுத்தான் கடிதம் எழுதினேன்."

பியதாச நண்பனை பெருமையுடன் பார்த்தான். இப்படி பொறுமையாக இருக்கும் ரவீந்திரனை ஏன் நந்தினி வெறுக்கிறாள் என்று ஆச்சரியப்பட்டான்.

பியதாச ரவீந்திரன் சொன்ன எல்லாவற்றையும் மீள ஆராய்ந்தான். அதன்படி சில முடிவுகள் எடுத்தான்.

ரவீந்திரன் விரும்பாதவற்றை தெரிந்துகொண்டே அவள் அவற்றைச் செய்வதால் வேண்டுமென்றே அவள் ரவீந்திரனுக்கு வெறுப்பூட்டுகிறாள்.

ரவீந்திரனில் தான் தங்கியிருக்கவில்லை என்பதைக் காட்டவே அவனிடம் அனுமதி பெற்றுக் கொள்ளாமல் தன்னிஷ்டப்படி நடக்கிறாள்.

எல்லா ஆண்களும் ஒரே மாதிரிதான் என்று அவள் சொல்லிய தால் ஆண்களைப் பற்றிய தப்பபிப்பிராயம் ஒன்று அவளில் எப்போதோ ஏதோ ஒரு சம்பவத்தால் ஏற்பட்டிருக்கிறது.

இந்த சம்பவத்துக்கும் குமார் என்பவனுக்கும் சம்பந்தம் இருக்குமா?

பியதாச தடயம் ஒன்றை பிடித்துக் கொண்டான்.

"நந்தினியுடைய சிநேகிதியின் பெயர் என்ன?" பியதாச திடீரெனக் கேட்டதும் ரவீந்திரன் ஆச்சரியமடைந்தான்.

"சுஜாதா"

"ரவீந்திரன் நீ ஒரு உதவி செய்வாயா?"

"என்ன?"

"நான் சுஜாதாவை சந்திக்க ஏற்பாடு செய்ய வேண்டும்"

"செய்யலாம். என்ன விசயம்?"

"அதைப் பின்னர் சொல்கிறேன்" என்ற பியதாச சந்திப்புக்கான இடம், தேதி, நேரம் போன்ற விபரங்களைக் குறிப்பிட்டான்.

அதன் பின் இருவரும் சாப்பிட ஆரம்பித்தார்கள்.

## 21

மதிய உணவை முடித்துக் கொண்ட பின் மகாலிங்கம் கட்டிலுக்கு வந்து விட்டார்.

தூக்கம் வரவில்லை.

நேரே மேலே தெரியும் கூரையைப் பார்த்துக் கொண்டிருந்தார்.

விரக்தி.

ஒவ்வொரு நாட்களும் அவரை விரக்தியின் உச்சிக்கு அழைத்துப் போய்க் கொண்டிருந்தன.

கடந்த காலங்கள் மறு ஒளிபரப்பாகிக் கொண்டிருந்தன.

'நான் செய்தது தவறா?'

அம்மா இல்லாத, பிரயோசனமற்ற அப்பாவை வைத்திருக்கும் சகோதரர்களுக்காக நான் உதவி செய்ய விரும்பியது தவறா?

திருமணம் செய்து கொண்ட பின் பிறந்த வீட்டை கட்டாயம் மறக்க வேண்டுமா?

ஏன் நான் இப்படி தண்டிக்கப் படுகின்றேன்?

இல்லை. நான் தவறு செய்துதான் இருக்கின்றேன்.

சீதனம் ஒன்றை மட்டும் எதிர்பார்த்து எனது காதலைத் துற ந்தது முதல் தவறு.

திருமணம் செய்து கொண்டபின் குடும்பத்தில் முழு அக்கறை காட்டாமல் சகோதரர்கள் என்ற வட்டத்திற்குள்ளேயே சுற்றி வந்தது அடுத்த தவறு.

எனது சகோதரர்களுக்காக நான் தியாகம் செய்திருக்கின் றேனா? இல்லை.

உண்மையிலேயே எனது சகோதரர்களுக்காக வாழ வேண்டும் என்று நினைத்திருந்தால் எனக்கென்று ஒரு வாழ்க்கையை ஏற்படுத்திக் கொ ள்ளாமல் அவர்களுக்காகவே என்னை முழுக்க முழுக்க அர்ப்பணித்திருக்க வேண்டும்.

அதுதான் உண்மையான தியாகம்.

ஆனால் நான் செய்ததென்ன?

எனக்கென்று ஒரு வாழ்க்கையைத் தேடிக் கொண்டு, அதில் வந்த வருமானத்தை எனது பிறந்த வீட்டுக்கு செலவழித்திருக்கின்றேன். இது தவறல்லவா?

இதை விடவும் பெரிய தவறு செய்திருக்கின்றேன்.

பிள்ளைகளை பெற்ற பின் கூட இன்னொரு பெண்ணுடன் தொ டர்பு ஏற்படுத்திக் கொள்ள முயற்சித்தேனே.

ஆனால் இதற்கு காரணம் மனைவிதானே. வீட்டில் அவள் என்னை புறக்கணித்தாள் என்று தானே நான் இன்னொரு பெண்ணை நாடினேன்.

அப்படிப் பார்த்தால், நான் மனைவியை புறக்கணித்த போது அவள் வேறு ஆணைத் தேடிப் போகவில்லையே.

இன்னொரு பெண்ணை நான் நாடியிருக்கின்றேன் என்று தெரிந்ததும் அதே பெண்ணையே வீட்டுக்கு அழைத்து வந்து எங்கள் குடும்பத்தை நாசுக்காக அடையாளம் காட்டினாளே.

அந்த பண்புள்ள மனைவியையா நான் புறக்கணித்தேன்?

தவறுகள்.

தவறுகள்.

பல தவறுகள். அவற்றுக்கு நான் சூட்டிக் கொண்ட பெயர் தியாகம்.

இவ்வளவு நாளும் எப்படிப்பட்ட இருளில் இருந்திருக்கின்றேன்.

இவற்றுக்கெல்லாம் என்ன பிராயச்சித்தம் செய்யப் போகின்றேன்?

என் மனைவி என்னைத் தண்டிக்கட்டும்.

என்றாவது அவள் என்னை மன்னிப்பாள். அதுவரை நான் காத்திருப்பேன். காத்திருக்க வேண்டும்.

மகாலிங்கம் கண்களை துடைத்துக் கொண்டார்.

"உங்களைத் தேடி ஆக்கள் வந்திருக்கினம்" கனகேஸ்வரி உள்ளே வந்து அறிவித்துப் போட்டுப் போனாள்.

மகாலிங்கம் எழுந்து வெளியே போனார்.

கூடத்தில் விசுவநாதனும், வேலுப்பிள்ளையும் கதிரைகளில் அமர்ந்திருந்தனர்.

"ஆ. நீங்களே. கன காலத்திற்குப் பிறகு" மகாலிங்கமும் கதிரையொன்றில் உட்கார்ந்தார்.

"சுகங்கள் எப்பிடி?" போன்ற சம்பிரதாயமான பேச்சுகள் ஆரம்பமாகின.

"மருமகன் லெற்றர் போட்டவரே?" மகாலிங்கம் அக்கறையாக விசாரித்தார்.

"போட்டதாலதான் பிரச்சினையே" விசுவநாதன் சொன்னார்.

"எனக்கு விளங்கேல" புரியாமல் கேட்டார் மகாலிங்கம்.

"எங்களுக்கும் விளங்கேல. அதுதான் உங்களிட்ட வந்தனாங்கள்"

வேலுப்பிள்ளை மேலும் சுவாரசியமாக்கினர்.

மகாலிங்கத்திற்கு உண்மையிலேயே ஒன்றும் புரியவில்லை. ஆனாலும் அவர்கள் ஒரு சிக்கலுடன் வந்திருக்கிறார்கள் என்பதைப் புரிந்து கொண்டார்.

"இப்ப வந்திருக்கிற பிரச்சினை குமாராலதான்"

"குமார்" என்று சொன்னவுடனேயே மகாலிங்கத்தின் முகம் மாறி விட்டது.

"அவனுக்கும் எங்களுக்கும் எந்த தொடர்பும் இல்லையே. பிறகெப்படி பிரச்சினை வரும்? மருமகனுக்கு குமாரின்ரை விசயம் தெரிஞ்சிட்டுதோ?"

"அது தெரியாதபடியாத்தான் பிரச்சினையே" வேலுப்பிள்ளை விடுகதை விளையாட்டு விளையாடினர்.

"என்னைக் குழப்பாதையுங்கோ. விசயத்தை வடிவா விளக்கமா சொல்லுங்கோ" மகாலிங்கம் குழம்பிப் போயிருந்தார்.

"ரவி நந்தினியின்ரை சூட்கேசுக்கால குமாரின்ரை போட்டோவை எடுத்திருக்கிறான். குமார் ஆர் என்டு கேட்டதுக்கு அவள் விசர் பெட்டை தெரியாதெண்டிருக்கிறாள். அவனுக்கு வேற சந்தேகம் வந்திட்டுது. அதால தான் குமார் ஆர் என்டு கேட்டு எழுதியிருக்கிறான்" விசுவநாதன் விளக்கினர்.

அதன்பின் அங்கே மௌனம் நிலவியது. ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டிருந்தார்கள்.

வேலுப்பிள்ளை உள்ளே பார்த்து "பிள்ளை" என்று கூப்பிட்டு தண்ணி கொஞ்சம் என்று சொல்வதற்கு முன் கனகேஸ்வரி தேநீர் கொண்டுவந்தாள்.

"இப்ப என்ன செய்யலாம் என்டு நினைக்கிறியள்?" மகாலிங்கம் கேட்டார்.

"உண்மையை சொல்லி விட்டுடலாம்" வேலுப்பிள்ளை சொன்னர்.

"அதை நாங்கள் எழுதுறதை விட குமாரே எழுதிப் போடுறது நல்லது. ஏனெண்டா இனி நாங்க என்ன சொன்னாலும் அவன் நம்ப மாட்டான்" விசுவநாதன் தன்னுடைய யோசனையைத் தெரிவித்தார்.

"அவனுக்கும் எங்களுக்கும் எந்த சம்பந்தமும் இல்லையெ

ண்டிருக்கேக்க எப்பிடி நாங்கள் அவளிட்டப் போறது?" மகாலிங்கத்தின் குரலில் வெறுப்பிருந்தது.

"நீங்கள் அப்பிடிச் சொல்லக் கூடாது. இது உங்கட மகளின்ரை வாழ்க்கைப் பிரச்சினை. நீங்கள் பிடிவாதம் பிடிக்கிறதால உங்கட மகளின்ரை வாழ்க்கைதான் பாழாய் போகும்"

"வேலுப்பிள்ளை அண்ணை சொல்லுறது சரிதான். நந்தினி ஆர்? உங்கட மகள். அவளின்ரை விசயமாய் குமாரை சந்திக்கிறதுக்கு ஏன் யோசிக்க வேணும்" விசுவநாதனும் மகாலிங்கத்தை வழிக்கு கொண்டு வர முயன்றார்.

மகாலிங்கம் யோசித்துக் கொண்டிருந்தார்.

மற்றவர்கள் ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டார்கள்.

"சரி. எல்லாருமாப் போவம்" மகாலிங்கம் சம்மதித்தார்.

"நானும் வாறன்" கனகேஸ்வரியும் ஆயத்தமானாள்.

## 22

கதிரவன் கடலில் இறங்குவதற்குத் தயாராகிவிட்டான். அதனால் வானம் மஞ்சள் பூசியிருந்தது.

இந்தச் செதியைத் தெரிவிக்க வேகமாக வந்த அலைகள் கரையை அண்மிக்கையில் தயங்கி பின் அடங்கி விட்டன.

சிறுவர்கள் பாதங்களை தண்ணீரில் மிதக்க விட்டு அவை காணாமல் போகையில் தேடினார்கள்.

சுண்டல் சுடசுட விற்பனையாகிக் கொண்டிருந்தது. அன்னாசிப் பழத்தில் ஒருவர் மிளகாய் பொடி பூசிக் கொடுத்தார்.

பாம்புகள், பெட்டிகள், எல்லாம் ஆகாயத்தில் மிதந்து கொண்டிருந்தன.

இடது பக்கமிருந்த மூன்றாவது பீரங்கியருகே பியதாச காத்திருந்தான்.

அவன் கண்கள் காலிமுகத்திடலில் சுற்றுலா செய்தன.

நேரத்தைப் பார்த்துக் கொண்ட சூரியன் இன்னும் கீழே இறங்கியது.

"நீங்கள் தானே பியதாச?"

மிக அருகாமையில் கேட்ட குரலால் கவனம் சிதறி திரும்பி னன் பியதாச.

அவன் பக்கத்தில் அழகிய பெண்ணொருத்தி நின்றிருந்தாள்.

"நீங்கள் சுஜாதானே?" பியதாச கேட்டான்.

"சுஜாதா வேதான்" சிரித்தாள்.

"அப்படி உட்கார்ந்து பேசுவோமா?"

சுஜாதா சம்மதிக்க இருவரும் மணலில் உட்கார்ந்தார்கள்.

"எப்படி என்னை சரியாக அடையாளம் கண்டு பிடித்தீர்கள்?" பியதாச ஆச்சரியத்தோடு கேட்டான்.

"மூன்றாவது பீரங்கியருகில் உங்களைத் தவிர வேறு யாரும் இல்லையே"

அவளுடைய அழகும் சிரிப்பும் பியதாசவை என்னவோ செய் தது.

"நான் ஏன் உங்களை இங்கு வரும்படி சொன்னேன் என்று தெரியுமா?"

"எனக்குச் சோதிடம் தெரியாது" சுஜாதா மேலும் புன்முறு வலைகளை அன்பளித்தாள்.

பியதாச ரவீந்திரனின் குடும்பத்தில் ஏற்பட்டுள்ள பிரச்சனை யை சுருக்கமாகச் சொன்னான்.

சுஜாதா கண்களில் ஆச்சரியத்துடன் கேட்டுக் கொண்டிருந் தாள்.

ஓடிப்பிடித்து விளையாடிக் கொண்டிருந்த இரண்டு சிறுவர்கள் இவர்களை வலம் வந்த பின் திசை மாறினார்கள்.

தூரத்தில் ஒரு ஜோடி ஐஸ்கிரீம்களை வீணுக்கி கண்களால் கதைத்துக் கொண்டிருந்தார்கள்.

"அவர்கள் குடும்பத்தில் இவ்வளவு பிரச்சனைகள் இருக்கிறதா?" நம்ப முடியாமல் கேட்டாள் சுஜாதா.

பியதாச மௌனமாக இருந்தான்.

பகலவன் அரைகுறையாக கடலுக்கு வெளியே தெரிந்தான்.

பெரிய கப்பல் ஒன்று துறைமுகத்தை கண்டுபிடித்துக் கொண்டிருந்தது.

வாகனங்கள் வண்ண வெளிச்சங்களைப் பரப்பின.

"நான் ஒன்று சொன்னால் தப்பாக நினைத்துக் கொள்ள மாட்டீர்களே?" சுஜாதா கேட்டாள்.

பியதாச "இல்லை" என்றான்.

"நந்தினி தனது விருப்பப்படி உடைகள் அணிவதை ரவீந்திரன் ஏன் விரும்பவில்லை?"

"நந்தினியின் விருப்பத்தில் ரவீந்திரன் குறுக்கிடவில்லை. உடைகளில் ஒரு கட்டுப்பாடு வேண்டும் என்றுதான் வலியுறுத்தியிருக்கின்றான்"

"அது என்ன கட்டுப்பாடு? இப்போது நான் அணிந்திருக்கும் உடையில் கட்டுப்பாடு இல்லையா?"

"இப்போது நான் சொல்லப் போவதை நீங்கள் தப்பாக எடுக்கக் கூடாது. உண்மையிலேயே நீங்கள் அணிந்திருக்கும் உடைகள் எனது உணர்ச்சிகளை பாதிக்கின்றன. போட்டிருக்கும் உடைகளைப் பொறுத்தும் மரியாதை கிடைக்கிறது"

"உங்கள் மனது பாதிப்படைவதற்கு நான் என்ன செய்ய முடியும்? என்னை நீங்கள் வித்தியாசமாகப் பார்க்காமல் சாதாரணமாகவே பார்க்கலாமே. வெளி உடைகளில் ஒன்றுமேயில்லை. எல்லாவற்றிற்கும் மனம் தான் காரணம்."

"நீங்கள் சொல்வது உண்மை. எல்லாவற்றிற்கும் மனம்தான் காரணம். மனம் சடப் பொருளல்ல. உணர்ச்சிகள் இருப்பதால்தான் தூண்டலை வெளிப்படுத்துகிறது. ஒரு பொருளை முற்றாக மறைத்து விட்டால் மனம் அதைப்பற்றி சிந்திக்காது. அதே போல் முற்றாக வெளிப்படுத்தினாலும் ஆர்வம் மங்கிவிடும். ஆனால் அரைகுறையாக மறைத்தல்தான் பாரதூரமான பாதிப்பை ஏற்படுத்துகிறது."

தான் கொஞ்சம் அதிகமாக கதைத்து விட்டோமோ என்ற சந்தேகத்தில் பியதாச சுஜாதாவைப் பார்த்தான்.

பியதாசவின் வார்த்தைகளை சுஜாதா சிந்தித்துக் கொண்டிருந்தாள்.

"நீங்கள் நந்தினியின் நெருங்கிய தோழிதானே?" பியதாச

பேச்சைத் திசை திருப்பினன்.

"தோழி மட்டும் அல்ல. அவள் எங்கள் வீட்டுப் பெண் போல" சுஜாதா சொன்னள்.

"மிகவும் நல்லது. உங்களுடைய நெருக்கம்தான் இப்போது உதவப் போகிறது"

"எப்படி?"

"இவ்வளவு நாட்கள் பழகியும் நந்தினி தனது பழைய நாட்களைப் பற்றி உங்களுக்குச் சொல்லியிருக்கிறளா?"

"நந்தினியிடம் நான் கேட்கவேயில்லையே"

"இனிக் கேட்கிறீர்கள்"

"அது அநாகரிகம்" சுஜாதா மறுத்தாள்.

"அப்படி ஏன் நினைக்கிறீர்கள். இது உதவிதானே. கணவன், மனைவியை ஒன்றுபடுத்த நீங்கள் உதவக் கூடாதா?"

சுஜாதா மீண்டும் யோசித்தாள்.

"சரி. நந்தினியிடம் நான் கேட்கின்றேன். அவள் சொல்ல விரும்பாவிட்டால்...?" சுஜாதா சந்தேகத்துடன் கேட்டாள்.

"நந்தினி நிச்சயம் சொல்லுவாள். அதுவும் நீங்கள் கேட்கும் போது மறுக்க மாட்டாள். தவிர பெண்களால் ஒரு விசயத்தையும் அதிக காலம் வைத்திருக்க முடியாதென்பதையும் நான் புத்தகங்களில் படித்திருக்கிறேன்" பியதாச மெல்லிதாகச் சிரித்தான்.

"பெண்களுக்கு கிடைக்கும் மரியாதைக்கு புத்தகங்களும் ஒரு காரணம் என்பதை மறக்க முடியாது" சுஜாதா கொஞ்சமாகக் கோபப் பட்டாள்.

"இனிப் போகலாம்" இருவரும் எழுந்தார்கள்.

"ரவீந்திரனுடைய வாழ்வில் நீங்கள் ஏன் இவ்வளவு அக்கறை காட்டுகிறீர்கள்?" சுஜாதா கேட்டாள்.

"நந்தினியை உங்களுக்குத் தெரிவதற்கு முன்பிலிருந்தே எனக்கு ரவீந்திரனைத் தெரியும்"

பஸ் தரிப்பில் இருவரும் வேறுவேறு பஸ்களில் ஏறி பிரிந்து போனார்கள்.

# 23

நந்தினி சமையலறையில் அலுவலாக இருந்தாள்.

வரவேற்பறையிலிருந்த ரவீந்திரன் கையிலிருந்த கடிதத்தை மீண்டும் ஒருமுறை படித்தான்.

அன்புடன் ரவிக்கு,

சுகம் விசாரித்துக் கொள்ளுமளவிற்கு நாங்கள் இதுவரை சந்தித்துக் கொள்ளவில்லை. அதற்கு அவசியம் இப்போது ஏற்பட்டுள்ளது.

இன்று பகல் உங்கள் தந்தை என்னை வந்து சந்தித்தார். நீங்கள் அவருக்கு எழுதிய கடிதத்தையும் காட்டினார். உங்களுடைய சந்தேகத்தை தீர்க்கவே அவசரமாக இந்தக் கடிதத்தை எழுதுகிறேன்.

உங்களுடைய மனைவி நந்தினி என்னுடைய சொந்த சகோதரியேதான்.

அப்படியானால் என்னை ஏன் உங்களுக்குத் தெரியாது? திருமணவீட்டில்கூட நான் ஏன் உங்களை சந்திக்கவில்லை? நந்தினிக்கு ஒரு சகோதரன் இருப்பதை ஏன் எல்லோரும் உங்களுக்கு மறைத்தார்கள்? இப்படியான உங்கள் கேள்விகளுக்கு இந்தக் கடிதம் பதிலளிக்கும்.

எனக்கு இருபத்திஐந்து வயதாக இருக்கையில் வீட்டைவிட்டு நான் வெளியேறி திருமணமும் செய்து கொண்டேன். பிறந்த வீட்டை, ஊரை பொறுத்த வரையில் நான் ஒருகாலி. உதவாக்கரை. இதைப்பற்றியெல்லாம் நான் கவலைப்படவில்லை. ஏனென்றால் வீட்டையோ, பெற்றோரையோ நான் மதிக்கவேயில்லை. விரும்பவும் இல்லை. வீட்டிலிருந்து வெளியேறியது எனக்கு பிடித்திருந்தது. அவர்களுக்குப் பிடிக்கவில்லை. அவர்களுக்குப் பிடிக்காததைப் பற்றி எனக்கு அக்கறையில்லை.

என் மீது பெற்றோர்கள் கோபமாயிருப்பதற்கு இன்னொரு காரணம் நான் திருமணம் செய்து கொண்ட பெண் வேறு சாதியாம். நான் சாதியைத் திருமணம் செய்து கொள்ளவில்லை. ஒரு பெண்ணைத்தான் திருமணம் செய்திருக்கிறேன். எனக்கு தேவைப்பட்டது அன்புள்ள இதயமே தவிர சீதனமும், சாதியுமல்ல. உண்மையிலேயே இப்போதுதான் நான் சந்தோசமாயிருக்கின்றேன்.

இந்தச் சாதிப் பிரச்சனையால்தான் என்னைப் பற்றி உங்களிடம் தெரிவிக்காமல் மறைத்தார்கள் என்பதையும் உங்கள் அப்பாவே இன்று தெரிவித்தார். அவர்கள் பயந்ததிலும் அர்த்தம் இருக்கிறது. அழகாக புத்தகங்கள் எழுதியவர்களும், அனல் பறக்க பேசியவர்களும் தங்களுடைய சொந்த வாழ்க்கையை எப்படி அமைத்துக் கொண்டார்கள் என்பதை நான் நேராகவே பார்த்திருக்கிறேன்.

இப்போதுகூட என்னைபற்றி உங்களுக்குத் தெரிவிக்க நான் விரும்பவில்லை. ஆனால் உங்கள் மனதில் தங்கையைப்பற்றி தவறான சந்தேகம் வந்து விட்டதால்தான் இந்தக் கடிதத்தை எழுதுகிறேன்.

இந்தக் கடிதத்திலுள்ள உண்மைகளை நீங்கள் நம்ப வேண்டும் என்பதே என் விருப்பம். ஆனால் நீங்கள் நம்ப மறுத்து இன்னும் ஆதாரங்களைத் தேடினால் எதையும் உங்களுக்கு விளக்குவதில் பிரயோசனம் இல்லை என்றே நினைக்கிறேன்.

மினைரலான உடைகள் போடுவதும், ஆங்கிலம் கதைப்பதும் தான் நாகரிகம் என்று நினைக்காமல், மனைவியுடனும் நாகரிகமாகவும் பண்பாகவும் நடந்து கொள்வீர்கள் என்ற நம்பிக்கையுடன் வாழ்த்தி விடை பெறுகிறேன்.

இப்படிக்கு,
குமார்.

குமாரின் எழுத்துகள் ஒவ்வொன்றும் ரவீந்திரனின் மனதில் பதிவாகியிருந்தன.

தன்னில் நம்பிக்கையில்லாமல் குமாரைப்பற்றி மறைத்தவர்களைக் கோபித்துக் கொண்டான்.

குமாரைப்பற்றிய சந்தேகம் தீர்ந்து விட்டாலும் நந்தினி தன்னை ஏன் வெறுக்க வேண்டும் என்பது அவனுக்கு புரியவேயில்லை.

அவன் அவளை அடித்த நாளிலிருந்து அவள் அவனுடன் சரியாக கதைக்கவேயில்லை.

அவளைச் சமாதானப்படுத்த வேண்டுமென்ற நோக்கில் சமையலறையை நோக்கிப் போனான் ரவீந்திரன்.

நந்தினி குழம்பை ருசி பார்த்துக் கொண்டிருந்தாள்.

"இண்டைக்கு மாமா வீட்டை போவமே?" கதவருகே நின்றபடி கேட்டான்.

நந்தினி பதில் சொல்லாது கரண்டியால் குழம்பை துழாவி

ளன்.

ரவீந்திரன் மீண்டும் கேட்டான்.

"ரேகாவைப் பாக்கிறதுக்கோ?" நந்தினியின் கேலியில் குமாரின் கடிதமும் மறைந்து, சுள்ளென்று கோபமும் வந்தது ரவீந்திரனுக்கு.

## 24

"அப்பா வேலை செய்து கொண்டிருந்தார். அண்ணாவும், நானும் படித்துக் கொண்டிருந்தோம். அம்மா சமையல்தான்.

எனக்கு நினைவு தெரிந்த நாளிலிருந்து அப்பாவும், அம்மாவும் சந்தோசமாயிருந்து நான் பார்த்ததேயில்லை. எப்போதும் சண்டை பிடிப்பார்கள். அவர்கள் சண்டை பிடித்துக் கொள்ளாத நாளே இல்லை. சில வேளைகளில் அப்பா அம்மாவுக்கு அடித்து விடுவார். அம்மா தனியாக உட்கார்ந்து அழுது கொண்டேயிருப்பா.

தங்களுக்கிருக்கும் கோபத்தில் எனக்கும், அண்ணாவுக்கும் கூட காரணமில்லாமல் அடிப்பார்கள். நான் அழுது கொண்டிருப்பேன். ஆனல் அண்ணன் அவர்களை எதிர்த்துக் கதைத்துவிட்டு ஓடி விடுவான்.

அண்ணனுடைய நண்பர்கள் அவனை கேலி செய்வார்கள். அதிகமாக தங்களுடன் சேர்த்துக் கொள்ள மாட்டார்கள். இதனுல் அவன் எப்போதும் தனியாகத்தான் இருப்பான்.

அப்பா இன்னொரு பெண்ணை விரும்பினர் என்று அம்மா வேறு யாருடனே கதைத்துக் கொண்டிருக்கும் போது நான் ரகசியமாக கேட்டேன். இதற்குப் பிறகு எனக்கு அப்பாவைப் பிடிக்கவேயில்லை."

சொல்லிக் கொண்டிருந்ததை நந்தினி இடையில் நிறுத்தினள்.

நந்தினியும், சுஜாதாவும் கதிரேசன் கோயில் மண்டபத்தில் அருகருகாக அமர்ந்திருந்தார்கள். இருவரும் சேலை கட்டியிருந்தார்கள். இருவரும் விபூதி, சந்தனம் பூசியிருந்தார்கள்.

பூசை முடிந்து எல்லோரும் போய் விட்டதால் அவர்கள் தனியே இருந்து கதைப்பதற்கு வசதியிருந்தது.

சுஜாதா நந்தினி சொல்வதை ஆர்வமாக கேட்டுக் கொண்டிருந்தாள். தன்னிடம் நந்தினி இப்படி மனம் விட்டு கதைப்பாள் என்று அவள் எதிர்பார்க்கவேயில்லை. தன்னில் நந்தினி எத்தகைய அன்பு வைத்தி

ருக்க வேண்டும் என்று நினைத்ததில் சுஜாதா நெகிழ்ந்து போனாள்.

"நந்தினி, நீ ஏன் ரவீந்திரனுடன் வேண்டாவெறுப்பாக நடந்து கொள்கிறாய்?" சுஜாதா ஆதரவுடன் கேட்டாள்.

"அதுதான் எனக்கும் புரியவில்லை. ரவியை மட்டுமல்ல பொதுவாகவே ஆண்களைப் பார்க்கையில் எனக்கு எரிச்சல் வருகிறது. ஆத்திரம் வருகிறது. காரணம் புரியவில்லை. ரவியுடன் நான் ஏன் இப்படி நடந்து கொள்கிறேன் என்று நினைத்து எத்தனையோ நாள் அழுதிருக்கிறேன். ஆனால் மறுபடியும் ரவியைப் பார்த்ததும் ஆத்திரம் வருகிறது. அவர் செய்ய வேண்டாம் என்று சொல்வதையெல்லாம் செய்ய வேண்டும் போலிருக்கிறது. அவருக்கு கோபம் வரும் என்றும் தெரிந்தும் செய்ய தூண்டுகிறது. இது ஏன் என்று எனக்குப் புரியவில்லை."

சுஜாதா நந்தினியை விசித்திரமாகப் பார்த்தாள்.

'என்ன பெண் இவள்? நெருப்பில் கை வைத்தால் சுடும் என்று தெரிந்தும் கையை வைக்கின்றேன் என்கிறாளே. ஏன் இப்படி நடந்து கொள்கிறாள்? அவளுக்கே இது புரியவில்லை என்றால் எனக்கெப்படித் தெரியும்?

ரவி எவ்வளவு நல்ல மனிதர். நந்தினி எவ்வளவு ஆத்திரமூட்டியும் இன்னும் பொறுமையாக இருக்கிறாரே. வேறு ஆண்களாக இருந்தால் இவளை அடித்து துன்புறுத்தியிருப்பார்கள். அல்லது விவாகரத்து செய்திருப்பார்கள். வேறு பெண்களை நாடியிருப்பார்கள்.

நந்தினி ரவியைப் புரிந்து கொள்ளாமலில்லை. ஆனாலும் அவளால் சரியாக நடந்து கொள்ள முடியவில்லை. பேய் பிடித்து விட்டதா? அல்லது யாராவது இப்படித்தான் நடந்து கொள்ள வேண்டும் என்று கட்டளையிருக்கிறார்களா?'

யோசிக்க யோசிக்க சுஜாதாவுக்கு தலையே வெடித்து விடும் போலிருந்தது.

நந்தினியைப் பார்த்தாள்.

நந்தினி சத்தமில்லாமல் அழுது கொண்டிருந்தாள். கண்ணீர் கோடுகள் போட்டிருந்தது.

சுஜாதாவுக்கு நந்தினியைப் புரிந்து கொள்ள முடியவில்லை.

நல்ல முடிவு கிடைக்க வேண்டுமென்று கதிரேசனிடம் சிங்களத்தில் விண்ணப்பித்தாள்.

# 25

முகவரியைக் கண்டுபிடிப்பதில் அந்த மூவரும் சிரமப்படவில்லை. முன் கூட்டியே வருகையை தெரியப்படுத்தியிருந்ததால் காவலாளி அவர்களை அனுமதித்தான்.

பியதாச முன்னே போக ரவீந்திரனும், சுஜாதாவும் பின் சென்றார்கள்.

வரவேற்பறையிலிருந்த ஆசனங்களில் மூவரும் அமர்ந்தார்கள். தரை கூட சுத்தமாக அவர்களைப் பிரதிபலித்தது.

இயற்கை அழகுகள் பெரியளவில் சுவரில் தொங்கின.

அநேகமான இடங்கள் பூந்தொட்டிகள் வைக்கப்பட்டு பச்சையாக இருந்தன.

அந்தச் சூழ்நிலை மனதை ரம்மியமாக்கியது. இயற்கையாயிருந்தாலும், செயற்கையாயிருந்தாலும் மனதிற்கும் சூழ்நிலைக்கும் நெருங்கிய தொடர்பிருக்கிறது.

ஒரு பெண் வந்து பியதாசவின் பெயரைச் சொன்னாள்.

மூவரும் எழுந்து அவள் பின்னே போய், காட்டப்பட்ட அறைக்குள் சென்றார்கள்.

"தயவு செய்து ஆசனங்களில் அமர்ந்து கொள்ளுங்கள்"

கம்பீரமான குரலில் சுழல் கதிரையில் அமர்ந்திருந்த பெண்மணி கூறினாள்.

மூவரும் அமர்ந்தார்கள்.

அவர்களுக்கெதிரே அமர்ந்திருந்த அந்தப் பெண்ணுக்கு வயது நாற்பதுக்கு மேலிருக்கலாம். வெண்ணிற சேலை அணிந்திருந்தாள். தலையில் ஆங்காங்கே வெள்ளை மயிர்கள் பளிங்கியிருந்தன. கண்ணாடி போட்டிருக்கவில்லை.

அவள் முன்னாலிருந்த மேசையில் புத்தகங்கள், பேனைக்கள், கடுதாசிகள் நேர்த்தியாக அடுக்கி வைக்கப்பட்டிருந்தன.

பியதாச ரவீந்திரனையும், சுஜாதாவையும் அந்தப் பெண்ணுக்கு அறிமுகம் செய்தான்.

"உங்களுடைய பிரச்சனையைத் தெரிவிக்கலாம்" பெண்மணி அறிவித்தாள்.

ரவீந்திரன் எல்லா விபரங்களையும் மறைக்காமல் சொன்னான். சுஜாதா நந்தினி தன்னிடம் தெரிவித்தவற்றைச் சொன்னாள்.

இருவரும் சொல்லி முடித்தபின் அந்தப் பெண் கம்பீரமான குரலில் கதைக்கலானாள்.

"இப்படியான சில சந்தர்ப்பங்களை நான் சந்தித்திருக்கின்றேன். இது தீர்த்துக் கொள்ள முடியாத பிரச்சனையல்ல. இப்படியான நிகழ்வுகள் இனியும் தொடராமல் இருப்பதற்காக விபரமாகவே உங்களுடன் கதைக்கப் போகிறேன்.

குழந்தை பிறந்தவுடன் பேச ஆரம்பிப்பதில்லை. நடக்க ஆரம்பிப்பதில்லை. உடைகளை அணிய முயற்சிப்பதில்லை.

குழந்தையின் பெற்றோர்கள் தான் அந்தக் குழந்தையின் முதல் ஆசிரியர்கள். தனக்கு புதிதான எல்லாவற்றையும் குழந்தை தன் பெற்றோர்களிடமிருந்துதான் படித்துக் கொள்ளுகிறது.

எந்நேரமும் தனக்கு அருகே இருந்து தன்னை கவனித்துக் கொள்ளும் பெற்றோரை குழந்தையும் நன்கு கவனித்துக் கொள்கிறது. அவர்களின் நடவடிக்கைகளை தெரிந்து கொள்ள முயற்சிக்கிறது. புரிந்து கொள்ள முயற்சிக்கிறது. அவற்றிற்கு அர்த்தம் கண்டு கொள்ள முயல்கிறது.

கருவிலிருந்து சிசுவான குழந்தைக்கு எல்லாமே புதிதுதான். பிறந்தவுடன் வெள்ளைத்தாளாக இருக்கும் அதன் மனதில் பெற்றோர்கள், பராமரிப்பவர்களின் செயல்கள், நடவடிக்கைகள்தான் எழுத்துகளாக பதிந்து நிலைத்து விடுகின்றன. குழந்தை வளர்கையில் இந்த எழுத்துகளை படித்தே தன்னை அமைத்துக் கொள்கிறது.

குழந்தை எல்லாவற்றையும் ஆர்வமாகத் தெரிந்து கொள்ள முயற்சிக்கும் நேரம்தான் பெற்றோர்கள் அவதானமாக நடந்து கொள்ள வேண்டும். அவர்கள் செய்யும் மிகச் சிறிய தவறுகள் கூட எல்லாவற்றையும் உன்னிப்பாக அவதானித்துக் கொண்டிருக்கும் குழந்தையின் மனதில் ஆழமாகப் பதிந்து விடும். மனதில் பதிந்தவைதான் குழந்தையின் பிற்கால வாழ்க்கையை நிர்ணயிக்கின்றன."

பியதாச, ரவீந்திரன், சுஜாதா மூவரும் அமைதியாக கேட்டுக் கொண்டிருந்தார்கள்.

சுவரில் மாட்டப்பட்டிருந்த கடிகாரச் சத்தம் கூட அவர்

களை ஈர்க்கவில்லை.

"உங்களுடைய பிரச்சனையும் இந்த அடிப்படையைக் கொண்டதுதான்.

சிறு வயது முதலே பெற்றோர்கள் சண்டை பிடித்துக் கொள்வதை நந்தினியும், குமாரும் அவதானித்துக் கொண்டிருந்திருக்கிறார்கள். அடிக்கடி நிகழும் இந்த நிகழ்வு அவர்கள் இருவரிலும் வித்தியாசமான பாதிப்புகளை ஏற்படுத்தியிருக்கிறது.

வீட்டை விட்டு வெளியே போவதற்கான சந்தர்ப்பங்கள் நந்தினியை விட குமாருக்கு அதிகம். நண்பர்களும் அதிகம். பெற்றோர்களின் சண்டையால் நண்பர்கள் இவனைக் கேலி செய்வதாலும், தங்களுடன் சேர்த்துக் கொள்ளாததினாலும் இவன் தனியாகிப் போனான். சிறு வயதில் சந்தோசம் தரக்கூடியவை பெற்றோரின் அரவணைப்பும், விளையாட்டும், நண்பர்களுமே. இந்தச் சந்தோசங்கள் பறிக்கப்பட்டது தன்னுடைய பெற்றோர்களால் என்ற உணர்வினால் அவர்களை எதிரியாகக் கணித்தான். சந்தோசத்தைக் கெடுப்பவர்களை யாரும் விரும்பமாட்டார்கள். இதற்கு குமார் விதிவிலக்கல்ல . அவன் வளர, வளர ஊரவர்கள் அவனிடம் கேட்கும் கேள்விகளும் வித்தியாசப்பட்டன. தனக்கேற்படும் அவமானங்களாகவே அந்தக் கேள்விகளை அவன் நினைத்தான். இதற்கும் காரணம் தன் பெற்றோர்கள் தான் என்பதால் அவர்கள் மீதிருந்த அவன் வெறுப்பு இன்னும் அதிகரித்தது. இதனாலேயே அவன் பெற்றோர்களை மதிக்கவில்லை. தன்னிச்சையாக வளர்ந்தான். அவனில் ஏற்படும் மாற்றங்களை பெற்றோர் கண்டு கொள்ளவில்லை. இதனால் சுலபமாக அவன் அவர்களிலிருந்து விலகி விட்டான். தன்னிடம் அன்பு காட்டக் கூடிய பெண் கிடைத்ததும் வீட்டை விட்டே ஓடி விட்டான்.

நீங்கள் கேட்கலாம் தங்களுக்குள் உள்ள பிரச்சனைகளை தீர்த்துக் கொள்ள பெற்றோர்கள் மோதிக் கொள்கையில், அதனால் பிள்ளைகள் பாதிப்படைந்தால் அவர்கள் எப்படி பொறுப்பாளியாவார்கள் என்று. கணவன், மனைவி என்ற முறையில் அவர்கள் சரியாக நடந்து கொண்டாலும் உண்மையான பெற்றோர்களாக அவர்கள் நடந்து கொள்ளவில்லை. பிள்ளைகளை பாதிக்காமல் தமது பிரச்சனைகளை தீர்த்திருக்கலாம். தங்கள் பிள்ளைகளில் உண்மையான அக்கறை அவர்களுக்கு இருந்திருந்தால் தங்களுக்குள் உள்ள பிரச்சனைகளை அவர்கள் எப்போதோ சுமுகமாக தீர்த்திருக்கலாம். ஆனால் அவர்கள் ஒருவரை ஒருவர் பழிவாங்குவதிலேயே கண்ணாக இருந்தார்களே தவிர பிள்ளைகளைக் கவனிக்கவேயில்லை.

நந்தினியின் பாதிப்பு வேறு விதமானது. அவள் அநேக நேரங்கள் வீட்டிலேயே இருப்பவள். பெண் என்ற ரீதியில் பெற்றோர்களின்

சண்டை அவளுள் வித்தியாசமான பாதிப்பை ஏற்படுத்தியிருக்கிறது. அப்பா அடிப்பதும் அதனால் அம்மா அழுவதும் ஆண்கள் பொல்லாதவர்கள், பெண்கள் பலவீனமானவர்கள் என்ற எண்ணத்தை அவளுள் வளர்த்து விட்டிருக்கிறது.

தன்னுடைய அப்பா இன்னொரு பெண்ணுடன் தொடர்பேற்படுத்திக் கொள்ள முயற்சித்தார் என்று தன்னுடைய அம்மாவின் வாயாலேயே கேட்டது அவளைப் பெரிதும் பாதித்திருக்கிறது. ஆண்கள் எல்லோரும் பெண்களை ஏமாற்றுபவர்கள், உடலை மட்டுமே விரும்புவபர்கள் என்ற எண்ணம் அவளில் வேரூன்றி வளர்ந்து விட்டது. அதுவே அவளுக்கு மனநோயாகி விட்டது"

'நந்தினிக்கு மனநோயா?' ரவீந்திரன் கலங்கினான்.

"ரவீந்திரனையும் தனது தந்தையைப் போலவே எண்ணியிருக்கிறாள். அம்மா பலவீனமாக இருந்த படியால்தான் அப்பா அவளை அடிப்பதுடன் ஏமாற்றியுமிருக்கிறார் என்பதனால் தான் பலவீனமானவள் அல்ல என்பதை நிரூபிக்கவே ரவீந்திரன் சொல்வதற்கெல்லாம் எதிராக நடந்திருக்கிறாள். தான் ரவீந்திரனுக்கு கட்டுப்பட்டவள் அல்ல என்பதை தெரிவிக்கவே தனது விருப்பப்படி நடந்திருக்கிறாள். ரவீந்திரனையும், ரேகாவையும் சந்தேகத்துடன் பார்த்திருக்கிறாள்."

"அப்படியானால் அவளை இனி மாற்றவே முடியாதா?" ரவீந்திரன் உடைந்து போன குரலில் கேட்டான்.

"ஏன் முடியாது. அதுவும் மாற விரும்புவபர்களை மாற்றுவதா சிரமம்? நந்தினி தன் கதையை சுஜாதாவிடம் சொல்லி அழுததிலிருந்தே அவளை நான் புரிந்து கொண்டேன். ரவீந்திரனின் பொறுமையும், பரிவும் அவளைக் கவர்ந்திருக்கின்றனவே தவிர அவள் கொண்டிருந்த எண்ணங்களை மாற்றவில்லை. ஆனாலும் அவள் அந்த எண்ணங்களிலிருந்து விலக முயற்சிக்கிறாள் என்று தெரிகிறது. ஆகவே அவளை நிச்சயம் மாற்ற முடியும்"

அந்த மன நோய் சிகிச்சை நிலையக்கட்டிடத்தை விட்டு வெளியே வருகையில் பியதாச கேட்டான் "என்ன செய்யப் போகிறாய்?"

"நாளையே நந்தினியை இங்கு சிகிச்சைக்காக அனுமதிக்கப் போகிறேன். அவள் குணமாகி வரும் வரை நான் காத்திருப்பேன்"

ரவீந்திரனின் குரலில் நம்பிக்கை இருந்தது.

---

கதையில் வந்துள்ள பெயர்கள் கற்பனையே.

# உங்கள் பார்வையில்

தங்களின் குறுநாவல் நிச்சயம் மனித உணர்வுடன் படிக்கும் ஒவ்வொருவருடைய கண்களையும் அகலத் திறக்கும் என்பதில் சந்தேகமேயில்லை. நமது சமுதாயக் குறைபாடுகளை ஆயுதமேந்தி நீக்குவதை விட பேறு முறையிலும் நீக்கலாம் என்பதை இந் நாவல் மூலம் உணர முடிகின்றது. ஆண்டவனின் படைப்பில் பேதம் இல்லை. ஆண்டவனைப் படைக்க முயலும் சுயநலவாதிகளின் வகுப்பு வாதங்களே இன்று சமூகத்தில் படர்ந்து கொண்டிருக்கின்றன. இவ்வாறான சீர் கேடுகள் துப்பாக்கிமுனையில் திடீரென மாறிவிடாது. நிச்சயமாக இது போன்ற நாவல்களுக்கு உலகில் எந்த ஆயுதமும் இணையாகிவிட முடியாது. நமது சமூகத்தின் குறைபாடுகளை இவ்வாறு நாவல்கள் மூலம் மாற்றியமைக்க தாங்கள் மேற்கொண்ட முயற்சிக்கு எனது பாராட்டுதல்கள்.

மேற்கு ஜேர்மனி இ. பரிமளராஜா

இதுவரை மேற்கில் வெளிவந்த நாவல்(தமிழ் மூலம்)களை விட அமைப்பில் ஒரு தனித்துவம், பக்கங்களிற் துப்பரவு, எழுத்துகளை நெருக்கி அடுக்காமல் மூச்சுவிட இடைவெளியுள்ள தன்மைகளோடு தட்டச்சு எழுத்துகள்....

கதையின் கருவை கருத்துப் படம் எளிதாக்கவில்லை என்ற போதும் ஓவியர் ரமணியின் கை வண்ணம் சோடை போகாததுதானே.

கலாவின் தட்டெழுத்துப்பணி ஒன்றிரண்டு (புறக்கணிக்கத்தக்க) தவறுகளோடு போற்றக் கூடியதாயுள்ளது.

அத்தியாயங்களின் ஆரம்பம் கவிதை வரிகளைக் கொண்டு அடியெடுக்கப்பட்டிருந்தமையாலும் இது வித்தியாசப்பட்டிருந்தது. நான்காம் அதிகாரத்திற்குரிய கவிதை நன்றாகவே இருந்தது.

கதையில் சரியான தீர்வு எதுவும் முன் வைக்கப்பட்டிருக்கவில்லை. சாதி அமைப்பின் ஆரம்பம் பிரபுத்துவ-உற்பத்தி உறவுகளுடன் தான் ஆரம்பமாகிறது என்ற சரியான கருத்து வைக்கப்பட்டிருந்த போதிலும், உற்பத்தி உறவுகளில் மாற்றத்துடன் தான் முழுமையாக அற்றுப் போகும் என்ற சரியான கருத்தையும் கொடுக்கும் பணியும் அவசியமல்லவா?

கதை எழுதுவது பற்றிய சுகுமார்-ரவி சம்பாஷணையில் தன்னுடைய நாவலைக் கட்டுரைப் பாணியென யாராவது சொல்லிவிடு

வார்களோ என்ற தாழ்வுச் சிந்தனையோடு அமைத்திருப்பது போல் எண்ணத் தோன்றினாலும் அந்தப் பயம் பார்த்திபனுக்கு வேண்டாம் எனச் சொல்லத் தோன்றுகிறது.

கடந்த படைப்புகளின் நேர் எதிர் அம்சங்களை அனுபவமாக்கி மேலும் நல்ல படைப்புகளைத் தர வேண்டுமென பார்த்திபனைக் கேட்டுக் கொள்கிறேன்.

ஜினி லோகன்

மேற்கு ஜேர்மனி (அறுவை ஆசிரியர்)

(இந்த விமர்சனம் 'அறுவை' வெளியீட்டில் பிரசுரிக்கப்பட்டதின் ஒரு பகுதியாகும்)

"தாங்களாகவே ஒரு வட்டத்தைப் போட்டுக் கொண்டு அதற்குள் தாங்களாகவே ஒரு உலகத்தை அமைத்துக் கொண்டுவிடுகிறார்கள்" என மனித மனதின் வித்தியாசத்தை கோடிட்டு காட்டி விட்டீர். மனிதன் தன் தாய் நாட்டுக்கு ஆற்றும் சேவையையும் தெளிவாகப் படம் பிடித்து விட்டீர். மனிதன் மனிதனுக்கு உலவ தெளிவு கொண்ட, விறுவிறுப்பான, கூரான ஆணி கொண்ட எழுத்துகள் மேலும் தேவை. ஒரு துப்பாக்கி ஒரு உடலையோ அல்லது ஒரு சில உடல்களையோ பொசுக்க வல்லது. அதனால் உள்ளத்தின் எண்ணங்களைப் பொசுக்க முடியாது. அடக்கித்தான் வைக்க முடியும். ஆனால் கூரான ஆணி கொண்ட எழுத்துகள் உள்ளத்தின் தீய எண்ணங்களை பொசுக்கவும், மாற்றவும் அபார சக்தி படைத்தவை. தங்களின் மாற்றமிகு எழுத்துகள் தொடர எம் வாழ்த்துகள்.

மேற்கு ஜேர்மனி சி. யேம்ஸ் அல்ஸிரன்

கதை உயிரோட்டமாக அமைந்திருந்தது. சாதிக் கொடுமைகளை மிக இலகுவாக விளங்க வைத்திருக்கின்றீர். சில இடங்களில் கண்கள் பனிக்கின்றன. இந் நாவல் சமகாலப் பிரச்சினைகளுடன் ஒட்டி எழுதப்பட்டிருப்பது வரவேற்கத்தக்க விடயம். கடைசிப்பக்கம் தெளிவில்லை. சொல்ல முற்பட்ட விடயம் குறைக்கப்பட்டு விட்டதால் வந்த சிக்கல் போல் தெரிகிறது. சாதிக் கொடுமைகளை வெளிக் கொண்டுவருவதற்காக எழுதப்பட்ட நாவலின் முடிவு இயக்க அராஜகங்களில் போய் முடிந்தது நாவல் முற்றுப் பெறாதது போல் காணப்படுகிறது.

பிரான்ஸ் எஸ். மனோகரன்

தங்களின் குறு நாவல் என் உள்ளத்தை கொள்ளை கொண்டது. தமிழ் மக்களிடையேயும், போராளிகளிடையேயும் உள்ள பேதங்களை உண்மையில் தெளிவு படுத்தியிருக்கின்றீர்கள். இது போன்ற இன்னும் பல ஆக்கங்களை ஆவலுடன் எதிர்பார்க்கின்றேன்.

மேற்கு ஜேர்மனி

ம. அமலதாஸ்

நீண்ட நாட்களின் பின் ஒரு நல்ல கதையை வாசித்தேன் என்ற சந்தோசம். வாழ்க்கையில் நடப்பவைகளை அப்படியே படம் பிடித்துவிட்டீர்கள். எதிர்பார்க்கிறதையும் விட பேசு வலியது. சாதிக் கொடுமையால் அவலமும் கதையாய் தொடங்கி சாதிக் கொடுமைக்கு சாவுமணி கட்டுமாப் போல் முடியவில்லை என்பதுதான் என் கவலை. உங்கள் எழுத்தாற்றல் தொடர எனது மனமார்ந்த வாழ்த்துகள்.

இத்தாலி

ஆர். சன்
(உலகம் ஆசிரியர்)

விந்தியாசப்படும்
வித்தியாசங்கள்
விறுவிறுப்பை
விளக்கமாக
எம் மனதில்
பதித்தது.

பார்ப்போர்
கேட்போர்
பக்குவமாக
விளங்கும்
அழகு நடையில்
தங்கள் எழுத்தாணி
பவனி வந்துள்ளது.

சாதிக்குழியில்
சாதி வெறியர்களால்
சாமான்யமாக தள்ளப்
பட்ட
அந்த
உள்ளங்களை
தைரியமாகவே
ஆறுதல் படுத்தியுள்ளது.

தங்கள்
பேசு
தவறுமல்
தடங்காமல்
தாள்களை நிரப்பட்டுமே
நிரம்பிய
தாள்களை
நிச்சயம்
நாங்கள் எதிர்பார்ப்
போம்
வரவேற்போம்

மேற்கு ஜேர்மனி

திரு. திருமதி கு. சிவசோதி

## பார்த்திபனின்

- நிஜங்கள்
- ஜனனம்
- வித்தியாசப்படும் வித்தியாசங்கள்

ஆகிய 3 புத்தகங்களும் கீழேயுள்ள முகவரியில் விற்பனையாகின்றன.

தனிப் பிரதி 3 டொச் மார்க்.

## தென்னாசிய நிறுவனத்தின்


## தமிழ் செய்திக்குறிப்பு

இலங்கை செய்திப் பத்திரிகையிலிருந்து தொகுக்கப்பட்ட செய்திகளுடன் மேற்கு ஜேர்மனி அரசியல் தஞ்சம் பற்றிய விபரங்களையும் உள்ளடக்கி மாதம் இருமுறை வெளியாகிறது.

சந்தா விபரம்: 6 மாதங்கள் - D.M.18
1 வருடம் - D.M.35

முகவரி:


SÜD ASIEN BÜRO
KIEFERN STR. 45
5600 WUPPERTAL - 2, W.GERMANY.




# வித்தியாசப்படும் வித்தியாசங்கள்

வெளியீடு - 3





# SÜDASIEN BÜRO

KIEFERN STR. 45
5600 WUPPERTAL · 2
WEST GERMANY.

R. Pathmanaba Iyer
27-B, High Street,
Plaistow
London E13 0AD